DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H Selvanayagam Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com



25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1310
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday May 14, 2021




# ஒன்றாரியோ மாணவர்கள் சிறிது காலத்திற்கு இணையவழி ஊடாக தங்கள் கல்வியைத் தொடர்வார்கள் என்கிறார் மாகாண முதல்வர் டக் போர்ட்

ஒன்றாரியோ மாகாணத்தில் "வீட்டிலேயே தங்கியிருங்கள்" என்ற முடக்கத்திற்கான அறிவிப்பை நேற்று வியாழக்கிழமை மாலை இன்னும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் அறிவிப்பை விடுத்த ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். அப்போது மிகவும் முக்கியமான கருத்தாக, மாணவர்கள் இந்த முடக்கம் தொடர்பான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதால், சிறிது காலத்திற்கு இணையவழி ஊடாக தங்கள் கல்வியைத் தொடரலாம் என்று அறிவித்தார். *(உள்ளே தொடர்ச்சி 7ம் பக்கத்தில்)*

# வெளிநாடு வாழ் தமிழர்களுக்கான தனி அமைச்சகத்தை உருவாக்கியுள்ள தமிழக முதல்வரை பாராட்டும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளை



தமிழகத்தின் முதல்வராக தான் பதவியேற்றவுடன் அமைக்கபெற்ற அமைச்சரவையில் வெளிநாடு வாழ் தமிழர்களுக்கான தனியான அமைச்சு ஒன்றை உருவாக்கி, அதனுடாக உலகெங்கும் வாழும் தமிழ் மக்களோடு இணைந்து பணியாற்றவும், அவர்கள் நலன்களைப் பேணவும் ஆர்வம் கொண்டவராக விளங்கும் செயற்திறன் கொண்ட மரியாதைக்குரிய மு.க. ஸ்டாலின் அவர்களே! தங்களைப் பாராட்டுவதில் உலகத் தமிழர்கள் சார்பில் நாம் பெருமையடைகின்றோம்.

இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடா கிளை,இயக்கத்தின் வட அமெரிக்க ஒன்றியம், இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் சார்பாக எழுதப்பெற்ற கடிதம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தமிழகத்தின் புதிய முதல்வராக தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள மரியாதைக்குரிய மு. க. ஸ்டாலின் அவர்களே, தாங்கள் முதல்வராக பதவியேற்பதற்கு முன்பாகவே தங்கள் பணிகளை ஆரம்பித்துவிட்டீர்கள் என்பதை மக்கள் அறிவார்கள். அனைவருமே எதிர்பாராத வகையில் தங்கள் பணிகளை தொடர்ந்து சிறப்பாக ஆற்றிவருகின்றீர்கள் தங்கள் தொடர் நடவடிக்கைகளையும், அவற்றின் வேகத்தையும், அடிக்கடி தாங்கள் அதிகாரபூர்வமாக உச்சரிக்கும் அழகு தமிழ் மிதந்து வரும் உத்தரவுகளையும் கண்டும் கேட்டும் உலகத் தமிழர்கள் உற்சாகத்தில் மூழ்கியுள்ளார்கள்.

இதற்கு மேலாக மரியாதைக்குரிய மு. க. ஸ்டாலின் அவர்களே! தாங்கள் பதவியேற்பதற்கு முன்னராக கனடாவின் ரொரன்ரோ பல்கலைக் கழகத்தில் அமையவுள்ள 'தமிழ் இருக்கை' நிதிக்காக தி.மு.க சார்பில் பத்து இலட்சம் ரூபாய்களை அன்பளிப்புச் செய்ததன் மூலம், உலகத் தமிழர்களோடு கைகோர்த்து பயணிக்க விரும்புகின்றேன் என்ற தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினீர்கள். தொடர்ந்து வெளிநாடு வாழ் தமிழர்களுக்காக புதிய அமைச்சகத்தை உருவாக்கியதன் மூலம், அனைத்து தரப்பினரையும் இணைத்துக் கொண்டு தங்கள் ஆட்சிப் பயணத்தை ஆரம்பித்துள்ளமை எங்களுக்கு உற்சாகத்தை தருகின்றது. தங்களது ஒப்பற்ற தலைமைத்துவத்தின் கீழ், தமிழகத்தில் கொரோனா நோயின் தாக்கம் அங்கு தணிந்திடவும் தமிழகம் எழுச்சி பெற்று திளைத்திடவும் நாம் பிரார்த்திக்கின்றோம்.

மேற்படி கடிதத்தில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அமெரிக்க ஒன்றியத்தின் தலைவர் திரு சிவா கணபதிப்பிள்ளை, இயக்கத்தின் கனடாக் கிளையின் தலைவர் ஆர். என். லோகேந்திரலிங்கம், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் திரு. துரை கணேசலிங்கம் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

Carefirst

# கோவிட் -19
## POP-UP சோதனை

புதிய நேர அட்டவணை

உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால், அல்லது நீங்கள் COVID-19 உடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், தயவுசெய்து ஒரு சந்திப்பை பதிவு செய்து சோதனை செய்யுங்கள்.

எல்லாம் வரவேற்கத்தக்கது, வயது வரம்பு இல்லை. உங்கள் OHIP சுகாதார அட்டையை கொண்டு வாருங்கள். உங்களிடம் OHIP அட்டை இல்லையென்றால், தயவுசெய்து 1 துண்டு ஐடியைக் கொண்டு வாருங்கள்.

* தயவுசெய்து கவனிக்கவும், சர்வதேச பயண அனுமதிக்கு COVID-19 சோதனை கோரும் நபர்கள் பொதுவில் நிதியளிக்கப்பட்ட COVID-19 சோதனைக்கு தகுதியற்றவர்கள்

**Carefirst One-Stop Multi-Services Centre**
300 Silver Star Blvd, Scarborough ON M1V 0G2 (Midland & McNicoll)
9:30 a.m. - 2:30 p.m.

**YMCA**
101 YMCA Blvd, Markham ON L6G 0A1 (Kennedy & Hwy 407)
9:30 a.m. - 2:30 p.m.

**Markham Chinese Presbyterian Church**
2250 Denison St, Markham ON L3S 1E9 (McCowan & Denison)
9:30 a.m. - 2:30 p.m.

**Islamic Society of Markham (நியமனம் மூலம் மட்டுமே)**
2900 Denison Street, Markham, ON L3S 4J8 (Denison & Middlefield)
9:30 a.m. - 2:30 p.m.

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்
**www.carefirstontario.ca**
Walk-In ஆனால் காத்திருப்பு நேரம் மாறுபடலாம்

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் **www.carefirstontario.ca** அல்லது அழைக்கவும் **416-646-5108**

**உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association**

Carefirst Family Health Team
Health for All Family Health Team
Islamic Society of Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
YMCA of Greater Toronto

Updated on April 5, 2021

Carefirst

# தென்கிழக்கு மார்க்கம் பகுதிக்கு கோவிட் - 19 சம்பந்தமான அதிமுக்கியத்துவமான சமூகச் செயற்பாடுகள்

நீங்கள் கோவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்டிருந்து, உங்களுக்குச் சமூக ஆதரவு தேவைப்பட்டால் எங்களை அழையுங்கள்.
**Carefirst இனது சமூக ஆதரவு சேவைகள் உள்வாங்கல் தொடர்பு எண்:**
**416 646 5108** (திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, முற்பகல் **9. 00** மணியிலிருந்து பிற்பகல் **5. 00** மணிவரை)

## தடுப்பூசிகள் எம்மை தொற்று நோய்களில் இருந்து பாதுகாக்க உதவுகிறது.

யோர்க் நகரத்தில் உங்கள் கோவிட் 19 தடுப்பூசிகளுக்கான முன்பதிவினை மேற்கொள்ள http://york.ca/covid19vaccine என்ற இணையத்தை அணுகுங்கள்

உங்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான முன்பதிவினை மேற்கொள்ள உதவி தேவைப்பட்டால் கீழே தரப்பட்டுள்ள கிளினிக்குகளின் தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

- **Aaniin Community Centre**
  1-877-464-9675
- **Cornell Community Centre**
  1-833-343-3900

நீங்கள் கோவிட் 19 தடுப்பூசிக்கு தகுதியுடையவரா என அறிய அழையுங்கள் 1-877-463-3675. உங்களுக்கு தடுப்பூசி ஏற்புடையதா என அறிந்து கொள்ள உங்கள் குடும்ப மருத்துவரை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளுங்கள்

## ஏனைய வளங்கள்:

**ஒன்ராரியோ தொலைபேசிச் சுகாதார சேவை உங்களுக்கு நோய்க்குரிய அறிகுறிகள்** காணப்பட்டால் அழைக்க வேண்டியது
Tel: 1-866-797-0000

**ஒன்ராரியோ 211 / சமூகம் மற்றும் சமூக சேவைகள் உதவித் தொடர்பு:**
211ontario.ca

**யோர்க் பிராந்திய கோவிட் - 19 தன்னார்வத் தனிமைப்படுத்தல் நிலையம்**
York Region COVID-19 Voluntary Isolation Centre
1-877-464-9675
york.ca/isolationcentre

**யோர்க் பிராந்தியப் பொதுச் சுகாதாரப் பிரிவு**
1-800-361-5653

**Carefirst முதியோர், சமூக சேவை இணையம் மற்றும் கீழ்வரும் சேவைப் பங்காளர்களினால் இது எடுத்துவரப்படுகிறது:**

Carefirst Family Health Team
Centre for Immigrant and Community Services
Community & Home Assistance to Seniors (CHATS)
City of Markham
EYRND Ontario Health Team
Health Common Solutions
Health for All Family Health Team
Hong Fook Mental Health Association
Islamic Society of Markham - Jam'a Masjid Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
Markham Wesley Centre
Social Services Network
Tamil Civic Action
The Cross-cultural Community Services Association
YMCA of Greater Toronto (Markham)
York Region Community and Health Services
York Region Public Health
105 Gibson Centre
360° Kids Support Services

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# முள்ளிவாய்க்கால் தூபி ஒன்று தான். ஆனால் அங்கு உலாவும் ஆத்மாக்கள் ஆயிரமாயிரம் அல்லவா?

முள்ளிவாய்க்காயின் முடிவு இப்படி ஆகும் என்று எண்ணியிருக்காத எத்தனை ஆயிரம் ஆன்மாக்கள் இன்னும் உலாவி வரும் புனித பூமி அது. ஆண்டுக்கு ஒரு தடவை அவர்களின் நினைவு தினம் அனுஸ்டிக்கப்பெற்றாலும், நாளாந்தம் நம் நினைவில் நின்று நிலைப்பவர்கள் அந்த ஆன்மாக்குரியவர்கள் என்பதை ஆட்சிக் கரங்களின் சொந்தக் காரர்களுக்கு புரியவில்லை போலும். காடுகளின் மத்தியில் அந்த ஆன்மாக்களின் விடுதலையை நோக்கிய தவ வாழ்வு தொடர்ந்தாலும், உலகத்தையே தங்கள் கைளுக்குள் வைத்திருந்த விண்ணர்கள் அவர்கள். கொழும்பில் உள்ள ஆட்சி அதிகாரம் உள்ளவர்களால் பெற்றுவிட முடியாத பல கருவிகளை தம் வசத்தே வைத்திருந்து காலம் வரும் வரையில் கண்விழித்து காத்திருந்தவர்கள் அவர்கள்.

வீரத்தால் திளைத்தவர்கள், விடுதலையின் வேட்கையினால் உறுதி பெற்றவர்கள், அரசியல் ஆற்றல் கொண்ட அறிவுத் திறன் படைத்தவர்கள், முப்படை கொண்ட சிறு நாட்டை முழுமையாக காக்கும் வகையில் கால் நோக காவல் பரிந்தவர்கள், ஆண், பெண் போராளிகள், கலைத்துவமும் கனிவும் கொண்டு கடுமையாக உழைத்தவர்கள, விவசாயிகள், தொழிலாளிகள், அன்னையர்கள் தந்தையர்கள், காலிழந்தோர், கையிழந்தோர், அப்பாவிக் குழந்தைகள், கர்ப்பிணிகள். இவ்வாறு எத்தனை வகையான நம் உறவுகள் அங்கு இறுதிவரை தங்கள் வாழ்வை நகர்த்திக்கொண்டார்கள்.
சதித்திட்டம் தீட்டி, உலகமே அந்த வன்னி மண்ணை ஆக்கிரமித்து நிலத்திலும் ஆகாயத்திலும் வலம் வந்து வஞ்சகம் தீர்க்கும் மனதோடு, சுதந்திரத்தின் விளை நிலமான அந்த மண்ணை நிர்மூலமாக்கினரே.
இரத்தமும் சதைகளுமாய் எங்கும் சிதறிக் கிடந்த தங்கள் உறவுகளின் உடல்களை கண்டும் கதறியும், மனதைக் கல்லாக்கிய கொடியவர்களின் கரங்களுக்குள் அகப்பட்ட எஞ்சியோர் அடைந்த இன்னல்கள் ஏராளம் ஏராளம்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் எத்தனை கதைகள் எழுந்து வர துடிக்கின்றன. கவிதைகளால் அங்கு நிகழ்ந்த படுகொலைளின் கொடுமைகளை பாடக் கேட்டு பதறுகின்றோம்.
ஆண்டுக்கு ஒரு தடவை வரும் அந்த புனிதர்களின் நினைவு நாளில் ஒரேயொரு தூபிக்கு முன்பாக நின்று துயர் பகிரும் சந்தர்ப்பம் எம்மிடமிருந்து மீண்டும் மீண்டும் பறிக்கப்படுகின்றது.

மரணித்தவர்களின் நினைவுத் தூபியை உடைப்பதென்பது அநாகரிகத்தின் உச்சக் கட்டம். அன்று உலகின் பல நாடுகளுக்குச் சொந்தமான இராணுவக் கொடியோர் அழித்த அந்த ஆன்மாக்களுக்கு மரியாதை செலுத்த ஆட்சி மொழி பேசும் இராணுவமும் பொலிஸும் அந்த இடத்தில் தங்கியிருந்து ஆயுதங்களைக் காட்டி எம் மக்களை அச்சுறுத்துகின்றன.
அநீதிகளுக்கெல்லாம் ஆதி மூலமாய் விளங்கும் முள்ளிவாய்க்கால் தூபியை அந்த மண்ணிற்கு சென்று வணங்கிட முடியாத இந்த நாட்கள் மேலும் எம் மனங்களை உறுதியாக்க வேண்டும்.

## முள்ளிவாய்க்காலில் நினைவுத்தூபி சேதமாக்கப்பட்டமை குறித்து கனடாவின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி கண்டனம்



முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் உள்ள நினைவு முற்றத்தில் இருந்த நினைவுத்தூபி சேதமாக்கப்பட்டமை குறித்து கனடாவின் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தனது கண்டனத்தை பகிர்ந்துள்ளார்.
முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் உள்ள நினைவு முற்றத்தில் இருந்த நினைவுத்தூபி நேற்று முன்தினம் அதிகாலை சேதமாக்கப்பட்டதுடன், நடுகை செய்வதற்காக கொண்டு வரப்பட்டிருந்த பாரிய நினைவுக்கல்லும் காணாமல் போயுள்ளது.
இந்த அநீதியான செயலுக்கு எதிராக பல்வேறு தரப்பினர்களும் தமது கண்டனத்தையும், எதிர்ப்பையும் வெளியிட்டு வருகின்றனர். அந்த வகையில் கனடாவின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தனது கண்டனத்தை சமூக ஊடகத்தின் மூலம் வெளியிட்டுள்ளார்.
இது குறித்து தனது டுவிட்டர் என்னும் சமூக ஊடகப் பக்கத்தில் பதிவு செய்துள்ள அவர் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.
□முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் எண்ணற்ற இழப்புகளைச் சந்தித்த தமிழ் தேசத்திற்கும் எமது மக்களுக்கும் மே மாதம் துக்கத்தை அனுஸ்டிப்பதோடு மறைந்தவர்களுக்காக பிரார்த்திக்கும் நேரமாகும்.
இந்நிலையில், இலங்கை ஆயுதப் படைகளை அங்கு அனுப்பி எம் மக்கள் இழந்த அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கான உரிமையை தடுப்பதும் அங்கு நாட்டப்பெற்ற நினைவுதூபியை தகர்க்கும் செயற்பாடும் கண்டிக்கத்தக்கவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.




## Ontario Expanding Access to Dental Care and Affordable Prescription Drugs for Vulnerable Seniors

The Ontario government is updating the income eligibility thresholds for the Ontario Seniors Dental Care Program and the Seniors Co-Payment Program to allow more of Ontario's most vulnerable seniors to have access to dental care and affordable prescription medications.

In 2019, the Ontario government launched the Ontario Seniors Dental Care program to provide free routine dental care for eligible low-income seniors across the province. The Seniors Co-Payment Program enables low-income seniors to access the medication they need with no annual deductible and a reduced co-payment for each prescription.

"Seniors deserve to have access to better health care system, our government is committed to provide quality dental care and the prescription medications for our seniors" Said MPP Logan Kanapathi, MPP for Markham-Thornhill."This will help to improve their quality mental and physical health".

Starting August 1st, 2021, eligibility thresholds for both programs will be updated to reflect cost of living increases in Ontario and align with income support programs for seniors. Income thresholds will be updated for single Ontarians aged 65 and over, from $19,300 to $22,200, and for couples with a combined annual income, from $32,300 to $37,100. This will allow approximately 7,000 more seniors to access the Ontario Seniors Dental Care Program and 17,000 more seniors to access the Seniors Co-Payment Program in 2021-2022.

For the Seniors Co-Payment Program, seniors who are eligible under the new income thresholds are encouraged to apply now in advance of the start of the upcoming benefit year on August 1st, 2021. Application that can be found online or request an application over the phone toll free at 1-888-405-0405 or 416-503-4586.

On the first day of the month after an Ontarian turns 65 years old, seniors are automatically enrolled in the Ontario Drug Benefit (ODB) program, which covers most of the costs of more than 5,000 prescription drug products. Seniors pay the first $100 of their prescription drug costs each year (the deductible) and up to $6.11 for every prescription (the co-payment).The Seniors Co-Payment Program, under the Ontario Drug Benefit Program (ODB), allows eligible seniors that are enrolled in the program to pay no annual deductible for their drugs and a reduced co-payment of $2 for each prescription, improving access to essential drugs that they may not otherwise be able to afford.

BASEMENT FOR RENT
FINCH & MORNINGSIDE
2 Bedroom bsmt for rent.
Sep entrance, laundry, kitchen
Close to TTC,
Working couple preferred
Avail: May 01/2021
Tel: (647) 581-2225

வேலை வாய்ப்பு
தமிழர் நிறுவனமொன்றில் Assistant Manager பதவிக்கு ஒருவர் உடனடியாகத் தேவை. ஆங்கில அறிவும் மேற்பார்வை செய்யும் அனுபவமும் மிகவும் அவசியம்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்:- 416-616-6017

COMPUTER REPAIR
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN:
(416) 894-6244

ROOM FOR RENT
Kennedy / Eglinton
2 அறை கொண்ட தொடர்மாடிக் கட்டடத்தில் (apartment) இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு.
NO smoking, alcohol or pets.
1 person: $900 / 2 people: $600
Available Immediately
A1Canada, Rental Services
Mr. Ratha Francis:
(416) 752-4444
Cell: (416) 857-5252

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# முள்ளிவாய்க்காலில் அரங்கேறுவது சிங்களத்தின் அருவருப்பின் வெளிப்பாடு என்கிறது அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை!

முள்ளிவாய்க்கால் நினைவுத்திடல் பகுதியில் கடந்த இரவு முதல் அரங்கேறிவரும் அராஜகப் போக்கானது சிங்களத்தின் அருவருப்பின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளதுடன், அச்செயற்பாட்டினை உலகத் தமிழர்கள் சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழினப்படுகொலை நிகழ்த்தப்பட்டதன் 12ஆவது ஆண்டு நினைவேந்தல் வாரத்தின் முதல் நாளில் சிறிலங்கா அரசாங்கத்தின் நேரடி நெறிப்படுத்தலில் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் அராஜகமான செயற்றபாடுகள் அவர்களது இனக்குரோத மனநிலையின் வெளிப்பாட்டினை உலகிற்கு வெளிச்சம் போட்டுகாட்டுவதாக அமைந்துள்ளது.

தமிழீழத்தில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட, நிகழ்த்தப்பட்டு வரும் கட்டமைப்புசார் இனவழிப்பானது சிறிலங்காவின் ஆட்சி - அதிகாரத்தின் முழுமையான ஆசீர்வாதத்துடனே முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தன, தற்போதும் நடந்தேறி வருகின்றன.

தமிழினப்படுகொலை நினைவு நாளில் திரை நீக்கம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்பட்ட நினைவுக் கல்லை நிறுவவிடாது கடந்த இரவு சிறிலங்கா இராணுவத்தினரும், பொலிசாரும் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இரவோடு இரவாகவே இனவழிப்பு இராணுவத்தின் முற்றுகைக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பகுதி கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில், அங்கு அமைக்கப்பட்டிருந்த நினைவேந்தல் கட்டுமானம் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது.

வருடா வருடம் நினைவேந்தல் மேற்கொள்ளும் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சுடரேற்றும் பீடமும், அதனைச் சூழ அமைக்கப்பட்ட கட்டுமானமும் உடைத்தழிக்கப்பட்டுள்ளது.

இனப்படுகொலை செயற்பாட்டின் போது பறிகொடுத்த தமத உறவுகளை நினைத்து ஒட்டுமொத்த உலகத் தமிழர்களும் கண்ணீர் சிந்தி நினைவேந்தும் இத்தருணத்தில் நிகழ்த்தப்படும் இவ்வாறான செயற்பாடு மென்மேலும் எமது மனங்களில் மாறா வடுவையே ஏற்படுத்தும்.

இதனை சாட்டாக வைத்துக் கொண்டு தமிழ்மக்களின் நினைவேந்தல் உரிமையை அச்சுறுத்தி, அடக்க முற்படும் போக்கினை அவதானிக்க முடிகின்றது.

இவ் அராஜகப் போக்கினை வன்மையாக கண்டிப்பதுடன், தற்கால கொரோனா நெருக்கடி நிலையின்பாற்பட்டு சிறிலங்கா பேரினவாத அரசாங்கத்தின் மீது அனுதாபம் காட்டாது ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் 46-1 தீர்மானத்தை விரைந்து நடைமுறைப்படுத்தி ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட, இழைக்கப்பட்டு வரும் அநீதிகளுக்கு நீதியை பெற்றுத்தர சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்பதை வலியுறுத்திக் கொள்கின்றோம்.

*அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை.*

# மே 18 இனப்படுகொலையை நினைவுகூர்ந்து செப நாளாக அனுசரிப்போம்

## வடக்கு, கிழக்கு ஆயர் மன்றம் அழைப்பு!

போரில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கேட்டுப் போராடும் மக்களோடு இணைந்து வடக்கு-கிழக்கு ஆயர்களாகிய நாம் மே 18ம் திகதியை இனப்படுகொலையை நினைவுகூரும் நாளாகவும் செப நாளாகவும் அனுசரிக்கும்படியாக தமிழ் மக்கள் அனைவரையும் வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு வடக்கு-கிழக்கு ஆயர் மன்றம் அழைப்புவிடுத்துள்ளது.

இது தொடர்பில் போரில் கொல்லப்பட்டோரை நினைவுகூரும் தினம் என்ற தலைப்பில் மன்றம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மே மாதம் 18ஆம் திகதி இலங்கையின் வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவாகும்.

இறுதிப் போரின் போது கொல்லப்பட்டவர்களுக்கு இறுதிக் கிரிகைகள்கூட செய்யமுடியாது புதைத்துவிட்டு தப்பிப் பிழைத்து வந்தவர்களும், அதற்கு சாட்சிகளாக இருக்கும் ஏனையவர்களும் உயிரிழந்தவர்களை கண்ணீரோடு நினைவுகூரும் நாளாகும். இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையுடைய நாளாகவும் அந்நாள் இருக்கின்றது.

படுகொலை செய்யப்பட்டவர்கள் அனுபவித்த வேதனைகளும் துன்பங்களும் விடுதலை வாழ்வுக்கு தொடர்ந்து பங்களிப்புச் செய்கின்றன.

இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கேட்டுப் போராடும் மக்களோடு இணைந்து வடக்கு-கிழக்கு ஆயர்களாகிய நாம் மே 18ம் திகதியை இனப்படுகொலையை நினைவுகூரும் நாளாகவும் செப நாளாகவும் அனுசரிக்கும்படியாக வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் இலங்கையில் கடந்த பல தசாப்தங்களாக நடைபெற்ற போரிலும் குழப்பங்களிலும் தமது உயிர்களை இழந்த அனைவரையும் நினைவுகூர்ந்து செபிக்கும்படியாகவும் கேட்டுநிற்கின்றோம்.

அனைத்துப் பங்குத் தந்தையர்களையும், துறவறக் குழுமங்களையும், மத நிறுவனங்களுக்குப் பொறுப்பானவர்களையும் பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திகதி: மே 18 2021 செவ்வாய்க்கிழமை

மாலை 6 மணி - ஆலயங்களில் மூவேளை செப மணியோசை எழுப்புதல் மக்களை செபிக்க அழைத்தல்.

- ஈகைச் சுடர் ஏற்றுதல்
- இரண்டு நிமிட அக வணக்கம்
- இறந்தோர், பாதிக்கப்பட்டோர், துன்புறுவோரை நினைத்து மௌன செபம்.
- மாலை 6.15 - இறந்தோரை நினைவுகூர்ந்து துக்க மணி ஒலித்தல்

(கோவிட்-19 சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவும்)



இவ்வேளையில் மக்கள் தங்கள் இல்லங்களில் இருந்தவாறு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செய்யவும் செபிக்கவும் அறிவுறுத்தவும் என தெரிவித்துள்ள அறிக்கையில்,

பேரருட்திரு கி. நோயல் இம்மானுவேல்- திருகோணமலை மறைமாவட்ட ஆயர்
பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்- யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர்
பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ- மன்னார் மறைமாவட்ட ஆயர்
பேரருட்திரு யோசப் பொன்னையா- மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்
ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். **- மன்னார் நிருபர் (11-05-2021)**

# முள்ளி வாய்க்காலில் உயிர் நீத்தவர்களுக்கு நானாட்டான் பிரதேச சபை அமர்வில் சுடர் ஏற்றி அஞ்சலி



இறுதி யுத்தத்தின் போது முள்ளி வாய்க்காலில் உயிர் நீத்த மக்களுக்கு 13ம் திகதி வியாழக்கிழமை நானாட்டான் பிரதேச சபையின் 39 ஆவது அமர்வின் போது சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நானாட்டான் பிரதேச சபையின் 39 ஆவது அமர்வு 13ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் திருச் செல்வம் பரஞ்சோதி தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது நானாட்டான பிரதேச சபையின் உறுப்பினர் ஆர்.ஜீவன் அவர்களின் ஏற்பாட்டில் இறுதி யுத்தத்தின் போது முள்ளி வாய்க்காலில் உயிர் நீத்த மக்களுக்கு அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர், சக உறுப்பினர்கள் கலந்து கொண்டு உயிர் நீத்த மக்களுக்கு சுடர் ஏற்றி 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து சபை அமர்வு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது...

**- மன்னார் நிருபர் (13-05-2021)**

# இணைந்து விரைந்து செயற்படுவோம்!

**"அருள்மணி"**

வலிகள் சுமந்த மாதமிதில்
வாட்டும் துயரச் சுமையோடும்
பலியாய்ப் போன உறவுகளின்
பசுமை யான நினைவோடும்
நலிந்து வாடும் இவ்வாழ்வு
நாளை மாறும் எனநம்பி
மெலிந்து வாடும் தமிழர்கள்
விரும்பும் முடிவு வந்திடுமா?

தினம்தினம் எங்கள் தமிழினத்தைத்
தீர்த்துக் கட்டும் நினைப்போடு
இனக்கொலை நடத்திய அரசாங்கம்
இன்றும் அதையே தொடர்கிறது...
மனத்துயர் தந்திடும் கொடுமையிதை
வஞ்சனை நிறைந்தவித் திட்டத்தை
கனத்த நெஞ்சுடன் தமிழரெல்லாம்
கைகளைக் கோர்த்து எதிர்த்துநிற்போம்!

புலம்பெயர்ந் திருக்கும் தமிழர்களே!
பெறுப்புகள் பலவுண் டெம்முன்னே...
கலங்கிடும் எங்கள் உறவுகட்குக்
கைகொடுத் திடநாம் முன்வருவோம்!
பலவாண் டுகளாய் நாம்பட்ட
பாரிய துயர்கள் ஓடிப்போய்
விலகும் காலம் தனைநாடி
விரைந்து நாங்கள் செயற்படுவோம்!!

கண்ணீ ரோடு செந்நீரைக்
கலந்து பாய்ச்சித் தமிழீழ
மண்ணிற் சுதந்திரப் பயிர்வளர்க்க
மடிந்து மாய்ந்த உறவுகளின்
எண்ணக் கனவு நனவாக
எங்கள் பங்கை நாம்முடிப்போம்!
எண்ணித் துணிந்து செயற்படுவோம்!
இலங்கையில் நடப்பதை வெளிக்கொணர்வோம்!!

அன்று தொட்டுத் தமிழர்களை
அரக்கத் தனமாய்க் கொன்றொழித்து
என்றும் கொடுமை செய்துவரும்
இலங்கை அரசின் முகத்திரையை
ஒன்று பட்டுச் செயற்பட்டு
உடனே நாங்கள் கிழித்தெறிவோம்!!
இன்றி தெங்கள் பெருங்கடமை
இணைந்து கூடிச் செயற்படுவோம்!!

உலகப் பந்திற் பரந்துள்ள
உறவுகள் ஒன்றாய்ச் சேர்ந்திடுவோம்!
பலரும் கூடி ஒற்றுமையாய்
பாரிற் கொடுக்கும் குரலொன்றே
உலகின் கண்ணைத் திறந்துவிடும்
உரத்துச் சேர்ந்து குரல்கொடுப்போம்!
புலரும் சுதந்திர பூமியிலே
புதிய வாழ்வைத் தேடிடுவோம்!!

கனடிய செய்திகள்
Canadian News

# ஒன்றாறியோவின் அதி முக்கியமான போக்குவரத்துத் திட்டங்களுக்கு பல பில்லியன் டாலர்களை வழங்க கனடிய மத்திய அரசு சம்மதம்



ஒன்றாறியோ மாகாணத்தின் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய போக்குவரத்துத் திட்டங்களுக்கு பல பில்லியன டாலர்களை வழங்க கனடிய மத்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பு தெரிந்த வட்டாரங்களின்படி, இந்த அறிவிப்ப மதியம் 1 மணிக்கு திட்டமிடப்பட்டுள்ளது. இன்று செவ்வாய்கிழமை கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் ஒன்றாறியோ மாகாணத்தின் போக்குவரத்து விரிவாக்க திட்டத்தின் செலவில் 40 சதவீதத்தை பொறுப்பேற்றபதாக அறிவித்துள்ளார் இந்த அறிவிப்பு பகிரங்கமாக அறிவிக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒன்றாரியோ மாகாணத்தின் போக்குவரத்துத் திட்டம் ஒன்றாறியோ லைன், எக்ளிண்டன் க்ராஸ்டவுன் வெஸ்ட் எல்ஆர்டி மற்றும் ஸ்கார்பாரோ மற்றும் யோங் வடக்கு சுரங்கப்பாதை நீட்டிப்புகளைக் கொண்டுள்ளது,

ஏற்கனவே 17 பில்லியன் டாலர் உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்துள்ள ஒன்றாரியோ மாகாண முதல்வர், மேலும் மத்திய அரசாங்கத்தின் 40 சதவீத பங்களிப்பானது 11 பில்லியன் டாலருக்கும் அதிகமாக இருக்கும் என அறிவித்துள்ளார்.



ஒன்றாரியோ முதல்வர் டக் ஃபோர்டு 2019 இல் விரிவாக்கத் திட்டத்தை அறிவித்தார், மேலும் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஒட்டாவாவிடம் அதன் "நியாயமான பங்கை" செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். வரிகளுக்கு விரிவான வடிவமைப்புகள் இல்லாததைக் காரணம் காட்டி, லிபரல் அரசாங்கம் இந்த நிதி ஒதக்கீட்டை செய்வதற்கு இப்போது முன்வந்துள்ளனர். எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் நிதியைச் சுற்றியுள்ள நிச்சயமற்ற தன்மை இருந்தபோதிலும், மாகாணத்தின் போக்குவரத்து நிறுவனமான மெட்ரோலின்க்ஸ் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது, மேலும் சொத்து கையகப்படுத்தல் மற்றும் கட்டுமான ஒப்பந்தங்கள் தயாரித்தல் போன்ற ஆரம்பகால பணிகள் அவற்றில் சில ஏற்கனவே நடந்து வருகின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச தகுதி வாய்ந்த மருத்துவர்கள் பலர் கனடாவில் உள்ள நிலையில் அவர்களை கனடா ஏற்றுக்கொள்ளதாதது ஏன்?



ஒன்றாறியோ மாகாணத்தில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களின் பற்றாக்குறையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு வழிகள் பல உள்ளன. ஆனால் மருத்துவ சங்கங்கள் அதில் ஈடுபாடு காட்டவில்லை என ரொரன்ரோ, ரைர்சன் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ஒருவர்தெரிவித்துள்ளார். "இங்குள்ள மருத்துவமனைகள் ஏன் ஏற்கனவே நம் மத்தியில் உள்ள சர்வதேச பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான மருத்துவர்களை அழைக்க மறுக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளன" என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கனடாவில் வெளிநாட்டு பயிற்சி பெற்ற மருத்துவர்களுக்கு வேலை பெற்றுக்கொள்ள உதவும் ஒரு முகவர் நிறுவனத்தின் தலைவரான பூயான் கூறுகையில், "என்ன வளங்கள் வீணாகும்". "இது ஏற்றுக்கொள்ள முடியாதது. அவர்கள் கையில் மருத்துவர்களை பயன்படுத்த அவர்களுக்கு துணிச்சலில்லை. அத்துடன் கைகளில் உள்ள கருவிகளைக் கூட பயன்படுத்தவில்லை, இதன் விளைவாகவே மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள்".

ஒன்றாறியோவில் சர்வதேச அளவில் பயிற்சியளிக்கப்பட்ட 13,000 க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் இருக்கும்போது, 3,500 க்கும் மேற்பட்டவர்கள் உடனடியாக பயிற்சி பெற தகுதியுடையவர்கள், மேலும் தொற்றுநோய்களின் மூன்றாவது அலையை எதிர்த்துப் போராட மாகாணத்திற்கு உதவக்கூடும் என்று புவியன் கூறுகிறார். அவர்கள் கனேடிய உரிமத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள், சமீபத்திய மருத்துவ அனுபவம் பெற்றவர்கள் என்றும், நாட்டில் உள்ள அனைத்து வதிவிட வேட்பாளர்களைப் போலவே, மருத்துவ சங்கத்தின் அனுமதிப் பத்திரம் பெற்ற மருத்துவரின் மேற்பார்வையில் மருத்துவம் பயிற்சி செய்வதற்கான உரிமையைப் பெற்றுள்ளனர் என்றும் அவர் கூறுகிறார்.

ஒரு வருடத்திற்கும் மேலாக, மத்திய மற்றும் மாகாண சட்டத்தின் கீழ், மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகள் கனேடிய வதிவிடத்தை நிறைவு செய்யாவிட்டாலும் கூட, சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் உட்பட மருத்துவர்களை தற்காலிகமாக பணியமர்த்தும் திறனைக் கொண்டுள்ளன. அதாவது, அவர்கள் வேலைக்குத் தகுதியுடையவர்களாக இருந்தால், நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற உதவ வேண்டும். ஆயினும்கூட, மார்ச் 2020 முதல், மருத்துவமனைகள் இந்த குறுகிய கால அனுமதிப் பத்திரத்துடன் சுமார் 12 பேரை வேலைக்கு அமர்த்தியுள்ளன என்று மாகாண மருத்துவர்களை ஒழுங்குபடுத்தும் ஒன்றாறியோவின் மருத்துவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை கல்லூரி தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு பயிற்சி பெற்ற மருத்துவர்கள் தேவைப்பட்டாலும் 2020 ஆம் ஆண்டில் கனடா முழுவதும் 56 வைத்தியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறாக கனடாவில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமல் உள்ள நிலையில் சர்வதேச தரம் வாய்ந்த ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் உள்ளார்கள். ஆனால் இவர்கள் கனடாவில் தகுந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமல் தாமதம் ஏற்படுகின்றது என்று தெரிவித்த இன்னுமொரு கனடிய மருத்துவர் ஒருவர் ஊடகங்களுக்கு விபரங்கள் தெரிவிக்கையில்,

"இங்குள்ள மருத்துவ கழகங்களின் நிர்வாகத்தினர் அல்லது வேறு எந்த ஆளும் சுகாதார அதிகாரிகளும் வெளிநாட்டு பயிற்சி பெற்ற மருத்துவர்களின் முக்கியத்துவத்தை உணரவில்லை. அவர்களை அணுகவில்லை, இந்த தகுதி வாய்ந்த மருத்துவர்கள் ஏன் இன்னும் அழைக்கப்படவில்லை என்பது குறித்து விளக்கம் அளிக்கவில்லை. இதனால் பாதிக்கப்படுவத ஒன்றாரியோ மாகாணத்தில் நோயினால் அவதிப்படும் மக்களே ஆவார்கள்" என்றார்

# Markham Public Library Celebrates 50th Anniversary by breaking down barriers to access services

# கனடாவின் மார்க்கம் மாநகரசபையின் நூலகம் தனது 50வது நிறைவைக் கொண்டாடுகிறது




கனடாவில் தமிழ் மக்கள் அதிகமாக வாழ்ந்து வரும் மாநகரசபையாகவும், அத்துடன் தமிழர் மரபுரிமை நாளை முதன் முதலாக அங்கீகரித்த பெருமைக்குரியதும், கனடாவில் முதன் முதலாக ஒரு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநகரசபை அங்கத்தவர் ஒருவரால் சபையை அலங்கரித்த சிறப்புகளுக்கு உரிய மார்க்கம் மாநகரசபையானது தனது பொது நூலகத்தின் 50வது ஆண்டு நிறைவை இந்த 2021ம் ஆண்டு கொண்டாடுகின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை எமது வாசக அன்பர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம்.




Markham Public Library celebrates

50th anniversary
by breaking down barriers to access services

**Canada's Markham Public Library (MPL) turns 50 this year! To celebrate this milestone birthday, MPL will be removing barriers to access for users by eliminating fines for children and teens. The Library will also introduce a new eCard, and share virtual programs and activities throughout the year.**


Starting May 12, children and teens will no longer be charged overdue fines for borrowed library materials that are returned late. MPL's Fine Free Program removes a barrier to access and ensures that children and teens of all economic backgrounds can enjoy equal opportunities to imagine, create, learn and grow. To qualify, library users will need to update their library card profile by contacting the Library. Originally meant to encourage the timely return of borrowed materials, recent studies have shown that overdue fines actually deter people from borrowing from the library.

"This year marks an important milestone for the City of Markham and Markham Public Library as we celebrate 50 years of delivering exceptional services to residents while continuing to do what we do best, innovating," said Markham Mayor Frank Scarpitti. "Markham Public Library is a celebrated institution in our city and has been on the forefront of change throughout the years. I would like to wish Markham Public Library a Happy 50th Birthday and I encourage residents to participate in the various programs and services that they have planned to mark this golden anniversary."

# இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகளை விட தமிழ் மக்கள் விவேகமுள்ளவர்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்

**- விசாகன் எழுதும் இவ்வாரக் கட்டுரை**







ஒரு பக்கத்தில் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் நடைபெற்று முடிந்து பதவியேற்பு வைபவம் நடைபெற்று முதல்வர் பதவி-யில் ஸ்டாலின் அமர்ந்திருக்க, இலங்கையில் உள்ள தமிழ் பேசும் அரசியல்வாதிகள் சில் தமிழினத்தின் மத்தியில் நிறை-வேறாக் கனவு-களை விதைத்துவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு இவர்கள் கடந்த காலங்களில் மக்களை ஏமாற்றியது போன்று தொடர்ச்சியாக ஏமாற்றும் கருத்துக்களை மக்கள் மனங்களில் விதைக்க முயல்வதை முதலில் நிறுத்திக் கொள்ள வேண்டும். அரசியல்வாதிகளை விட தமிழ் மக்கள் விவேகமுள்ளவர்களாக உள்ளனரென்பதையும் முதலில் அனைவரும் புரிந்து கொள்வோம்!

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈட்டிய தனிப்பெரும்பான்மையுடனான பெருவெற்றியையடுத்து, அக்கட்சியின் தலைவரான மு.க. ஸ்டாலின் தமிழக முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்டார். இந்தியாவில் கெ-ாவிட் தொற்று மிகத் தீவிரமடைந்திருப்பதன் காரணமாக முதலமைச்சர் பதவியேற்பு நிகழ்வு கோலாகலமாக நடைபெறாமல், ஆளுநர் மாளிகை-கயில் சுகாதார நடைமுறைகளைப் பேணியவாறு மிக எளிமையான முறையில் நடைபெற்றது.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை தி.மு.கவும், அ.தி.மு.கவும் மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றி வருவதே வழமையாகும். ஆனாலும் அ.தி.மு.கவுக்குத் தலைமை வகித்த முன்னாள் முதலமைச்சர் அமரர் ஜெயலலிதாவின் அரசியல் ஆளுமை காரணமாக தி.மு.கவினால் சில காலம் எழுச்சி பெற முடியாதிருந்தது. இதன் காரணமாக அடுத்தடுத்து அ.தி.மு.க அணியின் வசமே தமிழகத்தின் ஆட்சி இருந்து வந்தது.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் தமிழக அரசி-யலில் பாரிய ஆளுமை வெற்றிடமொன்று தோன்றியதாலும், அ.தி.மு.கவின் தலைமைக்கு அரசியல் மற்றும் நிர்வாகத் திறமையற்ற விவேகமற்றவர்கள் வந்து சேர்ந்ததாலும் அ.தி.மு.க சிதறுண்டு போனது. உட்கட்சிப் பூசல்கள் காரணமாக தமிழக மக்கள் மத்தியில் அ.தி.மு.க மீது வெறுப்பும், அவநம்பிக்கையும் உருவாகியதனால் அக்கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சியுற்றது.

அ.தி.மு.கவின் வீழ்ச்சி நிலைமை அவ்வாறிருக்கையில், தமி-ழக அரசி-யலில் மற்றொரு ஆளுமையாக திகழ்ந்து வந்தவரும், தி.மு.கவின் முன்னாள் தலைவருமான கலைஞர் கருணாநிதியின் மறைவுக்குப் பின்னர் கட்சித் தலை-மையைப் பொறுப்பேற்ற அவரது புதல்வர் ஸ்டாலின், தமிழகத்தின் அரசி-யல் வெற்றிடத்தை சரியான முறையில் புரிந்து கொண்டவராக நகர்வுகளை முன்னெடுத்ததன் பயன-ாக இப்போது ஆட்சியைக் கைப்பற்ற முடிந்துள்ளது.

தி.மு.கவைப் பொறுத்த வரை இன்றைய பெருவெற்றியானது நீண்ட காலப் போராட்டத்தின் விளைவாக ஈட்டியதாகும். இவ்வெற்றிக்காக ஸ்டாலின் கடந்து வந்த பாதை கரடுமுரடானது, நீண்டது. மத்தியில் பலம் வாய்ந்ததாகத் திகழும் ஆளும் பா.ஜ.கவின் வியூகங்களையும், கடும்போக்கு காய்நகர்த்தல்களையும் தாண்டி இந்த வெற்றியை ஈட்டியிருக்கின்றார் ஸ்டாலி-ன் என்பதே உண்மை.

அதேசமயம், நீண்ட கால அரசியல் பின்னடைவுக்குப் பின்னர் தி.மு.க இப்போது மீண்டும் ஆட்சிபீடமேறியுள்ளது. தி.மு.கவின் சளைக்காக உழைப்பும், அ.தி.மு.கவின் உட்கட்சி முரண்பாடுகளால் உருவான பலவீனமுமே தமிழகத்தின் இன்றைய தேர்தல் முடிவுக்கான பின்னணிக் காரணங்களென்பது புலனாகின்றது. எவ்வாறாயினும் கடி-னமானதொரு காலகட்டத்தில் தமிழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார் ஸ்டாலின்.

தமிழக அரசியல் நிலைமைகள் இவ்வாறிருக்கையில், ஸ்டாலினி-ன் வெற்றி தொடர்பாக அவருக்கு உலகின் பல பாகங்களிலுமிருந்தும் வாழ்த்துகள் குவிந்த வண்ணமுள்ளன. விசேடமாக தமிழ் கூறும் உலகி-ல் இருந்து வாழ்த்துகள் குவிகின்றன. இலங்கையில் வடக்கு, கிழக்கு தமி-ழர் அரசியல் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகின்ற பாராட்டுகளும் இவற்றில் அடங்குகின்றன. தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகளே பெருமளவில் ஸ்டாலினுக்கு தமது வாழ்த்துகளை அனுப்பி வைத்துள்ளனர்.

தமிழ்க் கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகள் வெறு-மனே வாழ்த்துகளை மாத்திரம் அனுப்பி வைப்பதில் தவறேதும் கிடையாது. வெற்றி பெற்றவர்களை வாழ்த்துவதே அரசியல் நாகரி-கமும், பண்பும் ஆகும். ஆனால் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் மற்றொரு விடயத்தையும் குறிப்பிடுவதைத்தான் அபத்தமானதாக கருத வேண்டியுள்ளது.

வடக்கு, கிழக்கு தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளை முதலமைச்சர் ஸ்டாலின் வென்றெடுத்து தருவாரென்ற தோரணை-ணயில் தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் சிலர் மக்கள் மத்தியில் மீண்டும் நம்பிக்கைகளை விதைக்க முற்படுவதைத்தான் பொறுத்துக் கொள்ள முடியாதிருக்கின்றது. இந்தியாவின் நாடாளுமன்றத்துக்கான தேர்தலாகட்டும், இல்லையேல் தமிழக சட்டமன்றத்துக்கான தேர்தலாகட்டும்... வடக்கு, கிழக்கு தமிழர்கள் மத்தியில் சாத்தியமற்ற வீ-ணான நம்பிக்கைகளை விதைப்பதே தமிழ் அரசியல்வாதிகள் சிலருக்கு வாடிக்கையாகி போய் விட்டது.

இலங்கையில் நடைபெறுகின்ற ஒவ்வொரு தேர்தலின் போதும் தமிழினத்தின் மத்தியில் வடக்கு-கிழக்கு இணைப்பு, சுயாட்சி என்றெல்லாம் நடைமுறைச் சாத்தியமற்ற வெறும் மாயைகளை காண்பிப்பது போன்று, இந்தியத் தேர்தல்களின் முடிவுகளின் பின்னரும் போலி நம்பிக்கைகளை ஏற்படுத்த முற்படுவது ஏமாற்று வித்தையே தவிர வேறொன்றுமில்லை. இன்று ஸ்டாலினின் வெற்றி குறித்தும் போ-லி நம்பிக்கைகளே ஊட்டப்படுகின்றன.

இலங்கை விவகாரத்தில் இணக்கப்பாடான அரசியல் தீர்வு ஒன்றுக்காக இந்திய மத்திய அரசையோ அன்றி தமிழக அரசை-யோ நம்பியிருப்பது விவேகமற்றதென்பதை வரலாறு நன்றாகவே புலப்படுத்தியுள்ளது. உள்நாட்டு இனமுரண்பாட்டுக்கான தீர்வில் மற்றொரு நாட்டின் ஆதரவையும், உதவியை-யும் நாடுவது பொருத்தமானதல்லவென்பதே நாம் கற்றுக் கொண்ட பாடம். உள்நாட்டு இணக்கப்பாடுகளின் மூலமே எந்தவொரு சிக்கலுக்கும் தீர்வு காண முடியுமென்பதே யதார்த்தமாகும். இலங்கையில் குறிப்பாக மாவை சேனாதிராஜா, சிவஞானம் ஸ்ரீதரன், மனோ கணேசன், இராதாகிருஸ்ணன் போன்றவர்கள் இந்த ஏமாற்று வேலைகளை தொடர்ந்த வண்ணம் உள்ளார்கள். இந்த நால்வரில் மலையக மக்கள் முன்னணியை தன் வசப்படுத்தியுள்ள அவர் கூட ஒரு ஏமாற்று அரசியல் செய்யும் மலையக அரசியல்வாதி. மாவை சேனாதிராஜா முன்னைய ஆட்சியாளர்களோடு கூட்டுச் சேர்ந்து அவர்களுக்கு "விலை" போயிருந்து, பொருள் சேர்த்து வைத்த பின்னர் தற்போது "ஞானம்" வந்தது போன்று அறிக்கைகள் விடுகின்றார். இவற்றைப் படித்து மக்கள் ஏமாந்து விடமாட்டார்கள் என்பதே உண்மை.


வெளியீடும் அறிமுகமும்

நாளைக் குறித்து வைத்து நல்லாதரவு தாருங்கள்!

**பாடி ஆடு பாப்பா!**

சிறுவர் பாடல்கள்

அமெரிக்கத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சிறந்த நூலுக்கான

விருது பெற்ற நூல்.

ஆசிரியர்: **சபா. அருள்சுப்பிரமணியம். M.A.** (மாதகலான் / அருள்மணி)

நூல்கள்: 1. பாலர், சிறுவருக்கான சிறுவர் பாடல்கள் (332 பக்கங்களுடன்)

2. அடிப்படைத் தமிழ் இலக்கண வினாவிடை (325 வினாக்கள், விடைகளுடன்)

உலகின் பல நாடுகளிலிருந்தும் பல அறிஞர்கள் கலந்துகொள்ளும் ஒரு நிகழ்வு

நாள்: யூன் 6ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (06–06–2021)

நேரம்: கனடா – காலை 10:00 மணி

நிகழ்வு: 'ZOOM' வழி மெய்நிகர் நிகழ்வாக

**Zoom ID: 647 706 6123**

ஆதரவிற்கு நன்றி

அன்புடன்,

சபா. அருள்சுப்பிரமணியம் M.A.

Thamil Poonka

3001 Markham Road, 21

Markham. ON M1X 1L6

CANADA.

கனடிய செய்திகள்
Canadian News

# ஒன்றாரியோ மாணவர்கள் சிறிது காலத்திற்கு இணையவழி ஊடாக தங்கள் கல்வியைத் தொடர்வார்கள் என அறிவித்துள்ள மாகாண முதல்வர்



ஒன்றாரியோ மாகாணத்தில் "வீட்டிலேயே தங்கியிருங்கள்" என்ற முடக்கத் திற்கான அறிவிப்பை நேற்று வியாழக்கிழமை மாலை இன்னும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் அறிவிப்பை விடுத்த ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். அப்போது மிகவும் முக்கியமான கருத்தாக, மாணவர்கள் இந்த முடக்கம் தொடர்பான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதால், சிறிது காலத்திற்குஇணையவழி ஊடாக தங்கள் கல்வியைத் தொடரலாம் என்று அறிவித்தார்.

ஒன்றாரியோ மாகாணத்தின் சட்டசபையில் இந்த அறவிப்பை விடுத்த பின்னர் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்த விடயங்கள் பின்வருமாறு அமைகின்றன.

"பாடசாலைக் கற்றல் முறைகளுக்கு ஏற்பட்டு தற்காலிக நிலைமை பல பெற்றோருக்கு ஒரு முக்கியமான கவலையாக உள்ளது", என்று தெரிவித்த முதல்வர் அவர்கள் ஒருபுறம், சில மருத்துவர்கள் பள்ளிகளைத் திறக்க விரும்புவதாகக் கூறுகிறார்கள். மறுபுறம், எங்களால் இப்போது அதைச் செய்ய முடியாது என்று ஆசிரியர் தொழிற் சங்கங்கள் கூறுகின்றன. எங்களுக்கு ஒருமித்த கருத்து தேவைப்படும்போது முன்னோக்கி செல்லும் சிறந்த பாதையை ஏற்றுக்கொள்ளும் வகையில் பொது சுகாதார மருத்துவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் கருத்துக்களைக் கேட்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அதையே நாங்கள் தற்போது செய்கின்றோம்.

அவர் மேலும் கூறுகையில், "தற்போதைக்கு, நாம் இணையவழி ஊடான கற்றலைத் தொடர வேண்டும். முடிந்தவரை அதிகமான ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தடுப்பூசி போட இந்த நேரத்தை நாங்கள் பயன்படுத்துவோம். துற்போதைய திட்டத்தின் படி இப்போது 12 முதல் 17 வயது வரையிலான மாணவர்கள் மே 31 முதல் முதலாவது தடுப்பூசியை பெறுவதற்கு உரித்தவர்கள் ஆகின்றார்கள்.

இந்த நிலையில், ஒன்ராறியோவின் தொடக்க ஆசிரியர்களின் தொழிற்சங்கம் மற்றும் ஒன்ராறியோ ஆங்கில கத்தோலிக்க ஆசிரியர்கள் சங்கம் ஆகிய இரண்டு தொழிற்சங்களும் ஆளும் கட்சியை விமர்சனம் செய்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. அந்த அறிக்கையில் தங்களுக்கு எந்தவிதமான மாற்றங்கள் பற்றி அரசாங்கம் அறிவிக்கவில்லை என்றும், அத்துடன் இன்றுவரை மாகாண முதல்வரோ அன்றி மாகாண கல்வி அமைச்சரோ தங்களுடன் இணைந்து திட்டங்களை வகுக்க ஆர்வம் காட்டவில்லை" என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்த தொற்றுநோய்களின் பாதிப்பு நிறைந்த காலப்பகுதியில் போது எங்கள் பாடசாலைகள் எவ்வாறு பாதுகாப்பாகவும் திறமையாகவும் செயல்பட முடியும் என்பது தொடர்பாக இந்த அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்த எங்கள் சங்கம் இப்போது ஒரு வருடத்திற்கும் மேலாக முயற்சித்து வந்திருக்கின்றது. எவ்வாறாயினும், ஒவ்வொரு கட்டத்திலும் எமது சங்கங்களும் நாங்கள் மறுக்கப்பட்டுள்ளோம்", என்று கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் தலைவர் லிஸ் ஸ்டூவர்ட் கூறினார் ஊடகவியலாளர்களிடம் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் ஸ்ரீபன் லெட்சே தற்போது ஒன்றாரியோ மாகணணத்தின் பாடசாலைக் கற்றல் முறைகள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தற்போதை முடக்க காலத்தில் மாகாணத்தின் அனைத்து பாடசாலைகளிலும் சுத்தமான காற்றை மாணவர்களுக்கு வழங்குதல் மற்றும் நோய்த் தொற்று தொடர்பான பாதிப்புகளிலிருந்து மாணவர்களை மீட்டெடுக்கும் வழிகள் தொடர்பான பணிகளுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், எனவே மாணவர்கள் மீளவும் வகுப்பறைக் கல்விக்கு திரும்பும் போது பெற்றோர்களோ அல்லது ஆசிரியர்களோ அச்சமடையத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீணாவின் கவிக்கணை

எத்தனை கண்கள்,
அத்தனையும் உன் மேல்,
அத்தனை பார்வையின்
சிந்தனைகள் எத்தனையோ?
எத்தனை மாற்றங்கள் செய்தாலும்
அத்தனைக்கும் குறைகாணும் கண்கள்.
அத்தகைய மனிதரை நினைத்து
உன்னை நீ மாற்றி விடாதே,
எத்தனையோ சோதனை வரும்,
அத்தனையும் தீர்ந்து விடும்
நீ நேரே உன் வழியில் மட்டும் சென்றிடு.




# இறந்தவர்களை நினைவு கூர்வது என்றால் என்ன?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



இறந்தவர்களை நினைவு கூர்வது என்பது முதலாவதாக ஒரு கூட்டுத் துக்கத்தை அழுது தீர்ப்பது. அது ஒரு கூட்டு சிகிச்சை. அது ஒரு கூட்டு குணமாக்கல் பொறிமுறை. அதற்கு பண்பாட்டு அம்சங்கள் அதிகம் உண்டு. துக்கத்தை தொடர்ந்தும் தேக்கி வைத்திருந்தால் அது கட்டுப்படுத்த முடியாத ஆவேசமாக பழிவாங்கும் உணர்ச்சியாக மாறும். எனவே அதனை வெளி வழிய விடவேண்டும். நினைவு கூர்தலானது கூட்டுத் துக்கத்தை குணப்படுத்தும் ஒரு கூட்டுச் சிகிச்சையாக அமையும். இது முதலாவது.

இரண்டாவதாக, நினைவு கூர்தல் கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்ற வேண்டும். கொல்லப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அவ்வாறு நீதி கோரிய போராட்டத்தின் உந்து விசையாக அந்த ஆக்க சக்தி அமையும். எனவே ஈழத்தமிழர்கள் நீதிக்கான தமது போராட்டத்தின் உணர்ச்சிகரமான ஆக்க சக்தியாக அக்கூட்டுத் துக்கத்தை மாற்ற வேண்டும். அதற்கு நினைவு கூர்தல் அவசியம்.

மூன்றாவதாக, நினைவு கூர்தல் தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்டும். நினைவு கூர்தல் என்ற ஒரு பொதுப்புள்ளியில் பெரும்பாலான ஈழத் தமிழர்களை ஒன்று திரட்டலாம். அது மட்டுமல்ல உலகத்தில் இருக்கும் தமிழ்ச் சமூகத்தை ஒன்று திரட்டலாம். நவீன தமிழ் வரலாற்றில் மிகக் குறுகிய காலத்தில் அதிக தொகை ஜனங்கள் கொல்லப்பட்டமை என்பது 2009 ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களில்தான். எனவே பெருந்தமிழ் பரப்பில் ஆகக் கூடிய தொகையினரை ஓர் உணர்ச்சி புள்ளியில் ஒன்றிணைப்பதற்கு நினைவு கூர்தல் அவசியம். அதன் மூலம் நீதிக்கான போராட்டத்தை அனைத்துலக மயப்படுத்தலாம். அனைத்துலக அபிப்பிராயத்தை கனியச் செய்வதற்கு அது அவசியம். இது மூன்றாவது.

நாலாவதாக, இறந்தவர்களை நினைவு கூர்வது என்பது அல்லது இனப்படுகொலையை நினைவு கூர்வது என்பது அந்த இனப்படுகொலையின் கூட்டுக் காயங்களோடும் கூட்டு மனவடுக்களோடும் தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு உதவுவதுந்தான்.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. 2009க்குப்பின் ஆயுத மோதல்கள் கிடையாது. ஆனால் உளவியல் மோதல்கள் உண்டு. ஆகிரமிப்பு யுத்தமல்லாத வழிகளில் முன்னெடுக்கப்படுகிறது. எனவே இதுவிடயத்தில் ஒருபுறம் ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியும் ஆதரவும் அவசியம். இன்னொருபுறம் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்கு எதிராக தற்காப்புக் கவசங்கள் உருவாக்கிக் கொள்வதும் அவசியம்.

அதற்கு தாயகம் - டயஸ்போரா - தமிழகம் ஆகிய மூன்று தரப்பும் இணைந்து ஒரு கூட்டுப் பொறிமுறையை உருவாக்கப்பட வேண்டும்.

குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்கள் சிகிச்சைகளும் உதவி ஒத்தாசைகள் வழங்கப்பட வேண்டும். அதற்கு ஒரு ஐக்கியப்பட்ட முயற்சி அவசியம். கடந்த 12 ஆண்டுகளாக தமிழ் டயஸ்போராதான் தாயகத்திலுள்ள போரால் பாதிக்கப்பட்ட மக்கள் கணிசமான அளவுக்கு மீண்டெழ உதவியிருக்கிறது. தமிழ் டயஸ்போரா இல்லையென்றால் போரின் பாதிப்புகளில் இருந்து தாயகம் குறிப்பிடத்தக்க அளவுக்கு மீண்டு எழுந்திருக்கவே முடியாது. ஆனால் இது விடயத்தில் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் உதவிகள் பொருத்தமான ஒரு பொது கட்டமைப்பின் கீழ் ஒன்றிணைக்கப் படவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். தாயகத்துக்கு உதவும் புலம்பெயர்ந்த தன்னார்வ நிறுவனங்கள் அல்லது நபர்கள் தங்களுக்கு இடையே ஒரு பொதுக் கட்டமைப்பை இன்று வரையிலும் உருவாக்க முயற்சிக்கவில்லை. ஒவ்வொரு தனிநபரும் அல்லது நிறுவனமும் தன்னளவில் உதவிகளைச் செய்து அதனால் கிடைக்கக்கூடிய பாராட்டுக்களை எப்படிப் பெறலாம் என்று பெருமளவுக்கு சிந்திப்பதாக தெரிகிறது. ஆனால் இது விடயத்தில் தாயகத்துக்கு வழங்கப்படும் உதவிகள் வெறுமனே தானமோ அல்லது தொண்டோ மட்டும் அல்ல. அவற்றுக்கும் அப்பால் அந்த உதவிகளை தேசநிர்மாணம் என்ற அடிப்படையில் சிந்தித்து செய்யப்பட வேண்டும் இது மிக முக்கியம்.

டயஸ்போராவிலிருந்து தாயகத்துக்கு வழங்கப்படும் எந்த ஒரு உதவியும் தேசத்தை நிர்மாணிப்பது என்ற அடிப்படையில்தான் தீர்மானிக்கப்பட வேண்டும், வழங்கப்பட வேண்டும். தனிப்பட்ட நபர்கள் தனிப்பட்ட உறவினர்களுக்கோ தெரிந்தவர்களுக்கோ வழங்குவது என்பது வேறு. நிறுவனமயப்பட்ட உதவிகள் வேறு. முதலில் தேசத்தை நிர்மாணிப்பது என்ற அடிப்படையில் ஒரு பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதற்கு வேண்டிய நீண்டகால மற்றும் குறுங்கால திட்டங்கள் வகுக்கப்பட்டு அந்த அடிப்படையில்தான் தாயகத்தை நோக்கி உதவிகள் பாய்ச்சப்பட வேண்டும். இல்லையென்றால் அந்த உதவிகள் பின்வரும் தீய விளைவுகளை ஏற்படுத்தும்.

முதலாவதாக, உதவி வழங்குவோர் தங்களை கொடையாளிகள் ஆகவும் உதவிபெறுவோரை பயனாளிகள் அல்லது கையேந்திகளாகவும் பார்க்கும் ஒரு மனோநிலை வளரும்.

இரண்டாவதாக சரியான புள்ளிவிவரங்கள் இன்றி உதவி வழங்கப்படும் போது ஏற்கனவே உதவி பெற்றவரே திரும்பத்திரும்ப உதவிபெறும் ஒரு நிலைமை தோன்றும். இதனால் சில சமயம் தேவையானவருக்கு உதவி கிடைக்காமலும் போகும்.

மூன்றாவதாக சரியான பொருளாதாரத் திட்டங்களின்றி வழங்கப்படும் உதவிகள் தாயகத்தில் கையேந்தும் சமூகத்தை உருவாக்கி விடும். இவ்வாறு கையேந்தும் சமூகமானது புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்பிலிருந்து கிடைக்கும் உதவிகளை எப்படிப் பெறலாம் எப்படி ஒருவருக்கு தெரியாமல் மற்றவரிடமிருந்து உதவியைப் பெறலாம் என்று சிந்தித்து உழைப்பின்றி வெளியாருக்காகக் காத்திருக்கும் ஒரு போக்கை வளர்த்துவிடும்.

இந்த மூன்று தீய விளைவுகளையும் கவனத்திலெடுத்து டயஸ்போராவிலிருந்து தாயகத்துக்கு உதவி வழங்கும் அமைப்புக்களும் தனிநபர்களும் தங்களுக்கிடையில் ஒரு பொதுக்கட்டமைப்பை உடனடியாக உருவாக்க வேண்டும். அப்படி ஒரு பொதுக்கட்டமைப்பு இல்லாத ஒரு வெற்றிடத்தில் சரியான ஒரு பொதுப் புள்ளிவிபரமும் பொருத்தமான ஒரு பொதுவான திட்டமிடலும் இல்லையென்றால் ஒரு நிறுவனம் உதவி வழங்கிய நபருக்கு மற்றொரு நிறுவனமும் உதவி வழங்க நேரிடும். இது கடந்த ஆண்டு Covid-19 முதலாவது தொற்று அலையின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு நிறுவனங்களிடமிருந்தும் நபர்களிடமிருந்தும் கட்சிகளிடமிருந்தும் ஒரே குடும்பம் உதவிகளை பெற்றதன் விளைவாக பல வீடுகளில் கோதுமை மா அளவுக்கு மிஞ்சித் தேங்கி வண்டு பிடித்தது. ஏனைய உணவுப் பொருட்களும் வீணாகத் தேங்கி புழுப் பிடித்தன்வண்டுபிடித்தன என்று பல குடும்பத் தலைவர்கள், தலைவிகள் கூறக்கேட்டிருக்கிறேன்.

உதவிகளை ஒரு பொதுப் புள்ளிவிபரத்தின் அடிப்படையில் ஒரு பொதுத் திட்டத்தின் கீழ் வழங்க வேண்டும் என்பதற்கு இது மிகப் பிந்திய பெரிய உதாரணம் ஆகும். இந்த அடிப்படையில் தமிழ் புலம் பெயர்ந்த சமூகத்தின் உதவி எனப்படுவது தனி-நபர் தன்னார்வ நடவடிக்கையாக மட்டும் சுருங்கக் கூடாது. அல்லது சில நிறுவனங்களின் தன்னார்வ நடவடிக்கையாக, தொண்டு நடவடிக்கையாக மட்டும் சுருங்கக் கூடாது.மாறாக அது ஒரு தேசத்தை கட்டியெழுப்புதல் என்ற பரந்தகன்ற திட்டத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டும். அது ஒரு தேசியக் கடமை.

அரசாங்கமோ அல்லது அரசாங்கத்தின் ஏனைய உபகரணங்களோ இது விடயத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவிகளை போதுமான அளவுக்கு செய்திருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஒரு உதாரணத்தை இங்கு கூறலாம். கழுத்துக்கு கீழ் அல்லது இடுப்புக்கு கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் உதவிகள் அற்ப தொகைதான். மாறாக புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்புகளால் வழங்கப்படும் உதவிகளே அதிகமானவை. அந்த உதவிகள்தான் மாற்றுத்திறனாளிகளான பாதிக்கப்பட்ட மக்களை இன்றுவரை நிமிர்த்தி வைத்திருக்கின்றன. எனவே இதுவிடயத்தில் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் மற்றும் நிறுவனங்கள் ஒரு பொருத்தமான பொதுக்கட்டமைப்புக்குப் போகவேண்டும். அந்த பொதுக்கட்டமைப்பு தேசத்தை நிர்மாணித்தல் என்ற அடிப்படையில் தகவல்களை திரட்ட வேண்டும், திட்டங்களை வகுக்க வேண்டும், உதவிகளை வழங்கவேண்டும். இது மிகவும் அவசரமானது, அவசியமானது.

அதே சமயம் இந்தஇடத்தில் ஒரு முக்கியமான விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டும். புலம்பெயர்ந்த தமிழ் தரப்புகளில் இருந்து கிடைக்கும் உதவிகள் ஒருபுறம் தாயகத்தில் போரினால் பாதிக்கப் பட்டவர்களை நிமிர்த்துகின்றன. இன்னொருபுறம் அதே உதவிகளை காரணமாகக் காட்டியே அண்மை மாதங்களாக சிலர் கைது செய்யப்பட்டுமிருக்கிறார்கள். புலம்பெயர்ந்த தமிழர் தரப்பில் இருந்து கிடைக்கும் வாழ்வாதார உதவிகள் யாரிடமிருந்து வந்தன என்று கேட்டு கைது செய்யப்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டவர்கள் உண்டு. எனவே புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்பிலிருந்து தாயகத்துக்கு உதவி செய்ய விரும்புகிறவர்கள் ஒரு முக்கியமான முன் நிபந்தனையைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. தாயகத்தில் எவையெல்லாம் தடை செய்யப்பட்டிருக்கின்றனவோ அவை அனைத்தையும் கவனத்தில் எடுத்து புலம்பெயர்ந்த தமிழ் செயற்பாட்டாளர்கள் தங்களுடைய நிறுவனங்களையும் கொடிகளையும் அதற்கு ஏற்றாற்போல அமைத்துக் கொள்ளவேண்டும். புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதனை அரசாங்கம் உற்றுக்கவனித்துக் கொண்டிருக்கிறது. இதனால் தாயகத்தோடு தொடர்புடைய தொண்டு நிறுவனங்களை நடத்துகிறவர்கள் அல்லது தாயகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்று கருதுபவர்கள் இதுவிடயத்தில் அரசாங்கத்தின் சட்டத்தடைகளுக்கு அகப்படாத விதத்தில் செயல்பட வேண்டியிருக்கிறது.

இதுவிடயத்தில் அனைத்துலக சட்டங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டமைப்புக்களை அவர்கள் உருவாக்க வேண்டும். உதாரணமாக ஒரு தமிழ் வங்கியை உருவாக்கலாம். அந்த வங்கியானது தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறைந்த வட்டிக்கு அல்லது வட்டி இல்லாமல் முதலீடு செய்வதற்கு உதவிகளை வழங்கலாம். முஸ்லிம் வங்கிகளைப்போல. இரண்டாவதாக ஒரு அனைத்துலக தொண்டு நிறுவனத்தை உருவாக்கி தாயகத்திலுள்ள தொண்டு நிறுவனங்களோடு இணைந்து நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கலாம்.

இவ்வாறாக உலகப்பரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு கட்டமைப்புக்களை உருவாக்கி அவற்றின் மூலம் தாயகத்துக்கு உதவும்போது தாயகத்தில் இருப்பவர்கள் நெருக்கடிக்குள்ளாகும் நிலைமைகள் அனேகமாகக் குறையும். நிதி சிந்தப்படுவதும் தடுக்கப்படும். குறிப்பாக கடைசியாக வந்த ஐநா தீர்மானத்தின் பின் அரசாங்கம் ஒரு தொகுதி புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்களையும் நபர்களையும் தடைப்பட்டியலில் சேர்ந்திருக்கிறது. இது தாயகத்துக்கும் புலம்பெயந்த சமூகத்துக்குமான குருதிச் சுற்றோட்டத்தைத் தடுக்கும் நோக்கிலானது. எனவே, தாயகத்தில் ஏற்கனவே பாதிக்கப்பட்டவருக்கு வெளியில் இருந்து கிடைக்கும் உதவியும் ஆபத்தாக மாறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இறந்தவர்களுக்கும் இறந்தவர்களில் தங்கியிருந்தவர்களுக்கும் நீதி கிடைப்பது என்பது அதன் முழுமையான பொருளில் இதுதான். நினைவுகூர்தல் என்பது இந்த இடத்தில்தான் முழுமையடைகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அல்லது உயிரிழந்தவர்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். அதற்கு முன் அவர்களுக்கு பசியாற வேண்டும். காயங்களுக்கு மருந்து கிடைக்க வேண்டும். அவர்கள் தங்கள் வாழ்க்கையை கட்டியெழுப்ப தேவையான அடிப்படை வசதிகள் கொடுக்கப்படவேண்டும். தேசத்துக்காக சிலுவை சுமந்ததால் அவர்கள் தனித்து விடப்படவில்லை தேசமே அவர்களோடு நிற்கிறது என்பதனை உணர்த்த வேண்டிய பொறுப்பு இனப்படுகொலையில் இருந்து தப்பிப் பிழைத்த எல்லாருக்கும் உண்டு. இறந்தவர்களை நினைவு கூர்வது என்பது இங்கேதான் முழுமையடைகிறது. இறந்தவர்களின் ஆத்மா இந்த இடத்தில்தான் சாந்தியும் அடையும்.

இந்தியா செய்திகள்
India News

# நான்கு நாட்களில் தமிழகத்தில் 5 பத்திரிகையாளர்கள் கொரோனா நோய்த்தொற்றுக்கு பலி



## சென்னை பத்திரிகையாளர் மன்றம் ஆழ்ந்த இரங்கல்!

கடந்த 08.05.2021 அன்று கன்னியாகுமரி மாவட்டம் அருமனை தினகரன் செய்தியாளர் திரு. டென்சன் (வயது 50) கொரோனா நோய்த் தொற்றுக்கு பலியானார். அதே நாளில் மதுரையில் முன்னாள் தினகரன் நாளிதழ் மூத்த பத்திரிகைப் புகைப்படக் கலைஞர் மற்றும் மதுரை செய்தியாளர் சங்கத் தலைவராக நீண்டகாலம் சேவையாற்றிய திரு. நம்பிராஜன் (வயது 64) கொரோனா நோய்த்தொற்றுக்கு பலியாகியுள்ளார். அடுத்த நாளே 09-05-2021 அன்று மதுரையில் (முன்னாள் தி இந்து, டிடி நெக்ஸ்ட் நாளிதழ்களின் நிருபர்) பத்திரிகையாளர் திரு. சரவணன் (வயது 48) கொரோனாவிற்கு பலியாகி உள்ளார்.

திரு. ப.பிரபு (வயது 58) விகடன் குழுமத்தில் வடிவமைப்பாளராகப் பணியில் சேர்ந்து முப்பதாண்டுகளுக்கு மேலாக பணியாற்றி தலைமை வடிவமைப்பாளராக பணியாற்றியவர். மூத்த பத்திரிகையாளர்கள் திரு. மதன் மற்றும் திரு. ராவ் அவர்கள் நடத்தும் விகடகவி இதழின் வடிவமைப்பாளராக பணியாற்றி வந்தவர். கொரோனா நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டு சென்னை ஓமந்துரார் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்தார். கடந்த 10-05-2021 அன்று சிகிச்சை பலனளிக்காமல் இயற்கை எய்தினார்.

நேற்றைய தினம் (11.05.2021) அன்று கோயம்பத்தூர் மாவட்டம் சூளுர் பகுதி மாலைமலர் செய்தியாளர் திரு.மணி (வயது 47) கொரோனா நோய்த்தொற்றுக்கு பலியாகியுள்ளார்.

இப்படி கடந்த நான்கு நாட்களில் தமிழகத்தில் ஐந்து பத்திரிகையாளர்கள் கொரோனா நோய்த்தொற்றுக்கு பலியாகியுள்ளது பெரும் வேதனையைத் தருகிறது. முன்களப் பணியாளர்களாக - கொரோனா விழிப்புணர்வு பணியில் ஈடுபட்டு வரும் பத்திரிகையாளர்கள் கொரோனா நோய்த் தொற்றுக்கு பலியாவது மிகப் பெரிய வேதனையைத் தருகிறது. ஐந்து பத்திரிகையாளர்களின் மறைவுக்கு சென்னை பத்திரிகையாளர் மன்றம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

மறைந்த பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு தமிழக அரசு நிவாரண நிதியுதவியை வழங்கிட வேண்டுகிறோம்.

கொரோனா நோய்த் தொற்று பரவல் அதிகரித்து வரும் நிலையில் பத்திரிகையாளர்கள் நாம் நம்மை பாதுகாத்துக் கொள்வது மிக மிக முக்கியம். தனி மனித இடைவெளி, முகக்கவசம் உள்ளிட்ட அனைத்து தடுப்பு நடவடிக்கைகளும் மிக அவசியம்.

கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்படும் முன்களப் பணியாளர்களான பத்திரிகையாளர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு மருத்துவமனைகளில் இடம் கிடைப்பது பெரும் சிரமமாக உள்ளது. காவல்துறையினருக்கு உள்ளதைப் போன்று தனியாக சிறப்பு சிகிச்சை முகாமை அமைத்திட தமிழக அரசு முன்வர வேண்டும் என்று நம்பிக்கையுடன் வேண்டுகிறோம். இதே கோரிக்கையை கடந்த ஆட்சிக் காலத்தில் முன்வைத்தும் எவ்வித பலனுமில்லை. இந்த அரசு செய்யும் என்று நம்புகிறோம்.

ஒவ்வொரு இரங்கற் செய்தியும் பெரும் வேதனையைத் தரும் நிலையில் நான்கு நாட்களில் ஐந்து பத்திரிகையாளர்கள் கொரொனாவிற்கு பலியானது சொல்ல முடியாத வேதனையைத் தருகிறது. பத்திரிகையாளர்கள் நலனை பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்க தமிழக அரசை வேண்டுகிறோம்.

நாமும் நம்மை பாதுகாத்துக் கொள்ள கவனம் தேவை.

ஆழ்ந்த துயரங்களுடன்
பாரதிதமிழன்
இணைச்செயலாளர்
சென்னை பத்திரிகையாளர் மன்றம்

# தமிழ்நாடு அரசின் வேண்டுகோளுக்கு ஏற்ப முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான ஆதரவை வழங்க முன்வந்துள்ள கனடிய தமிழர் பேரவை

தற்போது புதிதாக பதவியேற்றுள்ள மு. க. ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் வேண்டுகோளுக்கு ஏற்ப முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான ஆதரவை உலகெங்கும் உள்ள தமிழ் மக்களிடமிருந்து எதிர்பார்ப்பதாக விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோளையடுத்து, கனடாவில் இயங்கிவரும் கனடிய தமிழர் பேரவை நிதி சேகரிப்பதற்கு முன்வந்துள்ளது என்ற செய்தி தற்போது வெளியாகியுள்ளது. தமிழன்பர்கள் பலர் தங்கள் பங்களிப்புக்களை இணையவழி ஊடாக வழங்கி வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

மேற்படி நிதி சேகரிப்பிற்கான வழி முறைகள் உள்ள அறிவித்தல் இத்துடன் காணப்படுகின்றது.

அண்மையில் கனடியத் தமிழர் பேரவையால் முன்னெடுக்கப்பட்ட “ரொரன்ரோ பல்கலைக் கழக தமிழ் இருக்கை”க்கான நிதி அன்பளிப்பு வழங்கியவர்களில் தமிழ்நாடு அரசும் தமிழ்நாட்டின் திராவிட முன்னேற்றக் கழகமும் தனித்தனியாக நிதி அன்பளிப்புக்களை வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

---------------------------------------



## Appeal to support Tamil Nadu (India) to contain the spread of COVID-19.

The COVID-19 pandemic has been spreading in India at a very alarming rate with new evolved variants causing mass infections in recent days. We are witnessing horrific images and news coming out of India daily with Tamil Nadu being one of the worst impacted states in India. Currently the Tamil Nadu state is in the midst of 2 week complete lockdown and is reporting 152,389 active COVID-19 cases of whom 31,410 are on oxygen support.

Yesterday May 12th 2021, the state government of Tamil Nadu made an urgent and public appeal for donations to the Chief Minister's Public Relief Fund (CM-PRF). This fund will only be spent for increasing oxygen beds at hospitals, uninterrupted supply of life-saving drugs and life-saving gas, improving the infrastructure of hospitals, purchasing vaccines and other much needed medical supplies.

On behalf of Tamil Canadians, the Canadian Tamil Congress (CTC) is committing its support to the Tamil Nadu government's efforts to contain the COVID-19 spread and ease the suffering of the people of Tamil Nadu.

At this time, we are requesting everyone's generosity once again to support the dire needs arising from COVID-19's ongoing spread in Tamil Nadu. Your generous donations will help save lives of some of the most vulnerable in Tamil Nadu with the purchase of much needed medical supplies.

Please circulate this request and urge your friends and families to help show our solidarity and timely support to the people of Tamil Nadu at this time of unimaginable suffering. A donation of any size will go a long way.

We are hoping to conclude this Tamil Canadians COVID-19 fundraising effort for Tamil Nadu, India by May 17th 2021.

**Donate Now: https://gofund.me/0fc4e9db**

உலக செய்திகள்
World News

# ரஷ்யாவில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் சிறுவர்கள் ஆசிரியர்கள் என பலரும் கொல்லப்பட்டுள்ளனர்

உலகில் அமெரிக்காவை விட மிகவும் அரிதாகவே பாடசாலைகளில் துப்பாக்கிச் சூடுகள் இடம்பெறுவதுண்டு என்று கருதப்படும் நிலையில் திடீரென ரஷ்யாவின் கசான் என்னும் நகரில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் சிறுவர்கள் மற்றும் ஆசிரியர்கள் என பலரும் கொல்லப்பட்டுள்ளனர்.




இந்த தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றி மாறுபட்ட செய்திகள் வெளியான நிலையில் குறைந்தது ஏழு சிறுவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக உத்தியோகபூர் அறிக்கை தெரிவித்துள்ளர். காயமடைந்த பலரும் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் நான்கு ஆண்கள் மற்றும் மூன்று பெண்கள் இருப்பதாக கசானை தலைநகராகக் கொண்ட டடர்ஸ்தான் குடியரசின் ஆளுநகர் ரஸ்தான் மினிகோவா தெரிவித்துள்ளார்.

நான்கு மாடிகள் கொண்ட அந்த பாடசாலையில் இருந்து சரமாரியாக துப்பக்காச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தபோது மூன்றாவது மாடியில் இருந்து இரண்டு சிறுவர்கள் கிழே குதிப்பது வீடியோ ஒன்றில் பதிவாகியுள்ளது.

இரு துப்பாக்கிதாரிகள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டிருப்பதாக இன்டர்பெக்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்த அதேநேரம் ஒரு துப்பாக்கிதாரி மாத்திரமே இருந்ததாக வேறு செய்திகள் தெரிவிக்கின்றன.

பாடசாலை கட்டடத்திற்கு வெளியில் இளைஞர் ஒருவரை பொலிஸ்தார் தரையில் படுக்க வைத்திருக்கும் படங்களை சமூக ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

“19 வயதான பயங்கரவாதி ஒருவர் கைது செய்யப்பட்டார். துப்பாக்கி அவரது பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அவருடன் தொடர்புபட்ட ஏனைய கூட்டாளிகள் பற்றி விசாரணை நடத்தப்பட்டு வருகிறது” என்று அந்த பாடசாலைக்கு வந்த மினிகோவா தெரிவித்தார்.

மேலும் துப்பாக்கிதாரிகள் தலைமறைவாக இருக்கிறாரர்களா என்பது உறுதி செய்யப்படவில்லை.

இந்த துப்பாக்கிச் சூட்டை அடுத்து துப்பாக்கி கட்டுப்பாட்டு சட்டத்தை மீளாய்வு செய்யும்படி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உத்தரவிட்டுள்ளார்.

மொஸ்கோவின் கிழக்காக சுமார் 800 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் கசான் நகரில் இருக்கும் அனைத்து பாடசாலைகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

ரஸ்யாவில் 2018 ஆம் ஆண்டு கிரிமியா பிராந்தியத்தில் கல்லூரி ஒன்றில் மாணவர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 19 பேர் கொல்லப்பட்ட நிலையில் அந்த மாணவர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டான் என்ற சம்பவத்திற்குப் பின்னர் இடம்பெற்ற மிகவும் மோசமான பாடசாலைப் படுகொலை இதுவென மாகாணத்தின் உயர் அதிகாரிகள் அறிக்கை யொன்றில் தெரிவித்துள்ளனர்.

# “இலங்கை சிறைகளிலுள்ள நிலைமையை ஆராய ஐசிஆர்சி உடனடியாக விஜயம் செய்ய வேண்டும்'' கோவிட் தொற்று அதிகரிக்கும் நிலையில் - சிபிஆர்பி கோரிக்கை

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



**நீ**ண்ட காலமாகத் தமிழ் அரசியல் கைதிகள் உட்பட ஏராளமானோர் தொடர்ந்தும் விசாரணைகளின்றி பல சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அப்படி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் பலர் கொடிய கொரோனோ தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் அல்லது ஆளாகக் கூடும் எனும் அச்சங்கள் கைதிகளின் உறவினர்கள் மத்தியில் பரவியுள்ளது.

தமது உறவுகளின் பாதுகாப்பு குறித்து அவர்கள் பெரும் விசனமும் கவலையும் கொண்டுள்ளனர் கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் கோரி அவர்கள். தொடர்ச்சியாக அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்தும் இதுவரை எவ்வித பலனுமில்லை என்று உறவினர்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் மிகவும் வேகமாக கொரோனா தொற்று பரவி வரும் நிலையில் தடுப்பூசிகளுக்கான தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து தடுப்பூசிகளை வாங்கும் திட்டத்தில் பிரச்சனைகள் இருப்பதாகக் கூறிய இலங்கை அரசு இப்போது சீனாவிடமிருந்து பெருந்தொகையான தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய ஒப்பந்தம் செய்துள்ளது. இந்நிலையில் இலங்கையில் மிகவும் நெரிசலாக இருக்கும் சிறைச்சாலைகளில்



கோவிட்-19 தொற்று விரைவாக அதிகரித்து பரவி வரும் நிலையில், அதை தடுக்க சர்வதேச தலையீடுகள் தேவை என்று சிறையிலுள்ளோர் உரிமைகளுக்கான முன்னணி அமைப்பு ஒன்று குரல் கொடுத்துள்ளது.

சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு (சிபிஆர்பி) இது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு (ஐசிஆர்சி) கடிதம் ஒன்றை எழுதியுள்ளது. கொடூரமான இந்த உயிர்க்கொல்லி வைரசின் தாக்கத்தால் இலங்கை சிறைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியையும் பதற்ற சூழலையும் நேரில் வந்து காணுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக தெற்கு இலங்கையிலுள்ள ஒரு சிறைச்சாலையில் கைதிகள் அதிகாரிகள் சுகாதார வழிமுறைகளை நடைமுறைப்படுத்த தவறிவிட்டனர் என்று கூறி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதை அவர்கள் சுட்டிக்காட்டி அவர்களின் சிறப்பு கவனத்தை ஈர்த்துள்ளனர்.

“கடந்த சில வாரங்களாக சிறைகளில் அதிகரித்து வரும் கோவிட்-19 தொற்று அதிகரித்து வரும் நிலையில், சிறைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக இதை எழுதுகிறோம். குறிப்பாக அங்குனுகொலபெலஸ சிறையில் கோவிட் தொற்று காரணமாகப் பதற்றங்கள் அதிகரித்து கைதிகள் கூரை மீது ஏறி போராட்டங்களை நடத்துகின்றனர்” என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைப் பிரதிநிதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த கடிதத்தில் இலங்கைச் சிறைகளிலுள்ள நிலையும், கோவிட் தொற்றால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளும் விரிவாக எழுதப்பட்டுள்ளன.

“கோவிட்-19 தொற்றால் மிகவும் பாதிக்கப்பட்டு பலவீனமான நிலையிலுள்ளவர்களில் சிறைக் கைதிகளே அதிகம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

கோவிட் தொற்று பரவாமல் இருப்பதைத் தடுக்க முக்கியமானதொரு முன்னெச்சரிக்கை சமூக இடைவெளியைப் பேணுவது, இது சிறையில் அளவுக்கும் அதிகமாக கைதிகள் இருப்பதால் இடநெருக்கடி காரணமாக இதைப் பேணுவது இயலாத ஒன்று. மேலும் இங்கு போதி-ய சுகாதார வசதிகள் இல்லை, ஊட்டச்சத்தான உணவுக்கும் வழியில்லை. உடல் ஆரோக்கியப் பாதுகாப்பு பலவீனமாக உள்ளவர்களை மேலும் பாதிக்கிறது” என்பது உணரப்பட வேண்டும் என்று அந்தக் கடிதம் கவலை வெளியிட்டுள்ளது.

மேலும் இந்தக் கடிதத்தை எழுதியுள்ள சிபிஆர்பி அமைப்பின் தலைவரும் சட்டத்தரணியுமான சேனக பெரேரா சில ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளார்.

1. ஐசிஆர்சி அமைப்பு உடனடியாக அங்கு விஜயம் செய்து துரித கதி-யில் அங்குனுகொலபெலஸ சிறையிலுள்ள கைதிகளின் அச்சங்கள் குறித்த மதிப்பீடு ஒன்றைச் செய்ய வேண்டும்.

2. அதே போன்றதொரு மதிப்பீட்டை இதர சிறைகளிலும் மேற்கொள்ள வேண்டும்.

3. முடிந்த அளவுக்கு ஐசிஆர்சி, உடனடியாக நிவாரணம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எனினும் அதை அங்குள்ள கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு தடுப்பூசி செலுத்துவதோடு மட்டும் நிறுத்தாமல், அங்குள்ளவர்களுக்கு தேவையான தனிப்பட்ட பாதுகாப்பு உடை மற்றும் உபகரணங்கள், கைகளைச் சுத்தம் செய்வதற்கு சானிடைசர்கள், சுகா-தாரப் பராமரிப்புகள், போதியளவுக்கு ஊட்டச்சத்துடன் கூடிய உணவு, தொடர்பாடல் வசதிகள் போன்று வசதிகள் செய்து கொடுத்து சிறைச்சாலைகளில் கோவிட்-19 தொற்றுகள் பரவுவதைத் தடுக்கவும் கைதிகளின் அச்சங்களைப் போக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.


JDS
@JDSLanka

NOW: Prisoners of #Angunakolapalessa Prison in southern #SriLanka launch rooftop protest after repeated requests for safety measures to protect detainees from #Covid19 go unheard.
Read details in JDS Sinhala:
jdslanka.org/s/index.php/20...

4. கைதிகள் மற்றும் அவர்களது உறவினர்களுக்கு கோவிட்-19 தொற்றை தடுப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளைத் தெரிவிப்பது.

5. அனைத்து சிறைச்சாலைகளுக்கும் விஜயம் செய்யும் திட்டமொன்றை ஐசிஆர்சி வகுக்க வேண்டும். குறிப்பாக சிறைச்சாலை மருத்துவர்கள் ஐசிஆர்சி மற்றும் உரிய அரச அதிகாரிகளுக்கு நிலையை எடுத்துச் சொல்லி அவர்களின் கவனத்தை ஈர்த்து பிரச்சனைகளுக்குத் தீர்வு காண ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

கடந்த நவம்பர் மாதம் மஹர சிறைச்சாலையிலுள்ள கைதிகள் இந்தப் பெருந்தொற்றுக்கு எதிராக போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று கூறி போராட்டம் நடத்திய போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் கொல்லப்பட்டு நூற்றுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

இலங்கைச் சிறைகள் தற்போதுள்ள நிலை குறித்து மேலும் விவாதிக்க ஐசிஆர்சியுடன் ஒரு கூட்டமொன்றையும் அவர் வேண்டியுள்ளார்.



# உங்கள் கடன் மதிப்பீட்டை (Credit Rating) பாதுகாப்பது உங்கள் பொறுப்பாகும்




உங்களிடம் சிறந்த கடன் மதிப்பெண் இருக்கும்போது, அதைப் பாதுகாக்க உங்கள் மொத்த பொருளாதார ஆரோக்கியத்திற்கும் இது முக்கியமானது. உங்கள் மோசமான கடன் வரலாறு இந்த வழியில் உள்ளது என்பதை உறுதிப்படுத்த நீங்கள் செய்ய வேண்டிய சில விடயங்கள் கீழே உள்ளன.

• உங்களுக்கு புதிய கடன் மதிப்பெண்கள் தேவைப்படும்போது அதைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

புதிய கடன் மதிப்பீட்டைப் பெறுவது FICO மதிப்பெண்ணை எதிர்மறையான முறையில் பாதிக்கிறது. மதிப்பீட்டில் பத்து சதவிகிதம் "புதிய கிரெடிட்டில்" இருந்து தயாரிக்கப்படுகிறது, இது கடன் வழங்குநர்களால் கடன் எத்தனை முறை ஆய்வு செய்யப்பட்டது என்பதையும், உங்கள் கணக்குகளில் எத்தனை கணக்குகள் புதியவை என்பதையும் கவனத்தில் எடுத்துக்கொள்கிறது.

உங்கள் மதிப்பெண்ணில் மேலும் 15வீதம் உங்கள் கடன் அறிக்கையின் நீளத்தைக் கொண்டுள்ளது. சில புள்ளிகளுக்கு பெயரிட, இந்த வகை உங்கள் கடன் கணக்குகளின் வழக்கமான காலத்தைக் கருத்தில் கொள்கிறது, மேலும் நீங்கள் ஒரு புதிய கணக்கை ஒன்றாகச் சேர்க்கும்போது அது சாதாரணமாகக் குறைகிறது.

• மற்றவர்களுக்காக கடனுக்கு கையெழுத்திட வேண்டாம்.

உங்கள் பிள்ளைகளுக்கு அல்லது வர்த்தகப் பங்காளருக்கு கூட வேறு ஒருவருக்காக கடன் வழங்குவது குறித்து மிகவும் கவனமாக இருங்கள். அவர்கள் எந்தவொரு கட்டணத்தையும் தவறவிட்டால் அல்லது அதிக கட்டணம் செலுத்த முடியாவிட்டால், அது உங்கள் கிரெடிட் ஸ்கோர் பதிவில் காண்பிக்கப்படும், அதே போல் உங்கள் கிரெடிட் ஸ்கோரையும் பாதிக்கக்கூடும். ஒரு பொது விதியாக, நீங்கள் விரும்பினால் தவிர, எந்தவொரு நபருக்கும் எதையும் உத்தரவாதம் செய்யாதீர்கள், அதேபோல் நீங்கள் திருப்பிச் செலுத்துவதை உங்களுக்கே சொந்தமாக எடுத்துக்கொள்ள முடியும்.

• உங்கள் விவரங்களின் பட்டியலைப் எப்போதும் பராமரிக்கவும்.

உங்களுடைய ஒவ்வொரு கடன் அட்டையும் கொண்ட உங்கள் பணப்பையை யாராவது திருடும்போது அல்லது தற்செயலாக இழக்கும்போது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள், இணையத்தில் உங்கள் ஒவ்வொரு கணக்கையும் பார்த்து தொடர்புத் தகவலைக் கண்டறிய நீங்கள் முயற்சி செய்யலாம், இன்னும் சிறிது நேரம் ஆகலாம், அத்துடன் பல இணையத் தளங்கள் உங்கள் உண்மையான அட்டை எண்ணைக் காட்டாது.

எனவே, உங்கள் அட்டை எண்கள், காலாவதி தேதிகள் மற்றும் அழைப்பு தொலைபேசி எண்கள் ஆகியவற்றின் காகித சரிபார்ப்பு பட்டியலை வைத்திருப்பது வழக்கமாக ஒரு சிறந்த ஆலோசனையாகும். இந்த வழியில், உங்கள் கடன் அட்டைகள் வேறு யாராலும் பாவிக்கப்பட்டால் அல்லது தொலைந்துவிட்டால், நீங்கள் முடிந்தவரை கணக்குகளை உடனடியாக நிறுத்தலாம். உங்களிடம் உள்ள பட்டியலை மறைவான ஒரு இடத்தில் வைத்திருப்பதை மனதில் கொள்ளுங்கள்.

• ஒருவேளை நீங்கள் உங்கள் "ஸ்டார்டர் கார்டுகளை" திறந்த நிலையில் வைத்திருக்க வேண்டும்.

பொதுவாக, கடன் வரலாறு இல்லாத நபர்களுக்காக உருவாக்கப்பட்ட அட்டைகள், ஒப்பீட்டளவில் அதிக வட்டி மற்றும் கட்டணங்கள், குறைந்த வரம்புகள் ஆகியவற்றைக் கொண்டிருப்பன, மேலும் வெகுமதி வழங்கும் போது அதிகம் பயன்படுத்த வேண்டாம். உங்கள் கிரெடிட் ஸ்கோர் மீண்டும் கட்டமைக்கப்படும்போது, அவற்றை மூடுவது மிகவும் கடினமாகும்.

ஆயினும்கூட, அவற்றைத் திறந்து வைத்திருப்பது ஒரு சிறந்த யோசனையாக இருக்கலாம், அவற்றைப் பயன்படுத்தாமலும் இருக்க வேண்டும். உங்கள் மதிப்பீட்டில் 15 வீதம் உங்கள் கடன் வரலாற்றின் நீளத்திலிருந்து வருகிறது என்று நாம் மேலே கூறினோம், எனவே உங்கள் பழைய கணக்கைத் திறந்து வைத்திருப்பதன் மூலம், உங்கள் மதிப்பெண்ணின் வளர்சிக்கு நீங்கள் உதவுவீர்கள்.

கிரெடிட் கார்டுகள் பற்றி குறிப்பிடும்போது, நீங்கள் பயன்படுத்தாமல் இருந்தாலும் உங்கள் கணக்குகளை ஒவ்வொரு முறையும் சரிபார்க்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அங்கு வருடாந்த செலவுகள் போன்ற கட்டணங்கள் இல்லை என்பதும், எந்தவொரு நபரும் உங்கள் அட்டையை மோசடியாகப் பயன்படுத்துவதில்லை என்பதற்கும் உத்தரவாதம். உங்கள் கடன் மதிப்பீட்டை பாதிப்படையச் செய்யும் வண்ணம் உங்கள் வருடாந்த கட்டணம் செலுத்த வேண்டியது என்பதை நீங்கள் உண்மையில் உணர வேண்டும். இதனால் உங்கள் கடன் வரலாறு கைவிடப்படுவது ஒரு அபத்தமான காரணியாகும். இது தொடர்பான எந்தவொரு கேள்விக்கும் gta-credit.com ஐப் பார்வையிடவும் அல்லது (416) 650-1100 என்னும் தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும்.

MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?



• நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
• கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
• வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
• நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
• CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
• உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
• உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
• உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3 | 800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2 | 306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6 | 110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7 | 201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3 |



Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

# முள்ளிவாய்க்கால் நினைவு நாள்: அரசியலாக்கப்படுகிறதா அஞ்சலி?

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



எச்சரிக்கை: இது இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள பல்வேறு தமிழர் தரப்புகளுடன் இடம்பெற்ற உரையாடல்களின் அடிப்படையில் எழுதப்படும் ஒரு பகுப்பாய்வு கட்டுரையாகும்.

---------

**நீ**த்தார் நினைவு நாளை அனுசரிப்பது மதங்கள், கலாச்சாரங்கள் ஆகியவற்றை கடந்த மறுக்க முடியாத உரிமையாகும். தலைமுறைகளைக் கடந்து அனுசரிக்கப்படும் இந்த நினைவுகள் காலப் போக்கில் வரலாற்றுப் பதிவுகளாக மாறுகின்றன.

இன்றளவும் கிராம தேவதைகள் மற்றும் பல குடும்பங்களுக்கு குலதெய்வமாக இருந்துவரும் ஐயனார், கருப்பண்ணசாமி, மாடசாமி, காத்தவராயன் போன்றோரை வழிபடுவதும் அவ்வகையில் சமூக மற்றும் குடும்ப நலன்களுக்காக வாழ்ந்து உயிர்த் தியாகம் செய்தவர்களே என்று ஆய்வுகளும் செவிவழி இலக்கியங்களும் கூறுகின்றன.

தனி நபர் இழப்புகள் அடிப்படையில் ஒரு குடும்பத்தைச் சார்ந்ததாகும். விதண்டாவாதத்திற்கு வேண்டுமானால் இதை மறுக்கலாம். ஆனால் யதார்த்தம் அதுவே. ஒரு பொது நோக்கத்திற்காக சமூகத்தில் சிலர் உயிர்த் தியாகம் செய்தால் அதை ஒரு அரசோ அல்லது தன்னார்வலர்களோ அல்லது உயிர் நீத்தவர்கள் கொண்டிருந்த கொள்கையில் பற்றுள்ளவர்களோ அனுசரிப்பதும் ஏற்புடையதே.

இதற்கு ஒரு உதாரணமாக - தமிழ் நாட்டில் அனுசரிக்கப்படும் "மொழிப் போர் தியாகிகள் நினைவு நாளை" குறிப்பிடலாம்.

ஆனால் இலங்கையில் நடைபெற்ற கொடூரமான உள்நாட்டுப் போரில், அரச படைகள் முன்னெடுத்த மிக மோசமான தாக்குதல்கள், அப்பட்டமான மனித உரிமை மீறல்கள், பாதுகாப்பு அளிப்பதாகக் கூறி அதை நம்பி வந்த மக்களின் உயிரைக் காப்பாற்றத் தவறியது என்று பல வழிகளில் ஏராளமான தமிழர்கள் கொல்லப்பட்டனர். அது மறுக்க முடியாதது. மீண்டும் சொல்கிறேன் அது மறுக்க முடியாதது.

அதேவேளை போரில் ஈடுபட்டிருந்த மறுதரப்பின் செயல்பாடுகளையும் அதனால் தேவையில்லாமல் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் தமிழ் மக்கள் எதிர்கொண்ட இன்னல்களையும் மறுக்க முடியாது. போரின் இறுதிக் கட்டத்தில் விடுதலைப் புலிகள் சில விட்டுக் கொடுப்புகளை செய்திருக்கலாம், போர் உத்திகள் மற்றும் தந்திரோபாயங்களை மாற்றி அமைத்திருக்கலாம், அப்படிச் செய்திருந்தால் தமிழ் மக்கள் கொல்லப்படுவது - இரு தரப்பாலும்- குறைந்திருக்கும் எனும் வாதங்களிலும் சில நியாயங்கள் இருப்பதாக இப்போது பலர் கூறுகின்றனர்.



இரு தரப்பும் இறுதிக்கட்ட போரின் போது விட்டுக் கொடுப்புகளை செய்திருந்தால் முள்ளிவாய்க்கால் "சிவந்த மண்ணாக" மாறியிருக்காது. ஆனால் அது காலத்திற்கும் "வலி சுமக்கும் மண்ணாக" இன்று காட்சியளிக்கிறது. அந்த மண்ணைக் காட்டிலும் கூடுதல் வலி-யையும் வடுக்களையும் சுமந்து நிற்கும் மக்கள் ஆயிரக்கணக்கில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ளனர்.

இன்று முள்ளிவாய்க்கால் ஒரு நினைவிட பூமி என்பதைக் காட்டிலும் பல் தரப்பினர் தமது ஆளுமையை நிலைநிறுத்திக் கொள்ள நகர்வுகளை முன்னெடுக்கும் ஆடுகளமாக மாறியுள்ளது.

ஆம் முள்ளிவாய்க்கால் மண் இன்று பலரது ஆடுகளம்.

சகிப்புத் தன்மை சற்றும் இல்லாத அரசு ஒருபுறமும், "தன்மானம் மற்றும் தாயக விடுதலைக்காக உயிரிழந்தோரை" வைத்து இலாபம் தேட முற்படும் சிலர் ஒருபுறமும், தமது அடிப்படை நியமங்களிலிருந்து சற்று விலகி நினைவேந்தல் நிகழ்வைக் கையகப்படுத்துகிறார்கள் எனும் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள மத குருமார்கள் ஒருபுறமும், "பிண அரசியல்" செய்யும் அரசியல்வாதிகள் ஒருபுறமும் என்று பல்வேறு தரப்புகள் தமது வலிமையை காட்டும் ஒரு இடமாக மாறியுள்ளது அந்த "சிவந்த மண்".

அனைவருக்கும் தமது செயல்பாடே நியாயமாகத் தோன்றும். அதையொட்டியே அவர்களின் வாதங்களும் அமையும்.

இதிலுள்ள வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பாற்பட்டு கடந்த ஓரிரு நாட்களில் அங்கு நடந்த விஷயங்களை பார்த்தால் இந்த "ஆடுபுலி ஆட்டத்திலுள்ள" நெளிவு சுளிவுகளைப் புரிந்து கொள்ள முடியும்.

கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் பரபரப்பான காட்சிகள் அரங்கேறின. அங்கு கடந்த சில ஆண்டுகளாக நடைபெ-றும் நினைவேந்தல் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை தமிழ் தரப்பு முன்னெடுக்க - அவர்கள் எதைச் செய்தாலும் அதைத் தடுக்க வேண்டும் என்கிற ஒரே நோக்கில் செயல்படும் பாதுகாப்புப் படைகள் - வழக்கம் போல அதை எதிர்த்ததும் நடைபெற்றது. ஆனால் இம்முறை இரு தரப்பிலும் சற்று உக்கிரம் கூடியிருந்தது.

தமிழர் தரப்பு அங்கு தீபம் ஏற்றுவதற்காக வைக்கப்பட்டிருந்த தூபியை புதுப்பித்து ஏற்பாடுகளைச் செய்வதோடு மட்டுமின்றி சில வாசகங்களை செதுக்கியிருந்த இராட்சத கற்பாறை ஒன்றை அங்கு நிரந்தர நினைவுச் சின்னமாக வைக்கும் நடவடிக்கையில் கத்தோலிக்க மத குருமார்கள் தலைமையி-லான குழுவொன்று இறங்கியது.



ஆனால் அந்தக் காணி யாருக்குச் சொந்தம்?

மிக முக்கியமான இந்தக் கேள்விக்கு இதை முன்னெடுத்த தரப்பிலிருந்து பதிலில்லை. அவர்கள் மீண்டும் மீண்டும் உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதற்கு எமக்கு உரிமையில்லையா என்கிற கோஷத்தையே முன் வைத்தது.

தனியார் காணியில் அதன் உரிமையாளர் சட்டத்திற்கு உட்பட்டு என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அது தவறில்லை அதை யாரும் தடுக்கவும் முடியாது. ஆனால் போரிலும் போர்க்காலத்திலும் உயிரிழந்த தமிழ் மக்களை நினைவு கூர்வதற்கு உரிமையிருக்கும் அதேவேளை, அரசுக்குச் சொந்தமான காணியில் விரும்பியபடி நினைவுச் சின்னங்களை அமைக்க முடியுமா என்கிற கேள்விக்கு இது வரை காத்திரமான பதிலில்லை.

அரச தரப்பிலிருந்து உயிரிழந்தவர்களை உங்கள் வீடுகளில் நினைவு கொண்டு அஞ்சலி செலுத்துவதற்குத் தடையில்லை என்று கூறியுள்ளது. அவர்களுக்கு ஆட்கள் கூடுவதைத் தடை செய்வதற்கு இம்முறை "கொடிய கொரோனா" ஒரு உபாயமாக அமைந்து விட்டது. கொரோனோ தொற்று இல்லையென்றால் இராணுவம் வேறு காரணங்களை கண்டுபிடித்திருக்கும். அவர்களுடைய ஒரே நோக்கம் - தமிழர்கள் எதையும் செய்யக் கூடாது, செய்ய முடியாது, செய்வதற்கு அனுமதி அளிக்கப்படாது, மூச்சு விடுவதைக் கூட முன் கூட்டியே அனுமதி பெற்றே செய்ய வேண்டும் என்பதே.

இதேவேளை இந்த வாரத்தின் முற்பகுதியில் தமிழர்களின் பாரம்பரிய பூமியான குருந்தூர்மலைப் பகுதியில், பௌத்த பிக்குமார் 29 பேர் வந்து அங்கு புதிய விகாரை ஒன்றை நிறுவுவதற்கான முன்னேற்பாடாக இராணுவத்தின் உதவியுடன் இரவு முழுவதும் "பிரித் ஓதியுள்ளனர்". அந்த நிகழ்வில் அரசு கூறியுள்ள கொரோனா கட்டுப்பாட்டு விதிகள் ஏதும் பின்பற்றப்பட்டதற்கான அறிகுறிகள் ஏதுமில்லை. அவர்களுக்கு எவ்விதமான சட்டதிட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் பொருந்தாது என்பது போல நடந்து கொண்டனர். கோரோனா பிக்குகளையும், அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுக்கும் இராணுவத்தினரையும் தாக்காது என்று அவர்கள் நம்புகின்றனர். ஆனால் கண்ணுக்குத் தெரியாத அந்தக் கிருமி ஆண்டிக்கும் அரசனுக்கும் வித்தியாசம் பார்ப்பதில்லை.



பிக்குமாரும் இராணுவமும் எதைச் செய்தாலும் அது சரி என்கிற ஒரு நிலையே நாட்டில் நிலவுகிறது. மிகவும் ஆபத்தான அந்த நிலைப்பாடு பேரழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்தால் அது நாட்டுக்கு நல்லது.

நகைச்சுவை நடிகர் வடிவேலு ஒரு திரைப்படத்தில் "கிணற்றைக் கானோம்" என்று கூறுவது போலுள்ளது முள்ளிவாய்க்காலில் "கல்லைக் கானோம்" என்பது. சர்ச்சைக்குரிய வாசகங்களைக் கொண்ட அந்த ராட்சத கல் முள்ளிவாய்க்கால் நினைவிடத்திற்கு வந்திறங்கிய போது அங்கிருந்தவர்கள் அதை ஏற்பாடு செய்த பொதுக் கட்டமைப்புக்கு தலைமையேற்பதாகக் கூறப்படும் கத்தோலிக்க குருமார்களும், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் மட்டுமே அங்கிருந்தனர். அந்தக் கல்லை இறக்குவது குறித்த சூடான வாக்குவாதங்கள் புதன்கிழமை இரவு இடம்பெற்ற பிறகு வியாழக்கிழமை காலை வந்து சட்டப்படி அதை எதிர்கொள்ளலாம் என்ற நிலையில் சென்ற ஏற்பாட்டாளர்கள் காலையில் வந்து பார்த்த போது கல்லைக் காணவில்லை.

வழக்கம் போல இராணுவம் "கல்லைக் காணோம்" என்பதற்கும் தமக்கும் தொடர்பில்லை என்கிற பல்லவியைப் பாடியது. அப்படியானால் அந்தக் கல் எங்கே? அது தானா உருண்டோடி கடலில் சங்கமித்து விட்டதா அல்லது வெட்டியெடுக்கப்பட்ட மலையில் போய் ஒட்டிக் கொண்டதா? யாமறி-யோம் பராபரமே!

இலங்கை அரசும் இராணுவமும் கடந்த காலங்களிலிருந்து பாடங்களை கற்று கொண்டதாகத் தெரியவில்லை. போர் முடிந்து 12 ஆண்டுகள் ஆகின்றன. கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் "இனி நாட்டில் பயங்கரவாதச் செயல்பாடுகளுக்கு வாய்ப்பே இல்லை" என்று கூறும் அரசு, ஆண்டுக்கு ஒரு நாள் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் அவர்களை நினைவு கூர்ந்து ஒரு பொது இடத்தில் ஒன்றுகூடி அஞ்சலி செலுத்த அனுமதிக்கலாமே. அதில் அவர்களுக்கும் என்ன பிரச்சனை இருக்க முடியும். அவர்கள் தாமாக முன்வந்து அஞ்சலியை பிரச்சனையின்றி செய்யுங்கள் அதற்கு வேண்டிய அனுசரணைகள், பாதுகாப்புகளை நாங்கள் தருகிறோம் என்று கூறலாமே! அதைவிட்டு வரிந்துகட்டிக் கொண்டு நிற்பதால் மனக்கசப்பு மேலும் வளருமே தவிர இணக்கப்பாடு ஏற்படாது.

கடந்த பிப்ரவரி மாதம் இடம்பெற்ற பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பயணத்திற்கு தமிழர் தரப்பு கொடுத்த விளம்பரத்தை தவிர இராணுவத் தரப்பு தமது கடும்போக்கு நிலைப்பாடு காரணமாகக் கொடுத்த எதிர்மறையான விளம்பரமே அதன் வெற்றிக்குப் பெரிதும் உதவியது. அதை அரசும் இராணுவமும் கண்டும் காணாமலும் விட்டிருந்தால் மழைக்கு இடையே அந்த நிகழ்வே பிசுபிசுத்துப் போயிருக்கும் என்று கூறும் தமிழர்களும் உள்ளனர்.




அதேபோன்று தமிழர் தரப்புக்கு உயிரிழந்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதே முக்கியம், குறிப்பாக கொரோனோ காலத்தில் அதை வீட்டிலேயே குடும்பத்துடன் அமைதியாக கடைப்பிடிக்க முடியும். அல்லது ஆலயங்களுக்குச் சென்று அங்கு வழிபாடு செய்து தமது மனதை சாந்தப்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் அவர்கள் எடுப்பார் கைப்பிள்ளையாக அரசியல் இலாபத்திற்காகவும் சுயநலனுக்காகவும் இழுத்த இழுப்புக்கெல்லாம் ஈடுகொடுத்துச் செல்வது குறித்த கேள்விகளும் எழுகின்றன.


நோய்த் தொற்றுப் பரவலைத் தடுக்க பௌத்தர்களின் மிக முக்கியமான "வெசாக் திருவிழாவையே" இம்முறை பொதுவெளியில் கொண்டாடுவதை நிறுத்தியுள்ளது இலங்கை அரசு. அப்படியிருக்கும் போது ஏன் தமிழர்கள் தரப்பும் அதே நிலைப்பாட்டை எடுத்து வீடுகளிலோ அல்லது சிறு குழுவா-கச் சென்று ஆலயங்களிலோ அஞ்சலிகளைச் செலுத்தக் கூடாது என்கிற கேள்விகளிலும் நியாயம் இருக்கிறது.

"அந்த பெட்ரோமாக்ஸ் லைட்டே வேண்டும்" என்று தற்போதைய சூழலில் சிலர் வரிந்து கட்டிக் கொண்டு அடம் பிடிப்பது ஏற்புடையதாக இல்லை. அதேவேளை "விட்டுக் கொடுப்பார் கெட்டுப் போவதில்லை" என்பதை அரச தரப்பு உணர்வதில் தவறேதும் இல்லை.

போர் முடிந்துவிட்டது என்பதை இருதரப்பும் இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அந்தத் தெளிவு வந்துவிட்டால் பிரச்சனைகள் தானாக விலகிவிடும்.



## உங்களுடைய முறை விரைவில் வருகிறது.





ஒன்ராரியோவின் கோவிட்-19 தடுப்பூசி திட்டம் நோய் பரவலைத் தடுத்து உயிர்களைக் காக்க உதவுகிறது.

தினமும் ஆயிரக்கணக்கானோர் ஒன்ராரியோவில் தடுப்பூசி போட்டுக்கொள்கிறார்கள்.

தடுப்பூசி வேலை தொடரும்போது, நாமும் முகக் கவசம் அணிந்து, கைகளைக் கழுவி சமூக இடைவெளியைக் காக்கவேண்டும்.

300 மொழிகளில் உதவிபெற **ontario.ca/covidvaccineplan** க்கு செல்லுங்கள் அல்லது 1-888-999-6488 ஐ அழைத்து மேலும் தெரிந்துகொள்ளுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# MEDCENTRE HEALTH

SYNCHRONIZING HEALTH SECTORS

## New Services Started
## in
## Markham McNicoll Urgent Care Centre (MMUCC)
## and
## Markham McNicoll Family Care Clinic (MMFCC)



1. All the patient appointments can be booked on-line.
2. Virtual Care (Video or Phone Consultation) bookings available.

Visit: medcentrehealth.com

Phone: 416-609-3333




Carefirst Family Health Team

புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

+ தமிழ் பேசும் வைத்தியர்கள்

+ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.

+ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.

+ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்


+ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்

+ நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

Accredited with Commendation – Accreditation Agrément Canada

Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




இலங்கைக்கு வரும் முன்னர் அழகிய
திருகோணமலையை நினவிற் கொள்ளுங்கள்
TRINCOMALEE
BEACH RESORT & SPA
தற்போதைய கோரோனாத் தொற்றுக் காலத்தில் இலங்கைக்கு
பயணம் செய்யும் போது சில நாட்கள் தனிமைப்படுத்தல்
அவசியமாகின்ற போது, எமது
TRINCOMALEE BEACH RESORT & SPA
உங்களுக்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்.
அதற்கு காரணம் இலங்கை அரசால் CERTIFIED LEVEL 1 என்னும்
தனிமைப்படுத்தலுக்கான அங்கீகாரத்தைப் பெற்ற ஹோட்டல் இதுவாகும்.
திருகோணமலைக்கு வரும்
முன்னர் TRINCOMALEE
BEACH RESORT & SPA வை
நினைவிற் கொள்ளுங்கள்
CERTIFIES LEVEL 01
SAFE & SECURE MODERN, ELEGANT
4-STAR RESORT OVERLOOKING THE
INDIAN OCEAN. ROMANTIC AND
CHARMING GATEWAY IN THE
TANTALIZING SHORES OF
TRINCOMALEE IN SRI LANKA.
GOVERNMENT APPROVED QUARANTINE(COVD 19) HOTEL
+94 77 041 0000(WhatsApp available)
+94 26 222 0200
trincomaleebeachresort.com


PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!
RE/MAX
Four Sixteen Whitby Condos
Old Colony Estates
Falconcrest Homes
Hillsborough
Andrin Homes
Anchor Woods
Regal Crest Homes
Anchor Woods By Andrin Homes
Andrin Homes
Hometown Sharon Village
Blue Sky
Fieldgate Homes
Universal City Condos 4
Chestnut Hill Developments
U.C. Homes
Tribute Communities
Cornell Rouge Homes
Forest Hill Homes Ltd.
On the Mark Towns
Stateview Homes
Angus Glen South Village Homes
Kylemore Communities
Victory Green Homes
Kensington Homes
Nao Towns
Stateview Homes
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX
COMMUNITY
Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9



## ஜீவன் முக்தி (பகுதி) 114

# கேள்வி - பதில்

*(சென்ற வார தொடர்ச்சி...)*

சக்தியை மேல் நோக்கி திருப்புவதை தீக்ஷையின் உதவியோடு நிச்சயம் சாத்தியமாக்கலாம். தனி மனிதனாய் செய்வதற்கு அசகாய சாதனையாக தெரியும். உணர்வு மலர்ச்சியை, தீக்ஷையின் உதவியோடு நிச்சயம் சாதிக்கலாம் ராமகிருஷ்ணரின் சாத்தியம் என்பது தீக்ஷையின் கோணத்திலிருந்து விளக்கப்படும் சத்யம், ஓசோவின் சாத்யமேயிலலை என்பது, தனி மனித கோணத்திலிருந்து விளக்கப்படும் சத்யம். தீக்ஷையையும், தனிமனித முயற்சியையும் ஒன்றாய் சேர்க்கும்போது, பிரபஞ்ச சக்தியின பொங்கும் பிரவாகமாக, பிரம்மச்சரிய நிலையில் வாழ்வது என்பது எல்லோருக்கும் சாத்தியமான சத்தியம்.

திருமணத்திற்குப் பிறகு.... ஏன்தான் திருமணம் செய்துகொண்டோம் என்றிருக்கிறது. வாழ்க்கையே வெறுத்துப் போய்விட்டது. குழப்பமாக இருக்கிறது.. இதனால் குடும்பத்திலும் பிரச்சனை புதிது புதிதாக வெடித்துக் கொண்டே இருக்கிறது. என்ன செய்வது.

சன்யாஸியாகப் போக வேண்டிய ஒரு மனிதர் தெரியாத்தானமாக சம்சாரியாகிப் போனால் என்றால் அதற்குப் பிறகு அவர் அவருக்கே செய்கின்ற கொடுமைகளும், அவருடைய மனைவிக்கு செய்கின்ற கொடுமைகளும் கொஞ்சம் நஞ்சமாக இருக்காது.

காரணம் என்னவென்றால், இந்த மனிதருக்கு அந்த வாழ்க்கை மேல் அவ்வளவு ஒரு ஆழமான திருப்தி இருக்காது. அப்போது அவர் என்ன செய்வார்?

எதற்குத்தான் இவள் என் பிராணனை வாங்குகிறாள், எதற்குத்தான் என்னை இந்தபாடு படுத்துகிறாளோ? என்று வாழ்க்கையல் ஒவ்வொரு விஷயமும் கசக்கும்.

அதேபோல் சம்சாரியாகப் போக வேண்டிய ஆழமான பிராரபதம் உடைய ஆள், திடிரென்று ஒருநாள் ஆஸ்ரமத்திற்கு வந்து பார்த்து, 'இவ்வளவு சன்யாஸ 'கள் ஆனந்தமாக இருப்பதைப் பார்த்து, பிரம்மச்சரிய வாழ்க்கை மேல் ஆசை வந்து, சம்சார ஆசையை துறந்து இந்த வாழ்க்கைகுள்ளே நுளைந்து விட்டார்கள் என்றால்... அவரையும் அவரைச் சுற்றி இருக்கின்ற சமூகத்தையும் அவர் படுத்துகின்ற பாடு இருக்கு பாருங்கள்... இந்தக் கொடுமையும் தாங்காது. பாவம் அவர் திருட்டுத்தனமாக எல்லா வேலையையும் செய்ய வேண்டி இருக்கும். அந்த முடிவால் தன்மேல் தனக்கே இருக்கின்ற மரியாதை குறைந்துகொண்டே வரும்.

நான் எப்போதுமே இதைத்தான் சொல்லுவேன், என்னுடைய பிரமச்சாரிகளிடம் ' அப்பா, தெளிவாக முடிவு எடுத்து, பிரமச்சரியமா? கிரஹஸ்தமா? என்று முடிவு செய்யுங்கள். ஏனென்றால் என் கூட இருக்க வேண்டுமென்ற ஆசையினால் முடிவெடுக்காதீர்கள். இது ஆஸ்ரம வாழ்க்கை, ஆக வாழ்க்கையில் சந்திக்கும் சராசரி கஷ்டங்கள் இங்கு இருக்காது ரொம்ப சுகபோக வாழ்க்கை, வெளியில் இருக்கின்ற மாதிரி நிறையக் கஷ்டம் இருக்காது.

இராமன் ஆண்டால் என்ன?
இராவணன் ஆண்டால் என்ன?
கேஸ் விலை ஏறினால் என்ன?
டெலிபோன் பில் ஏறினால் என்ன?
பெட்ரோல் விலை ஏறினால் என்ன?
பெற்றோல் ஊற்றுகின்ற வண்டியின் விலையே ஏறினால்தான் என்ன?

என்ற கவலையே இல்லாத வாழ்க்கை.

வெளியுலகக் கஷ்டங்களே இல்லாத வாழ்க்கை. இந்த மாதிரியான வாழ்க்கைக்காக, சன்யாஸ விரதம் எடுத்தால் என்ன செய்ய வேண்டி இருக்கும்?

வெளியுலக கஷ்டங்களின்றி வாழ்ந்தாலும் அவர்களுடன் அவர்களே கஷ்டப்பட்டுக் கொண்டு இருப்பார்கள். அவர்களுக்குள்ளேயே அவர்கள் போட்டுக்கொள்கின்ற சண்டையாலே ரகசியமாக, திருட்டுத்தனமாக அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய மனம் திட்டமிடத் துவங்கும். அப்பொழுது என்னவாகும்? தன் மேலேயே நம்பிக்கையும், மரியாதையும் இருக்காது. அதுதான் இருப்பதிலேயே கொடுமையான நரகம். கொடுமையான நரகம் என்னவெனறால், தான் எடுத்த வாழ்க்கையின்மீது, தனக்கு நம்பிக்கை இல்லாமல் வாழ்வது. தான் எடுத்த வாழ்க்கை, தனக்கு முழுமை அளிக்கும் என்கின்ற தெளிவு இல்லாமல் வாழ்வதுதான் மிகப்பெரிய கொடுமை.

அதனால்தான் நான், யாருக்கும் அவ்வளவு சீக்கிரம் பிரம்மச்சரியம் கொடுப்பதே இல்லை. பூரணாபிஷேக விரதத்திலே வாழ வைத்து அவர்களே அவர்களைப் பார்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக் கொடுக்கிறோம். அவர்களின் பிராரப்தத்தைத் தெரிந்து கொண்டு அவர்களுக்குத் தேவையான வாழ்க்கையை அவர்களே தேர்ந்தெடுக்கத் தேவையான தெளிவையும் தருகிறோம். திருமணத்திற்கு பின் ஏன்தான் சந்யாஸம் எடுத்துக் கொண்டோமோ என யோசிப்பதும் மிகவும் கொடுமையான சம்பவங்கள்.

திருமணமாக வேண்டியவர் சந்நியாசியாக கூடாது. சந்நியாஸியாக வேண்டியவர் திருமணம் செய்து கொள்ளகூடாது.

இதையெல்லாம் தாண்டி.....உங்களின் அடையலாமா? வேண்டாமா? என்ற உங்களின் சுயமுடிவுதான் நீங்கள் எடுக்கும் முடிவு. அது திருமணமாக இருந்தாலும், துறவறமாக இருந்தாலும் அதை முழுமையாய் வாழ்ந்து தாண்ட வைக்கும். குண்டலனி சக்தி உடல் முழுவதும் பாயாவிட்டால், உழுத்துப்போன மூங்கிலாய்த்தான் வாழ்வு இருக்கும்.

நடைபிணமாய்த்தான் வாழ்வு இருக்கும் நடக்க கூடிய அளவுக்கு சக்தி படைத்தவர் யாராயிருந்தாலும், அவரால் தன்னுள் இருக்கும் குண்டலினி சக்தியை எழுப்ப முடியும். தேவதை உடலுக்குள் புகுந்து கொண்டால் எப்படியிருக்குமோ, அதைவிட ஆனந்தமான நிலையை ஒவ்வொரு நிமிடமும் வாழமுடியும். விதியை நிச்சயம் வெல்ல முடியும்.

*(தொடரும்...)*

----

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

***பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்***

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080




## கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# உரும்பிராய் இரசாயன உரக் கலப்பற்ற வீட்டுத் தோட்ட முகவர் நிலையத்தின் முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் உரும்பிராயில் சில வருடங்களுக்கு முன்னர் கனடாவில் வாழும் திரு. சிவக்கொழுந்து மகேந்திரனால் ஆரம்பிக்கப்பெற்ற இந்த இரசாயன உரக் கலப்பில்லாத வீட்டுத் தோட்ட முகவர் நிலையம் ஆயிரக்கணக்கான காய்கறிக் கன்றுகளை இயற்கைப் பசளை கொண்டு வளர்த்து மக்களுக்கு விநியோகிக்கத் தொடங்கியுள்ளது.

அங்கு மிகக் குறைந்த விலைக்கே இந்தக் கன்றுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

கத்தரி, மிளகாய், வெண்டைக்காய், கறி மிளகாய், பாகற்காய் புடோல், போன்ற பல வகை காய்கறிக் கன்று இங்கு விதை போட்டு வளர்க்கபபட்டு தற்போது விநியோகம் செய்யப்படுகின்றன.

இவ்வாறான கன்றுகளின் ஒரு தொகுதியை அங்குள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்கி ஆதரவு வழங்க வேண்டும் என்பதே திரு. சிவக்கொழுந்து மகேந்திரனின் நல்லெண்ணம் ஆகும். இதன் மூலம் அங்கு வறுமையில் உள்ளவர்களுக்கு வாழ்வாதாரத்தையும் நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்கலாம்.






## ஒரு குடும்பத்திற்கு 100 டாலர்கள் போதுமானது

யாழ்ப்பாண மாவட்டத்தில் எந்த ஒரு கிராமத்திலும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இவ்வாறான காய்கறிக் கன்றுகளை இலவசமாக வழங்க உதவி புரிய விரும்பும் அன்பர்கள் மற்றும் அமைப்புக்கள் இந்த முயற்சிக்கு ஆதரவளிக்கலாம்.

கனடாவில் திரு. சிவக்கொழுந்து மகேந்திரனை அழைக்கவும்: **(437) 335-5424**



# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

**0%வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




**தமிழில் தொடர்புகளுக்கு:**

**வசந்தி சிவராஜா - 416-616-3077**

## எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**
றொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# “ஊரடங்கு காலத்தில் தேவையில்லாமல் வெளியில் சுற்றுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை பாயும்“

## தமிழக காவல்துறை எச்சரிக்கை

_தமிழகத்தில் கரோனா பரவலைக் கட்டுப்படுத்த முழு ஊரடங்கு அமலில் உள்ள நிலையில், இதுவரை ஒலிபெருக்கிகள் மட்டுமே மக்களுக்கு அறிவுரை செய்துவந்த காவல்துறை நாளை முதல் விதிமுறை மீறுவோர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்திருக்கிறது.இது தொடர்பாக தமிழக காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

கொடிய கரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் தமிழ்நாடு முழுவது முழு ஊரடங்கலை அரசு அறிவித்தது. பொதுமக்கள் தங்களது அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே வெளியே வரவேண்டும் என்றும் கரோனா பரவாமல் இருக்க முகக்கவசம் அணிவது, கிருமிநாசினி கொண்டு கைகளைக் கழுவுவது, சமூக இடைவெளியைக் கடைபிடிப்பபது மற்றும் இதர அறிவுரைகளை பொதுமக்கள் பின்பற்றவும் அறிவுறுத்தப்பட்டது.10.05.21 முதல் இன்று வரை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து இடங்களிலும் காவல்துறையினர் கடந்த நான்கு நாட்களாக ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொதுமக்கள் மேற்கூறிய அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டும் என்று தொடர்ந்து அறிவுரைகள் வழங்கி வந்துள்ளனர்.



இவ்வறிவுரைகளைப் பொதுமக்கள் ஒரு சிலர் சரியாகவும் ஒழுங்காகவும் பின்பற்றாததால் கொடிய தொற்று மேலும் பரவுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.நாளை முதல் முழு ஊரடங்கு உத்தரவை மீறி தேவையில்லாமல் வெளியில் வாகனங்களில் வரும் மற்றும் நடமாடும் நபர்கள் மீது தகுந்த சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எச்சரிக்கப்படுகிறது.தமிழக அரசின் அறிவுரைகளைப் பின்பற்றி கரோனா தீவிரமாகப் பரவி வரும் இக்காலக்கட்டத்தில் சட்டப்பூர்வமான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவதிலிருந்து பொதுமக்கள் சட்டப்பூர்வமான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவதிலிருந்து பொதுமக்கள் தங்களை தவிர்த்துக் கொள்ளும்படி தமிழ்நாடு காவல்துறை கேட்டுக்கொள்கிறது.இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கரோனா ஊரடங்கு காலத்தில் பொதுமக்களிடம் காவல்துறை கனிவாகவும், கண்ணியமாகவும் நடந்துகொள்ள வேண்டும் என தமிழக டிஜிபி அறிவுறுத்தியிருந்தார்.ஆனால், காவல்துறையின் மென்மையானப் போக்கை மதிக்காமல் மாநிலம் முழுவதுமே கரோனா விதிமுறை மீறல் அதிகரித்தது. இந்நிலையில், நாளை முதல் விதிமுறை மீறுவோர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என காவல்துறை எச்சரித்திருக்கிறது.

# மக்கள் நீதி மய்யத்தில் மீண்டும் பிளவு: சந்தோஷ்பாபு, பத்மபிரியா விலகல்

கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யத்தில் மீண்டும் பிளவு ஏற்பட்டுள்ளது, மக்கள் நீதி மய்யத்தில் ஆரம்ப காலத்திலிருந்துபயணித்ததுணைத்தலைவர்மகேந்திரன் விலகிய நிலையில் இன்று முன்னாள் ஐஏஎஸ் சந்தோஷ் பாபுவும், பத்மபிரியாவும் விலகியுள்ளனர்.மக்கள் நீதி மய்யம் கட்சியை கமல்ஹாசன் கடந்த 2017 ஆம் ஆண்டு தொடங்கினார். இரு கட்சிகளுக்கும் மாற்றாக தனது கட்சி இருக்கும், ஊழலுக்கு எதிராக, நேர்மை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு கட்சி இயங்கும் என அறிவித்தார்.

மக்கள் நீதி மய்யத்தில் ஓய்வு ஐபிஎஸ் அதிகாரிகள், ஐஏஎஸ் அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் இணைந்தனர்.கடந்த மக்களவைத் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் போட்டியிட்டது. அதில் நகர்புறத்தில் குறிப்பிட்ட அளவு வாக்குகளைப்பெற்றது. ஆனாலும் பெரிய அளவில் வாக்குகளைப் பெறவில்லை. பின்னர் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடவில்லை. அதன் பின்னர் சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் சரத்குமாரின் சமத்துவ மக்கள் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டது.மக்கள் நீதி மய்யத்தில் ஏராளமான இளம் தலைமுறையினருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

தேர்தல் பிரச்சாரத்தில் இரண்டுக்கட்சிகளையும் குறிப்பாக திமுகவை அதிகம் விமர்சித்து கமல் ஹாசன் பிரச்சாரம் செய்தார். திமுக, அதிமுக எனும் இரு கட்சிகளுக்கிடையேயான போட்டியில் மக்கள் நீதிமய்யம் பெரிய அளவில் எதிர்ப்பார்ப்பை நிறைவேற்றவில்லை. ஒவ்வோரு தொகுதியிலும் நான்காவது இடத்தில் வாக்குகளைப்பெற்றாலும் தேர்தலில் மக்கள் நீதி மய்ய வேட்பாளர்கள் அனைவரும் தோல்வியைத் தழுவினர். இதனால் மக்கள் நீதி மய்யத்தில் சலசலப்பு ஏற்பட்டது. கமல்ஹாசன் தலைமையில் ஜனநாயகம் இல்லை என முக்கிய தலைவரான மகேந்திரன் பேட்டி அளித்து விலகினார். துரோகிகள் களையெடுக்கப்படுவார்கள், களையே தன்னை களையெடுத்துக்கொண்டது என கமல் அறிக்கை விட்டார். இன்னும் பலர் தன்னை தொடர்ந்து வெளியேறுவார்கள் என மகேந்திரன் கூறியிருந்தார்.இதனிடையே கட்சி நிர்வாகிகளை பதவி விலக கமல் கட்டளையிட்டதை அடுத்து அவர்கள் பதவி விலகினர்.

தற்போது கமலின் மக்கள் நீதி மய்யத்திலிருந்து முக்கிய தலைவர்களில் ஒருவரான தலைமை அலுவலக பொதுச் செயலாளர் முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சந்தோஷ்பாபு விலகியுள்ளார். கட்சியின் செயல்திட்டங்கள், தேர்தல் அறிக்கைகள் தயாரிக்க பெரிதும் உறுதுணையாக இருந்த சந்தோஷ்பாபு பதவி விலகியுள்ளது மக்கள் நீதி மய்யம் வட்டாரத்தில் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.சந்தோஷ் பாபுவைத் தொடர்ந்து மக்கள் நீதி மய்யத்தில் வேட்பாளராக போட்டியிட்ட சமூக ஆர்வலர் பத்மபிரியாவும் விலகியுள்ளார். சந்தோஷ் பாபு தனது ட்விட்டர் பக்கத்தில் தனது விலகலுக்கு சொந்தக்காரணம் என்று தெரிவித்துள்ளார். கமலுக்கு நன்றியும் தெரிவித்துள்ளார்.பத்மபிரியா விலகல் குறித்து தனது ட்விட்டர் பக்கத்தில்,“சில காரணங்களுக்காக நான் சார்ந்திருந்த மக்கள் நீதி மய்யம் கட்சியில் இருந்து விலகுவதாக முடிவு செய்துள்ளேன். அதை எனது தொகுதி மக்களான உங்களுடன் பகிர்வது எனது கடமை என்று கருதி தெரிவித்துக்கொள்கின்றேன். அன்பு நிறைந்த மதுரவாயல் தொகுதி மக்களுக்கு, என் மீது நம்பிக்கை கொண்டு எனக்கு வாக்களித்த மக்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது களப்பணி எப்போதும் போல இன்னும் சிறப்பாக தொடரும். என்னைப் போல் எவ்வித அரசியல் பின்புலம் இல்லாத ஒரு நடுத்தர குடும்பப் பெண்ணை உங்கள் வீட்டுப்பிள்ளையாக எண்ணி ஏற்றுக்கொண்டு வாக்களித்தமைக்கும் நம்பிக்கை கொடுத்து ஊக்கம் கொடுத்தமைக்கும் நான் என்றும் உங்களுக்கு கடமைப்பட்டுள்ளேன்” எனத் தெரிவித்துள்ளார். இவர்கள் இருவர் விலகலுக்கு கமல் தரப்பிலிருந்து இதுவரை எந்த எதிர்வினையும் வரவில்லை.

# தேர்தல் அறிக்கையில் சொன்னபடி பெட்ரோல், டீசல் விலையை குறைத்திடுக: அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்

ரூ.30க்கும் குறைவான அடக்கவிலை கொண்ட பெட்ரோலையும், டீசலையும் சராசரியாக ரூ.90க்கும் கூடுதலான விலைக்கு விற்பனை செய்வது எந்த வகையிலும் நியாயமல்ல, எரிபொருள் விலைகளால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சுமையைக் குறைக்க அவற்றின் மீதான வரிகளைக் குறைக்க மத்திய, மாநில அரசுகள் முன்வர வேண்டும்.என அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

பாமக இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் விடுத்துள்ள அறிக்கை:தமிழ்நாட்டில் பெட்ரோல், டீசல் விலைகள் நடப்பு மாதத்தில் எட்டாவது முறையாக உயர்த்தப்பட்டுள்ளன. கரோனா வைரஸ் பரவல் உள்ளிட்ட காரணங்களால் மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து வாடிக் கொண்டு இருக்கும் நிலையில், அதை உணராமல் எரிபொருள் விலைகளை உயர்த்துவது சிறிதும் நியாயமற்றது.

சென்னையில் நேற்று பெட்ரோல் விலை லிட்டருக்கு 22 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.93.84 ஆக உள்ளது. அதேபோல், ஒரு லிட்டர் டீசல் விலை 24 காசுகள் அதிகரித்து ரூ.87.49 க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த மே மாதம் ஒன்றாம் தேதி நிலவரப்படி சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ. 92.43 ஆகவும், ஒரு லிட்டர் டீசல் விலை ரூ. 85. 75 ஆகவும் இருந்தன. அதன்பின் கடந்த 2ஆம் தேதி தொடங்கி இன்று வரையிலான 11 நாட்களில் மொத்தம் 8 முறை எரிபொருள் விலைகள் உயர்த்தப்பட்டன. மே மூன்றாம் தேதி மட்டும் பெட்ரோல், டீசல் விலைகள் தலா 8 காசுகள் குறைக்கப்பட்டன. இம்மாதத்தில் மட்டும் 8 நாட்களில் பெட்ரோல் விலை 1.41 ரூபாயும், டீசல் விலை 1.74 ரூபாயும் அதிகரித்திருக்கின்றன.2021ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே பெட்ரோல், டீசல் விலைகள் அதிகரித்து வருகின்றன. ஜனவரி மாதம் முதல் தேதியில் சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் 86.51 ரூபாய்க்கும், ஒரு லிட்டர் டீசல் 79.21 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டன.

அதனால் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்ட நிலையில், மே மாதத் தொடக்கத்திலிருந்து பெட்ரோல், டீசல் விலைகள் மீண்டும் உயரத் தொடங்கியுள்ளன. இந்த ஆண்டின் தொடக்கம் முதல் இன்று வரை பெட்ரோல் விலை 7.33 ரூபாயும், டீசல் விலை 8.28 ரூபாயும் அதிகரித்திருக்கின்றன. பெட்ரோல், டீசல் விலை உயர்வு என்பது அத்துடன் நின்று விடாது. எரிபொருள் விலை உயர்வால் சரக்கு வாகனங்களின் வாடகை அதிகரித்து, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் காய்கறிகளின் விலை உயர்வுக்கு வழி வகுக்கும். பொது மக்களின் போக்குவரத்து செலவும் அதிகரிக்கும். இவற்றை ஏழை நடுத்தர மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது. ஏற்கனவே வாழ்வாதார இழப்பால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இந்த விலை உயர்வால் மேலும் பாதிக்கப்பட்டு வறுமையின் கோரப்பிடிக்குள் தள்ளப்படுவார்கள்.

பெட்ரோல், டீசல் விலைகள் மீது மத்திய, மாநில அரசுகள் மிக அதிக அளவில் வரிகளை விதிப்பது தான் விலை உயர்வுக்கு காரணமாகும். ரூ. 30 க்கும் குறைவான அடக்கவிலை கொண்ட பெட்ரோலையும், டீசலையும் சராசரியாக ரூ.90 க்கும் கூடுதலான விலைக்கு விற்பனை செய்வது எந்த வகையிலும் நியாயமல்ல. எரிபொருள் விலைகளால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சுமையைக் குறைக்க அவற்றின் மீதான வரிகளைக் குறைக்க மத்திய, மாநில அரசுகள் முன்வர வேண்டும். இது அவசரத் தேவை.2021ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான திமுக தேர்தல் அறிக்கையில்,‘‘ திமுக ஆட்சிக்கு வந்தால் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.5, டீசல் விலை ரூ.4 குறைக்கப்படும்; சமையல் எரிவாயு சிலிண்டருக்கு ரூ.100 மானியமாக வழங்கப்படும்’’ என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அதை நிறைவேற்றுவதற்கு மிகவும் சரியான நேரம் இது தான். இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதால் தமிழக அரசுக்கு பெரிய அளவில் வருவாய் இழப்பு எதுவும் ஏற்பட்டு விடாது.மாநில அரசின் மதிப்பு கூட்டு வரி, மத்திய அரசின் கலால் வரியில் மாநில அரசின் பங்கு ஆகியவற்றைச் சேர்த்து தமிழக அரசுக்கு பெட்ரோல் விற்பனையில் லிட்டருக்கு 37.61 ரூபாயும், டீசல் விற்பனையில் லிட்டருக்கு 31.10 ரூபாயும் வருவாயாக கிடைக்கிறது. தமிழக அரசு கூடுதலாக சமையல் எரிவாயு உருளைக்கு ரூ.100 மானியம் வழங்க வேண்டும். அதன்மூலம் மக்கள் சுமையை ஓரளவாவது குறைக்க முன்வர வேண்டும்’’. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தளபதி – தலைவர் – முதல்வர் ஆயினன் முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின்!

**- கனடாவிலிருந்து --கழகத்தம்பி வீணைமைந்தன்**



வெற்றி கூறுமின் ! வெண்சங்கு ஊதுமின் !
ஊதுமினோ வெற்றி ! ஒலிமினோ வாழ்த்தொலிகள் !
ஓங்குமே முரசொலி ஓங்குமினோ ! ஓங்குமினோ !
எங்கள் இளவரசன் ஸ்டாலின் வெற்றிதனை
எங்கெங்கும் முழங்குமின் ! எந்நாளும் முழங்குமின் !
அன்றொருநாள்..... !
அந்நாளை நினைத்துப் பார்கின்றேன் !
அப்பப்பா ! அரை நூறு ஆண்டுகள் நெருங்குகிறது
அந்த வீரவடுவும்... நீங்காத வலியும்
உங்கள் மனதில் பசுமை நினைவாக...
அப்படியே என் நினைவுப் பெட்டகத்திலும்...
கசாப்புக் காரனின் குரூரப் புத்தியுடன் காலால் உதைத்த கயவனிடமிருந்து
மாளாமல் உங்களைக் காப்பாற்றிய
வேழம் நிகர் விறல்மாறன் 'சிட்டிபாபு'
மார்பில் உதைத்தானே அந்த மாபாவி !
தன்னுயிர் ஈந்து தளபதி உங்களை(க்)
காத்தவீரியன் கழகம் தந்த சூரியன் அன்றோ !
சாவதற்கே போவதுபோல் மீசாவில் கைதாகி
சாவு என்றும் வரும் அது சமரிலே வரும் என்றால்
சரித்திரமாகும் என்றே சிரித்த முகம் காட்டி
சிறையிலே பொறுமை காத்தீர் !
பொல்லாத மிசாவின் கல்நெஞ்சக் காவலர்கள்
சோற்றுடனே சிறுநீரும் மண்கலந்து
மானிடர்க்குத் தருவதுதான் மனுநீதித்தர்மமென
அந்த நேருமகள் ஆட்சியிலே கொடுங்கோலர் வலம் வந்தார் !
அனு அனுவாய் மேனியெங்கும் புண்ணாக காயம் தெரியாது கைமுட்டச் சட்டையுடன்
வாய்மை மறைத்து வலிமறந்த மாவீரன்
காயம் முதுகில் அல்ல மார்பிலே என்றுரைத்த
கலிங்கத்துப் பரணிவீரன்! கழகத்தின்
இளைஞரணித் தளபதியாய் எட்டுத்திக்கும்
சுட்டெரிக்கும் சூரியப் புதல்வனென
வலம் வந்த தளபதியே வாழி நீர் பல்லாண்டு !
வட்டம் மாவட்டம் சிற்றூர்கள், பேரூர்கள்,
தொட்டுப்போகாத ஊர்கள் எதுவுமில்லையென
அட்டியின்றிக் கற்றுணர்ந்த அரசியல் பாடத்தால்
எட்டினாய் சிகரத்தை எம் தலைவர் மனமகிழ்ந்தார்
பட்டு விரித்த பாதையிலே நீ நடந்து நகரத்துப் பிதாவானாய்
தொட்ட இடடெல்லாம் நீ தொட்ட இடமெல்லாம்
வட்ட நிலவொளிபோல் துலங்கியதே சென்னை நகர் !
கட்டிடங்கள் - பாலங்கள் - கண்கவர் வளைவுகள்
எட்டி உதைத்து விளையாடும் ஆடுகளம்
தொட்டில் பூக்களுடன் பசுமைநிறை பூங்காக்கள்
சிங்காரச் சென்னை நகர் சிங்கை நகர் ஆயிற்று !
தலைவரின் கடிதத்தைத் தப்பாமல் படிப்பவர் நீர் !
உடன் பிறப்பே என விளிப்பது உம்மையும் தான்
தந்தையென அழைக்காமல் தலைவர் என்றே அழைத்திடுவீர் !
சிந்தையிலே எப்போதும் பெரியாரும் அண்ணாவும்
முந்தியே வந்தாலும் தந்தைவழி பயின்றவரே
இந்தியா வெங்கிலும் இளைஞரணித் தலைவர் என்றால்
மு.க ஸ்டாலின் என்றே தமிழ் முழங்கும் !
இப்படை தோற்கின் எப்படை வெல்லுமென
நமக்கு நாமே யென்றும் உங்களில் ஒருவன் என்றும்
மக்களை நேசிக்கும் மகத்தான தலைவன் நீ !
தந்தைக்குத் தனயனே ஆனாலும், தமிழகத்தின் வாரிசு நீ !
ஏழை எளியோரின் துன்பங்கள் துயரங்கள்
துடைத்தெறியப் புறப்பட்ட 'குறிஞ்சிமலர்' நாயகன் நீ வாழ்க !
சென்னையின் நாயகனே ! செயல் வீரத்திலமே !
நகரபிதா - துணைமுதல்வர் - பொருளாளர் எனக்
கழகத்தின் கடைசித் தொண்டனுக்கும்
உண்மையாய் அன்பு செய்து உழைத்தவரே
உறக்கமின்றி ஓய்வின்றி உழைத்த தலைவர்
ஓய்வெடுக்கவென்று எண்ணிச் சிந்திப்பதை
நிறுத்திக் கொண்டவேளை தலைவரே என இதுநாள் வரை
அழைத்தேன் ! இப்போது ஒருமுறையாவது அப்பா என
அழைக்கட்டுமா எனக்கண்ணீர் மல்க அழைத்தவேளை
தமிழகமே அழுததை நான் அறிவேன் !
தமிழினத்தின் காவலராய்! செம்மொழித் திலகமாய்
செப்பு மொழியெடுத்துச் சுந்தரனார் இயற்றிவைத்த
நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் தைத் திகழ்பரத கண்டமதில்
தெக்கணமும் அதிசிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந்திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெரும் தமிழணங்கே
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து வாழத்துதுமே
எனத் தமிழ்த்தாயை வணங்கி வாழ்த்தும் ஒலி
வான்பரப்பில் தவழ்வதற்கு வழி சமைத்த
தேன் தமிழின் தென்பாண்டிச் சிங்கம் எங்கள் தலைவரைப்போல்
ஆட்சி செய்து திராவிடம் நிலைப்பதற்கும்
சமூகநீதி - சமத்துவம் - சகோதரத்துவம்
மதநல்லிணக்கம் - மாநிலசுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி
மாதருக்குச் சொத்துரிமை திலகமற்ற விதவைக்கு
இருதிலகமிட்டேதான் 'கைம்பெண்' என்றழைத்து
கல்யாணக்கோலம் காணவைத்தவரின் வழிநின்று
இந்தியைத் திணிக்கவைக்கும் ஆரிய மந்திகளின்
மந்திரசித்து விளையாட்டு எடுபடாது இங்கென்றும்
சுந்தரத்தமிழ்பேசும் எம்தமிழர் பிள்ளைகளின்
எதிர்கால உயர்கல்வி நீட்தேர்வு எழுதாமல் சித்தி பெற்று உயர்வதற்கும்
பசுமை நிறை வயல் வெளிகள் பாலையாய்ப் போகமல்
விவசாயம் - நீர்நிலைகள் - வற்றியே வறழாமல்
வறுமையென்ற பேச்சுக்கே இடமின்றி
இல்லத்தரசிகளின் இன்னல்கள் காணாமல் போகவென
உள்ளம் மகிழும் 'உறுதிநிதி' தந்து
உழைப்பதிலும் - உழைப்பைப் பெறுவதிலும்
உழைப்பவர்க்கே உலகம் செந்தமென்றும்
உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேராதென்ற
அய்யன் வள்ளுவன் வாய்மொழியை வேதமெனக்கொண்டு
அறை கூவல் விடுத்து ஆட்சி செய்யும்
அதிகாரம் பலம் பெற்று உயரட்டும் !
நல்லாட்சி நிலவட்டும் !
நாடு புகழ நீடுபுகழுடைத்து நீ வாழ்க !

-------------------------------
K.T Snanmugarajah (Veenaimainthan)
Addres : 22,Rue Andras (D.D.O) Quebec
H9B-1R6, Canada
Email: shan.veenaimainthan@gmail.com
Phone: (514)684-3604

# ஈழத்துத் திருக்கோவில்கள்

946



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## நாச்சிமார் திருக்கோயில்
## வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

"மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணி புனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்து பின்னே."

ஈழத்திலுள்ள கோவில்கள், வானளாவிய கோபுரங்களைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. வழிபாடு செய்யக் கோவிலை நோக்கி வரும் அடியவர்கள், கோபுரத்தின் கம்பீரமான தோற்றத்தினைத் தூரத்திலிருந்தே கண்டுகளித்து, தரிசித்து வணங்குவர். கிழக்கே கோபுரம் அமையப் பெற்றவையாகவே அநேகமான கோவில்கள் காணப்படுகின்றன. இவற்றிற்கு மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று எனப் பல மாடங்கள் காணப்படும். இவற்றின் உச்சியிலே, மூன்று, ஐந்து, ஏழு அல்லது ஒன்பது கலசங்கள் நிறுவப்படும். செல்வநிலைக்கேற்பவும், கோயிற் கருவறையின் பிரமாணத்திற்கேற்பவும், கோபுரத்தின் உயரம் வேறுபடும். கோயில் கருவறையிலே காணப்படும் பல்வேறு வேலைப்பாடுகள், கோபுரத்திலும் இடம்பெறும். அத்தோடு, இறைவனுடைய திருவிளையாடல்களையும், பெருமைகளையும் குறிக்கும் உருவங்களும், கோபுரங்களின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெறும்.

கோபுரத்தின் இரு பக்கங்களிலும் மணிக்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வலதுபுற மணிக்கோபுரம் 1985 ஆம் ஆண்டிலே கட்டப்பட்டது. கோபுரத்தைக் கடந்து சென்றதும் உள்ளே கொடித்தம்பமும், நந்தி, பலிபீடம் ஆகியவற்றைத் தரிசிக்க முடிகின்றது. பலாமரத்தினால் செய்யப்பட்ட கொடித்தம்பம், செப்புத் தகட்டினால் சுற்றப்பட்டுள்ளது. கொடிமரத்திலே பிரமபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகம், துவஜத்தண்டு, பத்திரபீடம், விருஉறப்பீடம், இஷ்டிகை, என்னும் பகுதிகள் உள்ளன.

கோவிலின் அமைப்பைக் கூர்ந்து கவனித்தால், அங்கு பல உறுப்புக்களைக் காணக் கூடியதாயுள்ளது. இவற்றுள் மூலவிக்கிரகம் எழுந்தருளியிருக்கும் கட்டிடம் முழுவதும், விமானம் எனப்படும். இதன் மேற் கூரை சிகரம் என்றும், ஸ்தூபி என்றும் கூறப்படும். ஸ்தூபியின் கீழுள்ள கருவறை கர்ப்பக்கிரகம் எனப்படும். இதன் வாயில், கிழக்கு நோக்கியவாறே பெரும்பாலும் அமையும். இந்த வாயிலுக்கு முன் காணப்படும் பகுதியை, மண்டபம் என அழைப்பர். கோவிலை வலம்வரும் பகுதியை, பிரகாரம் என்பர். திருக்கோவிலுக்கு அங்கமாகச் சிறு கோவில்கள் அமைக்கப்பட்டு, அவை பரிவாரதெய்வங்களுக்குரிய கருவறை என அழைக்கப்பட்டன. இவை தவிர கர்ப்பக்கிரகத்தின் புறச்சுவரில் அமைக்கப்பட்ட கூடுகளிலும் விக்கிரகங்கள் இடம்பெற்றன. இக் கூடுகளைப் பஞ்சர கோஷ்டங்கள் என அழைப்பர்.

கோவில் கட்டும்முறை ஆரம்பகாலத்தில் காணப்பட்டதாயினும், கி.பி எட்டாம் நூற்றாண்டிலேயே இக்கலை, சிறப்புப் பெற்று வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. கோவிலின் விமானங்களின் அமைப்பைக்கொண்டு, கோவிலின் பெயர்கள் காணப்படுகின்றன. கரக்கோயில், ஞாழக்கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என அறுவகைக் கோயில்களைப்பற்றி, தேவாரங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சிற்பசாத்திரங்களில் கோவிலின் அமைப்பைக் கொண்டு விஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிலாசம், ஸ்கந்த காந்தம், ஸ்ரீ கரம், உறஸ்தி பிருஷ்டம், கேசரம் என எழுவகைக் கோவில்கள் உண்டெனக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாக ஆலயங்களின் பொதுவழக்குக் காணப்பட்டபோதிலும், தேவிக்குத் தனி ஆலயம் அமைக்கும் வழக்கு பிற்காலத்தில் ஏற்பட்டது. ஆரம்பகாலத்தில் கருவறையி லேயே ஒரு பக்கத்தில் அம்பாள் இடம்பெறுவதே வழக்கமாகக் காணப்பட்டது. காஞ்சியிலே காமாட்சி அம்மன் ஆலயம் விளங்குவது போன்று தேவியின் ஆலயம், இறைவன் ஆலயத்தைக் காட்டிலும் தொலைவில் வேறாகக் காணப்பட்டதென எண்ண இடமுண்டு. கேவலம், மிஸ்ராலயம், சங்கீர்ணாலயம் என மூவகை ஆலயங்களைப்பற்றி, நூல்களிலே கூறப்பட்டுள்ளது. இறைவனுக்கு மட்டும் கோவில் அமைவது கேவலம் என்றும், இறைவனுக்கும் தேவிக்குமாகக் கோவில் அமைவது மிஸ்ராலயம் என்றும், பரிவாரங்களுடன் இறைவன் தேவி இருவருக்குமாக அமைவது சங்கீர்ணாலயம் என்றும் அழைக்கப்படும். மூன்றாம் வகையைச் சேர்ந்த கோவில்களே தென்னாட்டிலும், இலங்கையிலும் காணப்படுகின்றன. நாச்சிமார் கோவிலின் அமைப்பு சங்கீர்ணாலயம் என்ற வகைக்குள் அடங்கும். இது தேவிக்கும், இறைவனுக்கும், பரிவாரதேவர்களுக்கும் உரிய அமைப்பு வடிவத்தைக் கொண்டதாகும். கர்ப்பக்கிருகமும், அர்த்தமண்டபமும் அமைந்துள்ள கட்டிடத்தின் மேலே சிற்பவேலைப்பாடுகளுடன் கூடிய விமானம் காணப்படுகின்றது. மூலமூர்த்தி உறையும் கருவறைக்குமேல் அமைந்துள்ளதே விமானம் எனப்படும். விமானம் என்னும் சொல் (விமானம்) விசேடமாக அளந்து அமைக்கப்பட்டது எனப் பொருள்படும். அடியிலே அகன்று பரந்த விமானம், படிப்படியாக ஒடுங்கிச் சென்று தனிச்சிகரமாய் முடிவடைகின்றது. நாச்சிமார் கோயில் விமானத்தின் தெற்கு நோக்கிய பகுதியில், பிள்ளையார், நடராசர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், அர்த்தநாரீஸ்வரர், மாரியம்மன் ஆகியோரின் வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்குப்புறத்தில் வைரவர், நாகபூசணி, அனுமார் ஆகியோரின் உருவங்களும், பரமசிவன் இலிங்கத்திலிருந்து தோன்றி, யமனைக் கொன்று மார்க்கண் டேயருக்கு அருள் வழங்கிய காட்சியும் அமைந்திருக்கின்றன. பிரமன், சரஸ்வதி, நாராயணி ஆகியோரின் தோற்றங்களும், மோகினி வடிவமான விஷ்ணுவை, சிவன் ஆலிங்கனம் செய்யும் காட்சியும், விமானத்தின் வடபுறத்திலே காணப்படுகின்றது. கர்ப்பக்கிருகத்தின் மேலமைந்து காணப்படும் விமானத்தில், கோபுரத்திலே காணப்படுவது போன்று இறைவனுடைய அற்புதங்களும், பெருமைகளும் உருவங்களாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும்.

*வளரும்...*





*(அத்தியாயம் #11)*

# வந்தியத்தேவனின் தஞ்சைப் பயணம்

சோழ தேசத்தை வளநாடு என்றும் சோழ மன்னனை வளவன் என்றும் கூறுவது எத்தனை தகுதி என்று எண்ணியபடியே வந்தியத்தேவன் அரிசலாற்றங் கரையில் இருந்து வளம் மிகுந்த பிரதேசத்தின் வழியாக தஞ்சை நோக்கி வருகிறான். எங்கு பார்த்தாலும் தண்ணீர் மயம். கணவாய்கள், மதகுகள், மடைகளின் வழியாக தண்ணீர் குபு குபு என்று வாய்க்கால்களிலும், வயல்களிலும் பாய்ந்து கொண்டிருந்தது. விவசாயம் என்னும் பெருந்தொழில் நாட்டின், அந்த நாட்டு மக்களின் வளத்தை உயர்த்திச் செல்லும் அல்லவா! விவசாயத்திற்கு இன்றியமையாதது தண்ணீர். இந்தத் தண்ணீரை, மனித வாழ்வின் மூலப் பொருளை சோழர் எவ்வாறு காத்து வளம் மிக்கவர்களாக, மகிழ்ச்சி பொங்க வாழ்கின்றனர். இவர்களுக்கு பெரும் அபாயம் ஏற்பட இருக்கின்றதே! சீ சீ இளவரசர் கரிகாலன் கொடுத்த ஓலையைக் கொடுத்து விட்டு என் கடமையை முடித்தால்தான் நான் நினைப்பது எனக்குக் கிடைக்கும் எனக்கேன் நாட்டுக்கரிசனை? என் கை வெற்றி பெற்றால் சரி நாட்டை ஆளுபவர்கள் நாட்டைக் காக்கட்டும் நான் ஒரு சாதாரண எந்த பதவியும் இல்லாத மனிதன். என்னால் என்ன செய்ய முடியும்? என்னதான் சொன்னாலும் யார் கேட்கப் போகிறார்கள்? கண்ணை மூடிக்கேட்டு காதுகளில் விழுந்ததை கரிசனை கொள்ளாது விட்டு விடுவார்கள். அறிவாளிகளுக்கோ, அக்கறை உள்ளவர்களுக்கோ மதிப்பும், மரியாதையும் யார் தருவார்? பதவியும் பதவியிலுள்ளவர்களின் சொந்த பந்தங்களிற்கும் உள்ள உயர்வு அப்பப்பா----என் வானகோப்பாடி ராஜ்ஜியம் இல்லாது ஒழித்தவர்கள் கங்கர்களும், வைதுமபர்களும், அவர்களுடன் கைகோர்த்த சோழர்களுந்தானே? நாட்டை விஸ்தரிப்பது என்ற பெயரில் வீராதி வீரர் என்ற பட்டத்தை நிலைநாட்ட மன்னர்கள் எத்தனை உயிர்களைக் கொன்று, வதைத்து, துன்புறுத்தி, அழித்து தம்மை உயர்த்திக் கொள்கிறார்கள். மனிதன் குரங்காகவே இருந்திருந்தால் இத்தனை வளர்ச்சி பெற்றிருக்கமாட்டான். மனித வளர்ச்சி விதைத்தது என்ன? ஊர்வன, பறப்பன, நடப்பன யாவும் இன்றும் அப்படியே நன்றாகத்தானே வாழ்கின்றன! ஏன் இந்த மனிதன் மட்டும் சூழ்ச்சி, வஞ்சனை, கோபம், பொறாமை என்ற அழிவிற்கு வித்திடும் தீய எண்ணங்களைக் கொண்டிருக்கின்றான். மனிதன் என்ற மகத்துவம் எங்கே? மற்ற மனிதன் தன் மகத்துவத்தை தொலைத்து விட்டான் என்பதற்காக நானும் என் மனித மகத்துவத்தை தொலைத்து விடலாகாது. தற் பாதுகாப்பிற்காக கத்தி என்னும் யுத்தியை கையில் எடுக்கலாம். எடுத்தே ஆக வேண்டும். சோழ குடும்பத்திற்கு வர இருக்கும் ஆபத்தையும், சதிகாரர்களின் சதியையும் எப்படியாவது தடுக்க வேண்டும் என்ற அவனது சிந்தனை ஓட்டத்தில் தன் உள்ளம் கவர்ந்த அந்த மங்கையின் எண்ணம் குறுக்கிட்டது அவனைக் கவலை கொள்ள வத்தது. வாழ்வில் வெற்றி பெற இந்த பெண்களின் மாய மோகத்தில் வீழ்ந்திடல் ஆகாது அது வீழ்ச்சியையே தரும் இதற்கு கோவலன் கதை தானே படிப்பினை தருகிறது. ஆனால் இன்று ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்ற பழமொழி என்ன எடுத்துரைக்கிறது? ஆண்களே உங்கள் பகுத்தறிவு என்னும் உயர் உணர்வு சொல்வதை கேளுங்கள். புத்தி, மனம் இரண்டும் அறிவு சொல்லும் இதில் நியாயங்களை மட்டும் சொல்வது புத்தி. ஆனால் மனமோ சுயநலம், ஆசை, அறியாமை நியாயம், அநியாயம் யாவற்றையும் சொல்லும். ஆண்மகன் என்ற இறுமாப்பை விட்டு விட்டு தீய பெண்மைக்கு அடிமையாகி முழுப் பெண் குலத்திற்கும் அவமானம் தேடித் தருகிறீர்களே! இவ்வாறான பல எண்ணங்களோடு வளமான காவேரிக் கரை பூமி மீது இதமான காற்றோடு குதிரை மீது பயணித்து வந்தியத்தேவன் திருவையாற்றை அடைந்தான். இசைக்கும் கலைக்கும் என்றே இறைவன் இந்த ஊரைப் படைதான் போல்! பரதம் ஆடுவோர் சலங்கை ஒலி, அதைக் கற்பிக்கும் ஆசிரியரின் கையில் இருக்கும் கோலின் சத்தம், யாழ், குழல், முழவு, தண்ணமை முதலிய கருவிகளின் இசை முழக்கம், பாடல்களின் இனிய குரல் இவை எல்லாம் வந்தியத்தேவனை இங்கு தங்கிவிட்டுப் போக ஏவியது.

இதே வேளையில் மேற்குத் திசையில் காவேரிக் கரையோடு ஒரு பல்லக்கு வருவதைக் கண்டான். இந்த பல்லக்கை ஒரு பனை மரத்தின் இலச்சினை கொண்ட திரையால் மூடப்பட்டிருந்தது. முன் பின்னாக காவலர்கள் வந்தார்கள். இதைப் பார்த்த வந்தியத்தேவன், 'ஆகா கடம்பூரில் இருந்து இது வருகிறது இதில் இளவரசர் மதுராந்தகர் வருகின்றார். ஆனால் பெரிய பழுவேட்டரையரைக் காணோம். இது எனக்கு நல்ல சந்தர்ப்பம் இப்பபொழுது இளவரசர் மதுராந்ததேவருடன் பழக்கம் செய்திட வேண்டும். அப்பொழுதுதான் நான் தஞ்சாவூர் கோட்டைக்குள் போக முடியும்.' என்றவாறு ஒரு கரையில் ஒதுங்கி நின்றான். அந்தப் பல்லக்கு தொடர்ந்து செல்ல அந்த பல்லக்கைத் தொடர்ந்து அவன் சென்றான். நீண்ட தூரம் தொடர்ந்து சென்றான். அவன் நினைத்த காரியம் நடக்கவில்லை. என்ன இது விதியின் பயன் என்று விட்டு விடுவதா? அல்லது நினைத்ததை நடக்க உத்தி தேடுவதா? என்ற குழப்பத்தில் தன் குலப் பெருமை, அறிவுத்திறன், கற்ற கல்வி, பகுத்தறிவு யாவும் பயனற்றதா என்று சிந்தித்தவாறு குதிரையை கால்களால் அமுக்கி, முக்கயிற்றை இழுத்து பல்லக்கினை தூக்கியவனை இடிக்கவிட்டான். அத்துடன் 'மகாராஜா மகாராஜா உங்கள் ஆட்கள் என் குதிரையை இடிக்கிறார்கள்.' என்று கத்தினான். உடனே பல்லக்கின் வெள்ளைத்திரை விலகியது. உட்பட்டுத்திரை விலகியது. அப்பொழுது வந்தியத்தேவன், தான் குதிரையில் இருப்பது முறை அன்று என எண்ணி உடனே கீழே இறங்கி ஓடினான். 'இளவரசே! இளவரசே! உங்கள் ஆட்கள்---' என்று சொல்லி முடிப்பதற்குள் அவன் கண்ட ஒளி பொருந்திய வண்ண முகம் அவனை ஸ்தம்பிக்க வைத்தது. வார்த்தை ஒழிந்து ஊமையானான் வேல் வீரர்கள் அவனைச் சூழ்ந்தனர். யார் இந்தப் பெண்? பூரணச் சந்திரன் இவளிடம் தோற்றுவிட்டதே! என்று எண்ணி மயக்கத்தில் இருந்து தெளிந்து, 'நீங்கள் பழுவூர் இளவரசிதானே' என வினவ அவளும் 'ஆமாம்' என்றாள். உடனே வந்தியத்தேவன் தன் ஆபத்தான நிலையில் தன் மூளையைக் கடைந்து ஒரு உத்தி கண்டு கொண்டான். ஆழ்வார்க்கடியான் நந்தினியைப் பற்றிச் சொன்னது நினைவு வந்தது உடனே அவளிடம், 'இளவரசி ஆழ்வார்க்கடியான் திருமலையப்பன் உங்கள் அண்ணன் என்னை உங்களிடம் அனுப்பினார்.' என்றவுடன் பழுவூர் ராணி அங்கு நின்ற வேல் வீரர்களை அப்பால் போகக் கட்டளையிட்டாள். அவர்கள் அகன்றனர். வந்தியத்தேவன் என்ன இடி விழுமோ என்ற அச்சத்துடன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது இளவரசி ஒரு புன் முறவலுடன் 'நடுச்சாலையில் நின்று பேசுவது உசிதம் அல்ல நாளைக்கு அரண்மனைக்கு வா எல்லாம் விபரமாகப் பேசலாம்' என்றாள். 'இதோ கோட்டைக்குள் வருவதற்கான இலச்சினை மோதிரம் இதைக் காட்டினால் உன்னைக் கோட்டைக்குள் விடுவார்கள்' என்றாள். அதைப் பெற்ற வந்தியத்தேவன் பனை இலச்சினை பொறித்த அந்த மோதிரத்தைப் பார்த்தான். இதற்குத்தானே இத்தனைபாடு என்று தனக்குள் எண்ணிக் கொண்டு ராணிக்கு வந்தனம் தெரிவித்தான். திரை மூட பல்லக்கு நகர்ந்தது-----முற்றும் துறந்த முனிவர்களின் தவத்தையும் பங்கம் செய்யும் பேரழகி! பெரிய பழுவேட்டரையர் இவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ள என்ன வேண்டுமென்றாலும் செய்வார். அவர் வயதும், 64 போர்க் காயங்களைக் கொண்ட அவர் மேனியும் இவளின் முன்னால் எந்த தகுதி பெறும் எப்படி இப்படி நடந்தது? என்று எண்ணினான். அவன் குதிரையும் அவன் காட்டிய பாதையில் மெல்ல மெல்ல நடந்து சென்று தஞ்சை கோட்டை வாசலை அடைந்தது. வீதிகள் பரபரப்புடனும், கலகலப்புடனும் தோற்றமளித்தது. வந்தியத்தேவன் தஞ்சை பிரதான வாசலை அடைந்தான். கோட்டையின் பிரமாண்டமான கதவுகள் மூடப்பட்டிருந்தது. மக்கள் ஏதோ ஒரு பவனிக்காக ஒதுங்கி ஆவலுடன் காத்திருந்தார்கள். வந்தியத்தேவனும் வம்பு தேடாது மக்களைப் போல் ஒதுங்கி நின்றான். அவன் அருகில் மல்லிகை வாசனை கமழ அவன் சற்று திரும்பிப் பார்த்தான். ஒரு வாலிபன் திருநீறு ருத்திராட்சம் முதலிய சிவ சின்னங்கள் தரித்து, இரு கைகளிலும் பூக் கூடைகளுடன் நின்றான். அவனிடம் 'தம்பி இங்கே என்ன ஊர்வலம் வரப் போகிறது ஏன் எல்லோரும் கூடியிருக்கிறார்கள்?' என்று கேட்டான். அதற்கு அந்த வாலிபன் 'நீங்கள் இந்த நகரத்து மனிதர் இல்லையா? சற்று குதிரை மேல் இருந்து இறங்கி நிற்பது நல்லது' என்றான். வந்தியத்தேவன் குதிரை மீது இருந்து இறங்கி 'தம்பி நான் தொண்டை நாட்டைச் சேர்ந்தவன். குதிரையின் மேல் இருந்து ஊர்வலத்தைப் பார்தால் என்ன? குதிரையை கொண்டா சென்று விடுவார்கள்?' என்று கேட்க 'ஆமாம் வேளக்காரப் படை இவர்கள் அவ்வப் போது அரசு புரிந்து வரும் அரசர்களுக்கு மெய்க்காப்பாளர்கள் போன்றவர்கள். இவர்கள் தங்கள் உயிரைக் கொடுத்தாவது அரசின் உயிரைக் காப்பார்கள் என்று சபதம் செய்தவர்கள் அதனால் அவர்கள் மேன்மைக்குரியவரகள். அவர்கள் சட்டம் தான் இங்கு சட்டம் இவர்கள் இப்பொழுது அரசரைப் பார்த்துவிட்டு வெளியே வரப்போகிறார்கள். அதற்காகத் தான் மக்கள் அங்கே கூடியிருக்கிறார்கள்.' என்றான் கோட்டை வாயிலின் கதவுகள் படார் படார் என்று திறந்து கொண்டது. இரு வீரர்கள் கைகளில் கொடி ஏந்தியபடி வெளியே வந்தார்கள். அவர்கள் கொடியை வந்தியத்தேவன் நோக்கினான். செந்நிறம் கொண்ட அக் கொடியில் புலியும், அதற்கு அடியில் கிரீடமும், அதற்கு கீழ் ஒரு பலி பீடமும், கழுத்து அறுக்கப்பட்ட தலையும், ஒரு பலிக் கத்தியும் காட்சி அளித்தன. இது என்ன பலி பீடத்தில் கழுத்தை அறுக்கும் காட்சி பயங்கரம் என்றான். அதற்கு அந்த வாலிபன் விடை சொன்னான்... ***(தொடரும்...)***




---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**

---

**Flex Institute நிறுவனத்துடன் சேர்ந்து உங்கள்**
**கனடா செல்லும் கனவினை நனவாக்குங்கள்!**

நீங்கள் கனடாவுக்குச் செல்வதைப் பற்றிய கவலையா? உங்கள் கனவை நாம் நனவாக்குகின்றோம். இலங்கையின் முன்னணி கனேடிய விசா ஆலோசனை நிறுவனங்களில் ஒன்றான நற்பெயரை Flex Institute நிறுவனம் கொண்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் கனடா செல்லும் விண்ணப்பதாரிகளுக்கு எமது சிறந்த சேவையினை வழங்கி அதன் மூலம் அவர்களின் விசா விண்ணப்பங்களின் வெற்றியை உறுதிப்படுத்துகிறோம். நாம் முக்கியமாக எமது கனடிய விண்ணப்ப நிலையத்தின் மூலம் **Student Visa, a Student- Dependent, Open Work Permit, Visitor Visa, Visa Refusals, Family Visit Visa, Business Visit, and Super Visa Facilities**. வழங்குகிறோம். இதற்கென்றே எமது அனுபவமிக்க தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்கள் உங்களுக்கான உதவிகளை செய்வதற்கு காத்திருக்கிறார்கள். எந்த விதமான தங்குதடையோ, தாமதமோ இன்றி உங்களுக்கான விசாவினை கூடிய விரைவில் பெற்றுத் தருவதில் உத்தரவாதமளிக்கின்றோம். இதற்கென்றே அமைந்ததுதான் எமது On The Spot Consultation சேவை. எமது வாடிக்கயாளர்களில் பலர் மாணவர் முதல் பிற பிரிவுகள் வரை அவர்களது விசா விண்ணப்பங்களை வெற்றிகரமாகப் பெற்றுள்ளனர். **University of Canada, West Algoma University, Fanshawege College, Centennial College, Seneca College, Georgian College, Cambrian College, ST. Laurence College, University of Saskatchewan, Lakehead University.** போன்ற கனடாவிலுள்ள முன்னணி பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கல்வி கற்பதற்காக விசாவினைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகளை நேருக்கு நேராக வழங்குவதுடன் விசாவினை பெற்றுத்தர உதவுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் நிதி பின்னணி குறித்து கவனமாக அவதானித்து அவர்களின் விருப்பத்திற்கேற்ப கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் தேர்வு செய்ய நாம் உதவத் தயாராக உள்ளோம். எமது Flex Institute வாடிக்கையாளர், மாணவர்களின் மறுக்கப்பட்ட விசாக்களை பெற்றுத் தந்து அதன் மூலம் பலரது நன்மதிப்பையும் பெற்றுள்ளோம்.

ஆலோசனைகளை தவிர IELTS பயிற்சி நிலையம் ஒன்றினை அமைத்து ஆங்கில மொழியில் பரீட்சை **IELTS, Duolingo English Test, TOFEL and PTE (Academic)** பயிற்சி மற்றும் உதவிகளை செய்து தருகிறோம். ஒரு அனுபவமிக்க விசா நிறுவனமாக எம்மை நாம் உத்தரவாதம் அளிப்பதுடன் உங்கள் விசாவிற்கும் உத்தரவாதம் அளித்து உங்கள் கனடிய கனவு நனவாகும். என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

- இலவச ஆலோசனை
- புலமைப்பரிசில்கள்
- 1000க்கும் மேற்பட்ட கல்வித்திட்டங்கள்

Student Visa, Student Dependent, Business Visa, Family Visit Visa, Super Visa requirements சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படும்.



Are You Looking For
**Canada**

- Student Visa
- Visit Visa
- Rejected visa
- Business visa
- Super Visa
- Tourist Visa

**Call us on: 0777 761 346**

flex Institute
Step Towards a Bright Future

6A, Parakumba Place, Colombo 06.
**Hotline: 0777 761346**
E-mail: flexinstitute04@gmail.com
**www.flexinstitute.lk** YouTube

***10 வருட கால நம்பிக்கையான சேவை***

# BEST INDIAN ASTROLOGER & PSYCHIC

## Pandit: VEERANANDA

காசியில் இருந்து வருகை தந்துள்ளார்

31 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 11 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்

உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே

இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்






**MOST POWERFUL SPIRITUALIST**

Family, Money, Childless, Health, Depression, Negativity, Husband Wife, Relationship, Marriage, Enemy, Court, Jealousy, Business, Work,Curses

- கை பார்த்து, முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். புகைப்படம் பார்த்து
- ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
- இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
- செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
- நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
- காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
- ஏந்தப் பிரச்னையாக இருந்தாலும் 5 நாட்களில் தீர்வு காண்பார

**Removes Black Magic, Jadoo, Vodoo, Obeya, Witchcft, Jinn Curses, & Gives 100% Protection**

- சர்க்கரை வியாதி
- ஆஸ்துமா
- தீராத கை-கால் வலி
- அல்சர்
- தோல் வியாதி
- அலர்ஜி
- மூட்டு வலி
- உடல் பருமான்
- அதிகரிக்க - குறைக்க
- காக்கா வலிப்பு
- ஆண்மை குறைவு
- ஞாபக சக்தி குறைவு
- மூலம்
- சிறுநீர்க் கோளாறு
- பெண்களுக்கான
- மாதவிடாய் பிரச்சனைகள்
- நரம்புத் தளர்ச்சி
- சரவாங்கி
- வாயுக்கோளாறு
- தலைவலி
- கழுத்து வலி
- முகப்பரு, தேமல்
- வெண்கு்டம்
- வாதம்
- மஞ்சல் காமாலை
- முடி உதிர்வு, உ்டணம்
- பக்கவாதம்
- நரம்பு வாதம்

எந்தவித பக்கவிளைவுகளும் கிடையாது நம்பி வாரீர் நலமுடன் வாழ்வீர

**ஆயுர்வேத சிகிச்சை**

**Call For Appoinment: 647-858-3355**

1101 Victoria Pank Ave, # 3 , Scarborough ON M4B 2K2
Opp. NO FRILLS, ( VICTORIA PARK & ST CLAIR AVE )

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும் #45

நடிகர் திலகம் அவர்களை மூன்று வேடத்தில் நடிக்க வைத்து மகத்தான சாதனை புரிய வேண்டும் எனும் உத்வேகத்துடன் செயற்பட்டு கொண்டிருந்தார் இயக்குனர் ஏ சி திருலோகச்சந்தர்.

நடிகர் திலகத்திடம் பொதிந்திருக்கும் திறமைகளைத் தோண்டித் தோண்டி எடுப்பதில் வல்லவர் திருலோக் அவர்கள். "தெய்வமகன்" படத்தை முடிக்கும் முயற்சியில் இராப்பகலாக உழைத்துக் கொண்டிருந்த நேரம். சலிக்காமல் சிவாஜி அவர்கள் மூன்று வேடங்களில் ஒப்பனையை மாற்றி மாற்றி போட்டுக் கொண்டிருந்தார்.

கற்பனையில் தோன்றிய மூன்று கதாபாத்திரங்களை ஒரே பிரேமில் அடைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார் இயக்குனர் அவர்கள். இனி அவரே உங்களுடன் பேசுவார்...



சென்னை ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த பெரிய மனிதர்கள் சிவாஜியை காண வந்தார்கள். ஒரு தட்ட முடியாத வேண்டுகோள் விடுத்தனர். அவர்கள் சங்கத்தின் சார்பில் ஏழை புற்று நோயாளிகளுக்கு உதவும் வகையில் பணம் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். பலவித கலைநிகழ்ச்சிகளை ஒன்றுசேர்த்து அதன் நடுவே குங்குமப் பொட்டாக "வீரபாண்டிய கட்டபொம்மன்" நாடகத்தின் ஒரு அங்கத்தைக், காட்சியை சிவாஜி நடித்து மீண்டும் மேடை ஏற்ற வேண்டும். பல தடவைகள் வெவ்வேறு நிதி சேர்க்கும் அமைப்புகளுக்கு சிவாஜி நாடக மன்றம் வீரபாண்டிய கட்டபொம்மனை மேடையேற்றி வசூலித்ததையும் குறிப்பிட்டேயாகவேண்டும்.

சிவாஜி அவர்கள் விளம்பரம் இல்லாமல் செய்து வந்த உதவிகளில் இதுவும் ஒன்றாகும். கட்டபொம்மன் நாடகம் நடத்தி எத்தனையோ ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. படமாக வெளிவந்து பாடமாகியும் விட்டது.

இன்று மீண்டும் கட்டபொம்மன்
ஒரு காட்சி!

சிவாஜி சவாலை ஏற்றுக் கொண்டார். ஆனால் அதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சி தான் என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

ஆயிரமாயிரம் முறை மேடையிலும் திரையிலும் முழங்கி, சுதந்திர உணர்ச்சியை, தமிழனின் தன்மானத்தை, உலகுக்கு விளக்கிய அந்த சிரஞ்சீவி வசனங்களை டைப் அடித்துக் கொண்டு வரச்சொல்லி திரும்பத் திரும்ப பலமுறை சொல்லிப் பார்த்து ஒத்திகை செய்தார். ஆங்கிலேயன் "பானர்மென்" ஆக நடிக்க எங்களது இனிய நண்பரான வி கோபாலகிரு'ணன் ஒப்புக் கொண்டிருந்தார். அவரைப் படப்பிடிப்பு அரங்கிற்கு அழைத்துத் திரும்பத் திரும்ப பயிற்சி செய்தார் சிவாஜி.



திரு கோபி கிடைக்காத போதெல்லாம் மதிய நேரத்தில் வசனங்களை வாங்கிக்கொண்டு நான் பானர் மேன் ஆவேன். இவ்வளவு பெரிய வித்தகருக்கு இவ்வளவு முயற்சி தேவையா? பதில் அவருக்குத்தான் தெரியும்!

அந்த நாளும் வந்தது.



இவரது நிகழ்ச்சிக்கு முன் திருமதி பத்மினி - ராகினி குழுவினரின் சிறு நாட்டிய நிகழ்ச்சி நடந்தது. மக்கள் பொறுமை இழந்து கைதட்டினார்கள். அவர்கள் சிங்கத்தைக் காண அங்கு காத்திருந்தார்கள்.

"ராஜசிம்மத்துக்காக" காணிக்கை நினைத்ததற்கு மேலேயே கொடுத்திருந்தார்கள்.

சங்கிலியால் பிணைக்கப்பட்டு? ஆறு வீரர்கள் சங்கிலியைப் பிடித்து வந்து கட்டபொம்மனை, பானர்மென் முன் நிறுத்தி வாதாடும் முக்கிய கட்டம் மீண்டும் அரங்கேறியது. சங்கிலிப் பிணைப்பு சிதர சீறிப் பாய்ந்தார் வீரபாண்டியன்.

சீறிய இடியுடனும், மின்னலுடனும் வசன மழை பொழிந்தது. வீரம் மீண்டும் அந்த சபையில் உயிர்ப்பித்தது. அவர் உடலின் ஒவ்வொரு பாகமும் துடித்தெழுந்து ஆர்ப்பரித்தது. புயல் காற்றில் பொங்குமாக் கடலாக அவர் தோற்றமளித்தார்.

நிகழ்ச்சி முடிந்து பல வினாடிகள் கடந்துதான் மக்கள் நடந்து முடிந்ததை உணர்ந்தார்கள். இருக்கையிலிருந்து எழுந்து நின்று வெகுநேரம் கரகோ'ம் செய்தபடி இருந்தனர். அவர்களால் கண்களையும் காதுகளையும் நம்ப முடியவில்லை.

மீண்டும் பூகம்பமா! இந்த அற்புதம் நடந்த போது அவருடன் நான் அங்கு இருந்தேன்.

ஒப்பனை அறைக்கு வந்தவர் வாயை திறக்கவில்லை. அவசர அவசரமாக உடை அலங்காரங்களைக் களைந்து வெண் கதருக்குள் புகுந்தார். பெரிய மனிதர்கள் அறைக்குள் படையெடுத்து அவரை மேடைக்கு அழைத்தனர். நடந்த அற்புதத்தை வியந்து கூறிப்போற்றினார்கள்.

ஆனால், சிவாஜி வாயை திறக்கவில்லை. இரு கை கூப்பி வணக்கம் தெரிவித்துவிட்டு என்னை இழுத்துக்கொண்டு வந்து வண்டியில் ஏறி அமர்ந்தார். மீண்டும் படப்பிடிப்புக்கு செல்ல வேண்டும். அவர் நடந்து கொண்ட விதம் எனக்கு சற்று வித்தியாசமாகவிருந்தது, உறுத்தலாகவும் கூட, "கொஞ்ச நேரம் தங்கி ஆவலோடு பேச வந்த பெரியவர்களிடம் இரண்டு வார்த்தை பேசியிருந்தால் என்ன?" என்று நேரிலேயே கேட்டு விட்டேன்.

அதுவரை தும்பைப் பூ போன்ற வெள்ளை கதர் துண்டால் வாயை போர்த்தி இருந்தவர், துண்டை வாயிலிருந்து எடுத்து எனக்குப் பிரித்துக் காட்டினார். வெள்ளைத் துண்டு கட்டுக்கட்டாக சிவப்பாக மாறி இருந்தது. வாயிலிருந்து உதடுகளிடையே ரத்தம் தோன்றி வழிய ஆரம்பித்தது.

"என்னை இந்த நிலையில் பெரியவர்கள் பார்த்திருந்தால் "காசநோய்க்காரன்" என்று சொல்லி ஆம்புலன்சில் போட்டு ஆஸ்பத்திரி கொண்டு போயிருப்பார்கள். என் இந்த நடத்தைக்கு அவர்களிடம் பிறகு போன் மூலம் மன்னிப்பு கேட்டுக் கொள்வேன்" என்றார்.

சாதாரணமாக கட்டபொம்மன் முழு நாடகத்தையும் பார்க்கும் மக்கள் உணர்ச்சிப் படிகளில் அடி அடியாக ஏறி உச்சத்துக்கு வந்திருப்பார்கள். பானர் மேனோடு வாதாடும் அந்த மிக முக்கிய காட்சியை சிறப்பாக ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் இன்று அவர்கள் முன் நிறுத்த போவது எந்த விதமான உந்துதலும், அஸ்திவாரமும் இல்லாமல் ஒரே ஒரு சிறப்பு உச்சகட்ட காட்சியைத்தான். அந்த ஒரு காட்சியில் முழு நாடகத்தையும் அவர்கள் முன் கொண்டுவந்து நிறுத்த வேண்டும். உணர வைக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் என்னுடைய லிமிட்டையும் தாண்டி விட்டேன். என் வாயில் உப்புக்கரித்தும், தொண்டையிலிருந்து சிறு இரத்த நாளங்கள் அறுபட்டு விட்டன. இரத்தம் தெறிக்கிறது என்பதை உணர்ந்தேன். இதற்கு முன் சில சமயங்களில் அதிக

(தொடர்ச்சி 25ம் பக்கம்)



Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25
வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

# இவ்வார ராசிபலன்

**14-05-2021 வெள்ளி தொடக்கம் 20-05-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** வம்பு தும்புகள் ஒழிந்து வரவுகள் அதிகரிக்கக்கூடிய வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழி-யில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** புதிய வாய்ப்புகளால் பெரிய சிறப்புக்கள் சேரக்கூடிய வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணி-மணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நந்தா தேவி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** மகிழ்ச்சியான நிகழ்ச்சியும், மனம் எதிர்பார்த்த வளர்ச்சியும் கிடைக்கக்கூடிய வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டமாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: புட்டுச் சொக்கநாதர், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** பழக்கமான நண்பர்களால் கலக்கமான சூழ்நிலைகள் விலகும் வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வே-றுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வெக்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** நண்பர்களால் பணவரவும், சொந்தங்களால் மனநி-றைவும் கிடைக்கக்கூடிய வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: திருமலைராயர், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**கன்னி:** விவேகமான செயல்பாடுகளால் வெற்றியை வளர்த்துக்கொள்ளக் கூடிய வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபே-சி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதிவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** சொல்வாக்கு மூலமாகவே செல்வாக்கு உயரக்கூடிய வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும்.உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். க‘டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். விவே-கமான நாள். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹரிஹராசுதன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** உழைப்பால் மதிப்பும் உங்களால் சிறப்பும் சேரக்கூடிய பொறுப்பானவாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமா-கும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சக்திபாலகன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M





**தனுசு:** இதயத்தில் உற்சாகமும், இல்லத்தில் சந்தோஷமும் இனிமையாய் மலரக்கூடிய அற்புதமான வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமா-கும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சந்தான லட்சுமிகணபதி, அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
‘ராஜயோகம்’
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**மகரம்:** கைமேல் காசும், கௌரவ வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அ-லைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெ-குமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: மணக்குழ பகவதிஅம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** சந்தோஷமான நிகழ்வும் சாதகமான சூழ்நிலையும் நிறைந்த வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச்சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தாய்முகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** பூமியால் லாபமும் புத்திர யோகமும் கிடைக்கக்கூடிய வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவி-னரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K

*(23ம் பக்கம் தொடர்ச்சி)*

## சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

உணர்ச்சி வசப்படும் போது இது ஏற்பட்டு இருக்கிறது. அதனால் தான் நடித்துவிட்டு யாரும் பார்க்கும் முன் ஓடி வந்து விட்டேன்” என்றார் சிவாஜி.

நடிப்புக்காகத் தன்னை வருத்திக் கொள்பவர் இவரைப் போல் யாரிருந்தார்! இவர் வாழும் காலத்தில் அல்ல.. அல்ல, அவர் வாழ்ந்த காலத்தில், நாமும் வாழ்ந்தோம், வாழ்கிறோம்! பெருமை யாருக்கு! அவருக்கே அர்ப்பணம்!

சிறந்த நடிகர் மட்டுமல்ல சிவாஜி ஐயா அவர்கள். சிறந்த பாடகர் - இசை ஞானம் கொண்டவரும் கூட என்று முன்பு குறிப்பிட்டிருந்தேன். அப்படிப்பட்ட பன்முகக் கலைஞரின் வெற்றிப் படங்களுக்கு இசையமைத்துப் புகழடைந்த இசைமேதை மெல்லிசை மன்னர் எம்எஸ் விஸ்வநாதன் அவர்கள் சிவாஜி பற்றி என்ன கூறி வைத்தார் என்று பார்ப்போம்.

அன்பிற்குரிய நடிகர் திலகம் திரு சிவாஜிகணேசன் அவர்களைப் பற்றிச் சொல்வது என்பது, கடல் நீரை அளப்பதற்கு ஒப்பாகும்.அவர் ஒரு சாதனை நாயகன் சரித்திர புரு‘ர் சகாப்த சிற்பி. அவரது புகழ்க் கோபுரத்தின் வலுவான தூண்கள் நான்கு. அதுதான் தொழில் பக்தி, கடின உழைப்பு, ஆழ்ந்த ஈடுபாடு, நேரந் தவறாமை.

திரைப்பட உலக கதாநாயகர்களில் அவ்ருக்கென்று ஒரு “தனித்துவம்“ உண்டு. உலகத்தின் பல நாட்டுக் கதாநாயகர்கள் சில கரெக்டர்களில்தான் நடித்தார்கள். ஆனால் சிவாஜி அவர்களோ பலதரப்பட்ட வித்தியாசமான பாத்திரங்களில் நடித்து, இதற்கு இதுதான் அளவுகோல் என முத்திரையிட்டுக் காட்டியவர். உலகிலேயே சிவாஜி ஒருவர்தான்.

அவர் நடித்த பல படங்களுக்கு இசையமைத்தவன் நான். அவரது சொந்தப் படங்களுக்கும் நிறையவே பணியாற்றியிருக்கிறேன். இசைத்துறையில் அவர் தலையி-டவே மாட்டார். பொறுப்பை மிகுந்த நம்பிக்கையோடு என்னிடம் ஒப்படைத்து விடுவார்.

ஒரு முறை சிவாஜி பிலிம்சுக்காக குறிப்பிட்ட ஒரு பாடல் காட்சிக்கு 21 நாட்கள் கம்போசிங் செய்தும் பாடல் சரியாக வரவில்லை. நிறைந்த வேலைப்பளுவிலும் சிவாஜி அங்கு வருவார். ”என்ன விசு! என்ன கவிஞரே! இன்னும் முடியவில்லையா”, என்று கேட்டார். உணர்ச்சி பொங்க நடித்துக் காட்டினார். கடைசியாக, ”நான் முட்டி மோதித் தவிக்க வேண்டும் எங்கே நிம்மதி!.. எங்கே நிம்மதி..! என்று அலற வேண்டும்!, என்று ஒரு உந்துதலைத் தந்தார். அதன்பிறகு அமைந்தது தான் இன்று வரை நமது நினைவில் நிற்கும் ”புதிய பறவை” பாடலும், பாடல் காட்சியும்.

ஒரு முறை டிஎம்எஸ் ஸை “ மாறுபட்ட ஸ்டைலில்“ பாட வைக்க வேண்டும் என்பதற்காக “சாந்தி“ படத்தில் தேரோட்டம் போன்ற ஒரு நீரோட்டமான பாடலை அமைத்தோம்.

அதுதான் “யார் அந்த நிலவு“ என்ற பாடல் சூட்டிங்கிற்குமான நாளும் வந்தது. சிவாஜி நடித்தாக வேண்டும். மூன்று மணி நேரமாக அவர் செட்டுக்கு வரவில்லை. பாடலைத் திரும்பத் திரும்பப் போட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிறார். காரணம், இசையமைத்தவர், எழுதியவர், பாடியவர் இவர்கள் மூவரும் மிகவும் வித்தியாசமாக சிறப்பாக செய்திருக்கிறார்கள். நான் அதை விடச் சிறப்பாக நடிக்க வேண்டுமே என்ற ஒரு வெறி! பொறுமையற்ற ஆரோக்கியமான தொழில் போட்டி! படத்தை பாருங்கள். சிகரெட்டை வாங்கி வைத்துக் கொண்டே நடிப்பின் சிகரத்தில் நிற்பார் சிவாஜி!

இப்படிப்பட்ட அற்புதக் கலைஞருக்கு நாம் இன்னும் சரி பாதி மரியாதை கூடச் செய்யவில்லையோ என்ற ஐயப்பாடு எனக்கு எழுகின்றது!

சொந்த நாடு இவரைச் சொந்தங் கொண்டாடி கௌரவிக்காத நிலையில் “பிரான்ஸ் அரசு“ இவருக்கு “செவாலியர் விருது“ வழங்கி நம்மையெல்லாம் வெட்கத்துடன் மகிழ்ச்சியடைய வைத்து விட்டது.

இயக்குனர்கள் திரு பீம்சிங், திரு கே சங்கர், திரு ஸ்ரீதர், திரு ஏ சி திருலோகசந்தர், திரு மாதவன் போன்றவர்களோடு சிவாஜியின் நவரசத்தில் நானும் பங்கு பெற்று இசையமைத்தேன் என்பதை மிகவும் பெருமையாக கருதுகிறேன்.

சிவாஜி அவர்கள் வித்தியாசமான பாடலுக்கு, வித்தியாசமாக நடித்து காட்சிகளுக்கு உயிர் ஊட்டியவர். விருதுகளுக்கு அப்பாற்பட்ட வித்தகர்! அவர் திறமைகளுக்கு எந்த விருதும் எடைக்கல் ஆகாது! அவரால் விருதுகளுக்கு தான் பெருமை!

*நினைவுகளும் காட்சிகளும் தொடரும்..*
*வீணை மைந்தன்.*

# பராசக்தி அருள் வாக்கு

• உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இருக்கிறதா? நீங்கள் கடவுளைப் பார்த்து அவருடன் பேச வேண்டுமா?
• உலகம் கொடுந் தொற்று கொரனாவில் அழிந்து கொண்டிருக்க தெற்வத்தின் அனுக்கிரஹம் வேண்டுமா?
• ஏன்? என்ன? எப்படி? இதற்கு காரணம் என்ன? உங்கள் கேள்விகளுக்குப் பதில் வேண்டுமா?
• தீராத நோய்களில் அவதிப்படுவதிலிருந்து வெளிப்பட வேண்டுமா?
• உங்கள் வாழ்வில் தீர்வையோ மாற்றத்தையோ எதிர் பார்த்துக் காத்துக் கொண்டு இருக்கிறீர்களா?

இந்தக் கேள்விகளுக்கு நீங்கள் ஆம் என்று பதிரலளித்திருந்தால் உங்கள் அழுகுரலை கேட்டு உங்கள் இன்னல்களை தீர்த்து வைக்க, உலகம் காத்த தேவி பராசக்தி வந்துவிட்டார்.

"தெய்வங்கள் கைலாசத்திலிருந்து தக்க சந்தர்ப்பத்தில் அவதாரங்களாக மனித குலத்தின் மேம்பாட்டிற்காகத் தோன்றுகின்றார்கள்."

ஸ்ரீலஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் ஜெகாத் குருமகா சந்நிதானம் அவர்கள் பரமசிவனதும் பராசக்தியினதும் அவதாரமாக பல கோடிக்கணக்கான சித்தர்களது தவப்பயன் காரணமாக பரமசிவம் உருவில் தோற்றம் பெற்று பூவுலகத்திற்கு வந்திருக்கின்றார். இவர் தேவிமீனாட்சியினது உயிர் நினைவினையும் அருணகிரி யோகீஸ்வராகவிருந்த பரமசிவனது உயிர் சக்தியினையும் தாங்கி மனித உருவில் நமக்குக் காணப்படுகின்றார்.



"தேவி பராசக்தியால் எதிர்காலத்தை மாற்ற முடியும், நிகழ்காலத்தையும் ஏன் கடந்த காலத்தையும் மாற்ற முடியும்"

தற்போது உலகம் முழுவதும் நடைபெறுகின்ற இக்காட்டான சூழ்நிலையில் மனித இனத்திற்கு உதவி புரிவதற்காகவும், ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் ஸ்ரீலஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் அவர்கள் தேவி மீனாட்சியை தன்னிற்குள் தாங்கி வந்து மக்களது சந்தேகங்களை அகற்றுவதுடன் அவர்களது கேள்விகளுக்குப் பதில் வழங்கல், ஆன்ம ஈடேற்றத்திற்கான யுக்திகள், நோய்களைக் குணமாக்குதல் மற்றும் ஆசி வழங்கல் ஆகிய பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கின்றார். இந்த ஆகாயப் பதிவுகளை அவதாரங்களினால் மட்டுமே வாசிக்க முடிகின்றது.

"இவ்வாறு தர்சனம், தருவதும் அருள் வாக்கு வழங்குவதுமான செயல் முறையானது ஆதி காலம்தொட்டு சக்தி வாய்ந்த நடவடிக்கையாக இந்து சமயத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது."

ஒன்லன் நிகழ்வுகள் மூலமாகப் பல்லாயிரக்கணக்கான மக்களது மனக்குறைகளை அவ்வப்போது தீர்த்து வைக்கின்றார். இவ்வாறு அருள் வாக்கு வழங்குவதன் மூலமாக பலரது வாழ்க்கையில் மாற்றம் நிகழ்ந்துள்ளதாகவும் அந்த மக்களே வெளியிட்டும் இருக்கின்றார்கள்.

• பலர் வேதனை துன்பம் போன்றவற்றில் இருந்து விடுதலை அடைகின்றனர்.
• கர்ம பந்தத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வாழ்க்கையில் திருப்பு முனையும் அடைகின்றனர்.
• பல்வேறுபட்ட பதில் தெரியாத சிக்கலான கேள்விகளுக்கு விடைகள் துல்லியமான பதில்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.
• வாழ்வை மேம்படுத்தவும் அவரவர் வாழ்க்கையின் இலக்கை அடையவும் விடை காண்கின்றனர்.
• மனித இனத்தினது இலட்சியமாக ஞானப் பாதையை நோக்கிப் பயணிப்பதற்கும் வழி பெற்றுச் செல்கின்றனர்.

அற்புதமான நிகழ்வு: புற்று நோயிலிருந்து விடுதலை!!!

மிக அண்மையில் பராசக்தியினது ஆசீர்வாதத்தினால் ஒரு ஆச்சரியமான நிகழ்வு நடந்திருக்கின்றது. பகவான் பரமசிவனது பக்தர் ஒருவர் பாரசக்தியிடம் ஆசீர்வாதம் கோட்டு, அது கிடைத்தும் இருக்கிறது. அவர் தனது உடலின் ஆரோக்கியத்திற்குப் பங்கமான புற்று நோயானது குணப்பட வேண்டும் என ஆசீர்வாதம் கேட்டு, அதுவும் கிடைத்திருக்கின்றது. அந்தப் பக்தரும் ஒரு மருத்துவரே. அவர் ஆசீர்வாதம் கிடைத்த பின்பு மருத்துவப் பரிசோனை செய்து பார்த்தபோது தெரியவந்திருக்கின்றது புற்றுநோயானது முற்றிலுமாக மறைந்துவிட்டதென்று. இதை அறிந்து தன் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்திருக்கின்றார்.

உங்களைப் பற்றிய ஆகாயப் பதிவுகளை நீங்கள் அறிந்து உங்களது வாழ்க்கையை மாற்றி அமைக்க வேண்டுமா? வாருங்கள் அருள்வாக்குப் பெறுவதற்கு. மேலும் விபரங்களை htt://www.youtube/com/user/LifeBlissFoundation எனும் இணையத் தளமூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீலஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் அவர்களது தாயார், குழந்தை வயிற்றில் இருக்கும்போது திருவண்ணாமலையில் இருந்த பூண்டி சுவாமிகளைச் சென்று தரிசித்திருக்கின்றார். அப்போது புண்டி சுவாமிகள்" எனது அப்பன் வந்து பிறப்பான்" என ஆசீர்வதித்திருக்கின்றார். திருவண்ணாமலையில் வதியும் ஞானிகள் பரமசிவனைத் தத்தமது தந்தையாகக் கருதுவது வழமையாக இருந்துவருகின்றது.

பின்பு. ஸ்ரீலஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் அவர்களது பாட்டிகளான அனுசுயா அம்மாவும், விபுலானந்தபுரியுமாக குழந்தையை பூண்டி சுவாமிகளிடம் அழைத்துச் சென்றிருக்கின்றார்கள். அப்போது பூண்டி சுவாமிகள் குழந்தையைத் தனது மடியில் வைத்து பூஜைப் பொருட்களான பழங்கள், பூக்கள் என்பவற்றை வழங்கியதுடன் புனித அருணாச்சல மலையைச் சுட்டிக்காட்டி "அப்பன் வந்திருக்கிறான்" என்று கூறியிருக்கிறார். பின்பு குழந்தையை மடியில் வைத்து மரபுரீதியாக பாத பூஜையும் செய்திருக்கின்றார்.

இந்து சமயத்தில், அவதாரத்தினது மூளையின் நரம்பியலின் அதியுயர் சக்தியுணர்வை சாதாரண மக்களுக்குப் பிரதிபலிக்க செய்கின்ற ஒரு செயற்பாடானது (Bava samathi) சக்தி வாய்ந்த நடவடிக்கையாக பண்டையகாலத்தில் வழக்கத்தில் இருந்திருக்கிறது.

ஸ்ரீலஸ்ரீ பகவான் நித்தியானந்த பரமசிவம் அவர்கள் நிஜ அவதாரமாக தேவி பராசக்தியினது பல்வேறு பரிமாணங்களையும், தேவியியினுடைய மங்களகரமான அம்சங்களையும், அந்தப் பரிமாணங்களின் மூலமாக சக்தி வெளிப்பாட்டினையும் எம்மேல் வெளிப்படுத்தி, எமது உணர்வினை உயிர்ப்பிக்க முடியும். இதன்காரணமாக அசாதராண சக்தி வெளிப்பாட்டிற்கான உணர்வானது எங்களில் உயிர்ப்பிக்கப்படுகின்றன. இவ்வாறான அவதாரங்களினால்தான் பிரபஞ்சத்தின் ஆகாயப் பதிவுகளை வாசிக்க முடிகிறது. இந்த ஆகாசப் பதிவுகளில் பல தீர்வுகளை நாம் பெற்றுக்கொள்ளலாம். இந்த ஆகாச் பதிவுகளில் இருந்து பல்வேறுபட்ட பதில் தெரியாத சிக்கலான கேள்விகளுக்கு விடைகள் துல்லியமான பதில்களைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆகாயப் பதிவுகள் என்பன பிரபஞ்ச அண்ட வெளியில் பதிவாகின்றன. இவற்றை பகவான் பரமசிவம் அவர்கள் வாசித்து எமக்கு விளங்குகின்ற மொ-ழியில், எமது புரிந்துணர்வுக்கு எட்டத்தக்க வகையில் தெரியப்படுத்துகின்றார். இவை எமது இவ்வுலக வாழ்வை மேம்படுத்தவும், அவரவர் வாழ்க்கையின் இலக்கை அடையவும் வழிவகுப்பதுடன் மனத இனத்தினது இலட்சியமாக ஞானப் பாதையை நோக்கிப் பயணிப்பதற்கும் வழிவகுக்கின்றது. தற்போது ஸ்ரீலஸ்ரீ பகவான் நித்தியானந்த பரமசிவம் ஜெகத் குரு மகாசந்நிதானம் அவர்கள் தனது உடலில் பராசத்தியை தாங்கி ஆகாயப் பதிவுகளை வாசிக்கின்றார். கேள்விகளுக்கு ஆவலாக விடைதேடுகின்றவர்களுக்கு தீர்வுகள் கொடுக்கின்றார். இதன்மூலமாக பலர் வேதனை, துன்பம் போன்றவற்றில் இருந்து விடுதலையடைவது மட்டுமல்ல, பிராயச்சித்தத்திற்கான வழிமுறைகளும் வழங்கப்படுகின்றன. ஒரு நபருக்குப் பராசக்தியால் கொடுக்கப்படுகின்ற பதிலா-னது தனியே பதில் மட்டுமல்லாது, அது கர்ம பத்தத்திலிருந்து விடுதலையடைவதுடன் வாழ்க்கையில் திருப்புமுனையாகவும் அமைகிறது.





உங்களைப் பற்றிய ஆகாயப் பதிவுகளை நீங்கள் அறிந்துகொள்வதனால் உங்களுடைய பதிவுகளை மாற்றி அமைத்தல். திருத்துதல், திரும்பவும் புதிதாகப் பதிவு செய்தல் என்பவற்றை செய்வது மட்டுமல்ல உங்களுடைய எதிர்காலத்தை மட்டுமல்லாது கடந்த காலத்தையும் முற்றாக மாற்றலாம். மாற்றி அமைப்பதன் மூலமாக உங்கள் வாழ்வின் அடுத்த கட்டத்தை உங்களால் அமைக்க முடியும்.

தேவி பராசக்தியினால் எதிர்காலத்தை மாற்ற முடியும், நிகழ்காலத்தையும் ஏன் கடந்த காலத்தையும் மாற்ற முடியும். பராசக்தியினால் நடாத்தப்படுகின்ற இவ்வாறன நிகழ்வுகள் நடைபெறுகின்றபோது அமர்ந்திருக்கும்போது உங்களுடைய உள்ளுணர்வானது காலம், வெளி என்பவற்றைக் கடந்து இவற்றிற்கு அப்பால் உயர்த்தப்பட்டு விபரிக்கப்பட முடியாதளவிற்கு மங்களகரமான தன்மைகளை அடைகின்றது. இது நோய் குணமாவது மட்டுமல்ல. அதைத்தாண்டி பல்வேறு விதமாக பராசக்தியினது சக்தி வெளிப்பாடும் நடைபெறுகின்றது.

பஞ்சபூத யோகத்தைச் செய்வதுடன், பராசக்தி ஆகாயப் பதிவுகளை வாசிக்கும்போது, உங்களுக்கு ஆசீர்வாதமும் வழங்குகின்றார். நீங்கள் உங்களது பிரார்த்தனைகளைப் பூர்த்தி செய்யும்படி கேட்கும்போது பஞ்சபூத யோகாவானது உங்களை பராசக்தியினது சக்தியை பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் தயார்படுத்துகின்றது.

பஞ்சபூத யோகா என்பது என்ன?

• களிமண்ணை உடலில் பூசி, வேறு எந்த கெமிக்கலையும் பூசாது குளித்தல்
• தண்ணீரை மட்டும் குடித்தல். பராசக்தியின் ஆகாயப் பதிவு சிகழ்வு வரும்போது, ஏதும் உணவு உண்ணாமல் தண்ணீரை மட்டும் குடித்துக்கொண்டு வயிற்றினை வெறுமையாக வைத்துக்கொண்டு நிகழ்வில் பங்கெடுத்தல்
• உங்களது வயிற்றில் இருக்கும் ஜடராக்கினியானது தனது பணியை சரியாகச் செய்வதற்கு எந்த உணவும் வயிற்றிற்குள் நிரப்பாது இருத்தல் சிறந்தது. அத்துடன் "ஓம்கார" அல்லது "ஓம் நித்தியானந்த பரமசிவோகம்" என்ற மகாவாக்கியத்தை தொடர்ந்து ஜெபித்தல் வேண்டும்.
• வயிற்றினைக் காலியாகவும் வெற்றிடமாகவும் வைத்திருந்து முழு ஆகாயத்தையும் சுவாசித்தல்
• பராசக்தியின் நிகழ்விற்குச் சில மணித்தியாலங்களுக்கு முன்பாக, ஆகாச சக்தியை உள்வாங்குவதற்காக நினைவுகள் அற்ற நிலையில் இருந்து தியானத்தல். (unclutch meditation)

இவ்வாறான ஆகாயப் பதிவுகள் சமபந்தமான அறிவியலை உலகம் ஏற்கனவே அனுபவித்திருக்கின்றது. உலகில் தோன்றிய வியாசர், ராமபிரான், கிருஷ்ணா போன்ற மிகப் பெரும் அவதாரங்கள் ஆகாயப் பதிவு அறிவியலை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். கிருஷ்ணருக்குப் பின்பு கிட்டத்தட்ட 7000 வருடங்களுக்குப் பின்பு ஜெகத்துகுரு நித்தியானந்த பரமசிவம் மகாசன்னிதானம் அவர்கள்தான் ஆகாயப் பதிவுகளை வெளிப்படுத்துகின்றார்.

இந்தியாவில் நீண்டகால ஆங்கிலேயே ஆட்சியின் காரணமாக, இந்து சமயத்தில் காலம்காலமாக கடைப்பிடித்து வந்த நெறிமுறைகளை, அவற்றின் பெறுமதியைப் புரிந்து கொள்ளாமல் மூடநம்பிக்கை என்று முத்திரை குத்தி இந்து சமயத்தின் ஆணிவேரை அழிப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. மகாராஷ்டிரா, கர்நாடகா போன்ற பகுதிகளில் நேரடியாகவே இந்து மதம் துரதிஷ்டவசமாக தாக்கப்படுகின்றது. அத்தோடு இந்துக்கள் கூட இவையெல்லாம் மூடநம்பிக்கைகள் என்று நம்பத் தொடங்கியுள்ளார்கள். அத்துடன் நாளாந்தம் இந்துக்கள் கடைப்பிடிக்கின்ற பயிற்சி முறைகளை மிகுந்த வேகத்தில் தடைசெய்யப்பட்டுவருகின்றன. கர்நாடகா, மகாராஷ்ரா மட்டுமல்லாது ஏனைய பகுதிகளிலும் இந்து மதத்திற்கு எதிரான சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. அத்துடன் இந்து மதப் பயிற்சி நெறிகள் தடை செய்யப்படுகின்றன, பின்பற்றுவோர் கொலையும் செய்யப்படுகின்றனர்.

இந்த நிலை தொடர்ந்து கொண்டிருக்கின்ற இந்தவேளையில் -ஸ்ரீலஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் மகாசந்நிதானம் அவர்கள் ஆதிகாலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட இந்துமத அறிவியலை மனித குலத்தின் மேம்பாட்டிற்காக தொடர்ந்து புனரமைத்துக் கொண்டிருக்கின்றார். மனிதகுலமானது நிம்மதியாக வாழவேண்டுமானால், எதிர்காலச் சந்ததி பாதுகாக்கப்பட வேண்டுமானல் இந்து மத அறிவியலானது பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காவே கைலாய தேசம் நிறுவப்பட்டிருக்கிறது.

மனித குல மேன்மைக்காக தற்போது அருள்வாக்கு நித்தியானந்தம் பரமசிவம் மகாசந்நிதானம் அவர்களினால் வழங்கப்படுகின்றது. இது (www. youtube.com/LifeBlissFoundation, www.nithyannda,tv, httts:/twtter.com/srinithyananda, face book.kailasa's sph Nithyananda paramashivam) ஆகிய ஒன்லைன் நிகழ்வுகள் மூலமாக செயற்படுகின்றன. இந்த ஊடகங்களில் மக்கள் தமது கேள்விகளை கேட்கின்றார்கள். தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தற்போது தங்கள் சந்தேகங்கள், தமது தொழில், குழந்தைகள், தமது எதிர்காலம், சம்பந்தான தனிப்பட்ட கேள்விகள், மற்றும் மனித குல மேன்மைக்காக பொதுவன கேள்விகள் என்பனவும் கேட்கப்படுகின்றன. இவ்வாறான கேள்விகளுக்குப் பதில்கள் மட்டுமல்லாது ஆசிகளும் வழங்கப்பட்டுவருகின்றன.


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல் | All Pain & Aches, Arthritis Asthma, Sinusitis, Rhinitis Allergies Stress, Migraine & All Types of Headaches Diabetes, Gastric Pain, Ulcer Menstruation Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

## 30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

### ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

*SUMMER SPECIAL* கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...



உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.









காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

# SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8

Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)







25 வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்




உதயம் 1310 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 14, 2021

## சர்வதேச தகுதி வாய்ந்த மருத்துவர்கள் பலர் கனடாவில் உள்ள நிலையில் அவர்களை கனடா ஏற்றுக்கொள்ளதாதது ஏன்?

ஒன்ராறியோ மாகாணத்தில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களின் பற்றாக்குறையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு வழிகள் பல உள்ளன. ஆனால் மருத்துவ சங்கங்கள் அதில் ஈடுபாடு காட்டவில்லை என ரொரன்ரோ , ரைர்சன் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ஒருவர்தெரிவித்துள்ளார். “இங்குள்ள மருத்துவமனைகள் ஏன் ஏற்கனவே நம் மத்தியில் உள்ள சர்வதேச பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான மருத்துவர்களை அழைக்க மறுக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளன” என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

*(உள்ளே தொடர்ச்சி 5ம் பக்கத்தில்)*

## ஒன்ராறியோவின் அதி முக்கியமான போக்குவரத்துத் திட்டங்களுக்கு பல பில்லியன் டாலர்களை வழங்க கனடிய மத்திய அரசு சம்மதம்





ஒன்ராறியோ மாகாணத்தின் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய போக்குவரத்துத் திட்டங்களுக்கு பல பில்லியன டாலர்களை வழங்க கனடிய மத்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பு தெரிந்த வட்டாரங்களின்படி, இந்த அறிவிப்ப மதியம் 1 மணிக்கு திட்டமிடப்பட்டுள்ளது. இன்று செவ்வாய்கிழமை கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் ஒன்ராறியோ மாகாணத்தின் போக்குவரத்து விரிவாக்க திட்டத்தின் செலவில் 40 சதவீதத்தை பொறுப்பேற்றபதாக அறிவித்துள்ளார் இந்த அறிவிப்பு பகிரங்கமாக அறிவிக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

*(உள்ளே தொடர்ச்சி 5ம் பக்கத்தில்)*

## அன்னையர் தினத்தில் நான்கு பெண்மணிகளைக் கௌரவித்த கனடாவின் "விழித்தெழு பெண்ணே" மகளிர் அமைப்பு







கடந்த 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உலகெங்கும் கொண்டாடப்பெற்ற “அன்னையர் தினத்தில்- **(MOTHERS' DAY CELEBRATIONS )** கனடாவில் இயங்கிவரும் விழித்தெழு பெண்ணே அமைப்பு சமூக நோக்கத்தோடு செயற்பட்டு வரும் பெண்மணிகளை சிறப்பாகக் கௌரவித்து இந்த நோய்த்தொற்று கால சுகாதாரக் கட்டுப்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரவர் இல்லங்களுக்குச் சென்று மேற்படி அன்னையரை கௌரவித்தார்கள் இந்த அமைப்பின் அங்கத்தவர்கள். இந்த வரிசையில், விழித்தெழு பெண்ணே“ அமைப்பின் ஸ்தாபகரும் தலைவியுமான திருமதி சசிகலா நரேந்திரா மற்றும் ஸ்காபுறோ “ஏஞ்சல் பெசன்ஸ் உரிமையாளர் திருமதி சுஜாதா ஆகியோர் ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு அவர்களை கேடயம் மற்றும் அன்பளிப்புக்கள் வழங்கி அவரது இல்லத்தில் கௌரவத்தார்கள்..

இவரைத் தொடர்ந்து திருமதிகள் வசந்தாதேவி கோபாலபிள்ளை, கமலாம்பிகை சாந்தலிங்கம், ராஜி அரசரட்ணம் ஆகியோரை முறையே நிலா ரவீந்திரன், சஜி சங்கர் நல்லதம்பி, திருமதிகள் இந்துராணி, காஞ்சனா ஆகியோர் அவரவர் இல்லங்களுக்குச் சென்று கேடயங்கள் மற்றும் அன்பளிப்புக்கள் வழங்கி கௌரவித்தனர்.

இங்கு காணப்படும் படங்கள் நான்கு பெண்மணிகள் கௌரவிக்கப்பெற்றபோது தனித்தனியாக எடுக்கப்பெற்றவையாகும்.



## MPP for Ajax Mr. Rod Phillips visits Yogi & Partners office in Scarborough



**The current MPP for Ajax Mr. Rod Phillips made a surprise visit to Yogi & Partners office located in Scarborough at Markham & Ellesmere Intersection.**

**Mr Yogi Thambipillai, the President of Yogi & Partners, when shared his views about MPP Rod Phillips visit, mentioned that Rod Phillips was very eager to know, how the Small Businesses are surviving during this pandemic. MPP Rod Phillips has been a very long time Friend of Mr. Yogi's Family, who live in Ajax.**




## தமிழின அழிப்பு அறிவியல் கிழமை சட்டமூலம் 104 உத்தியோகபூர்வமாக சட்டமாகியது



ஒன்ராறியோவின் ஆளுநர், மாண்புமிகு எலிசபெத் டவுட்ஸ்வெல் அவர்கள் கையெழுத்திட்டு உத்தியோகபூர்வமாக அரச ஒப்புதலை வழங்கி ஒன்ராறியோவில் தமிழின அழிப்பு அறிவியியல் கிழமையை அதிகாரபூர்வமாக்கினார்.

எனவே, சட்டமூலம் 104 தற்போது முதல் தமிழின அழிப்பு அறிவியல் கிழமை என்ற அரச ஒப்புதல் பெற்ற ஒரு நினைவேந்தல் மற்றும் விழிப்புணர்வு வாரமாக மாறியுள்ளது.

இது தமிழின அழிப்பினை நினைவுகூர்வதற்கான ஒரு குறியீட்டு வாரமாகும். இதன்படி, ஒவ்வோர் ஆண்டும் மே மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை தமிழின அழிப்பு தொடர்பான அறிவூட்டும் வாரமாக விளங்கும். மேற்படி வாரத்தில் ஒன்ராறியோ மக்கள் அனைவரும் தமிழின அழிப்புப் பற்றியும், உலகில் நடைபெற்ற ஏனைய இன அழிப்புகள் பற்றிய வரலாற்றினை அறிந்துகொள்ளவும், இன அழிப்புகள் பற்றிய விழிப்புணர்வைப் பெறவும் ஊக்குவிக்கப்படுவர்.

தமிழ் மக்கள் தொடர்ந்து அனுபவித்துவரும் பாதிப்புகளையும் உளவியல் தாக்கங்களையும் புரிந்துகொண்டு, தமிழின அழிப்பு நடைபெற்றுள்ளதை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்த முதல்வர் டக் ஃபோர்ட் அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக ஸ்காபரோ - றூஜ் பார்க. சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார்.